


# மகாவம்சம்

தரும்

# இலங்கைச் சரித்திரம்

கலாநிதி. க. குணராசா

2.101
காவ
L/PR.

ம் பதிப்பகம்
A, பிரவுன் வீதி,
டி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவம்சம்

## தரும்
## இலங்கைச் சரித்திரம்

கலாநித்' க. குணராசா

கமலம் பதிப்பகம்,
75/10A பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம்
- முதற்பதிப்பு : செப்ரெம்பர் 2003
- பதிப்புரிமை : திருமதி கமலா குணராசா
- அச்சுப்பதிப்பு : லங்கா புத்தகசாலை.
- வெளியீடு : கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்
- கணனி வடிவமைப்பு : இ. ஆத்மானந்தன்
- புகைப்படங்கள் : ஆசிரியர்
- விலை : 200/=

- THE HISTORY OF CEYLON (SRILANKA) THROUGH MAHAVAMSA
- Author : Dr. Kandiah Kunarasa,
  B.A.HONS (CEY) M.A., Ph.D., SLAS
  (Former, Registar, University of Jaffna)
  Divisional Secretary, Thellippallai.
- © Mrs. Kamala Kunarasa, B.A., (Cey)., Dip.in.Ed., SLPS I
- Published by : Kamalam Pathippakam, Jaffna.
- Printed by : Lanka Book Depot.
- Type Setting : R. Athmananthan
- Photograph : By The Author
- Price : Rs. 200/=

**விற்பனையாளர்கள்:**

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**

- பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- 309A 2/3 காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06.
- 340, செட்டித்தெரு, கொழும்பு - 11.
- லண்டன்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**

- காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
- F.L. 1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு - 12.


## உசாத்துணை நூல்கள்


1. MAHAVAMSA, The Great Chronicle of Ceylon, Translated into English by Wilhelm Geiger, Ph.D., Assisted by Mabel Haynes Bode, Ph.D., Addendum by G.C.Mendis, Ph.D., Published by the Ceylon Government Information Department, Colombo - 1950. (First Published, 1912, Reprinted 1934).
2. MAHAVANSA Part: I, The translation of the first part by George Turnour, With notes and Emendations by Mudalilyar L.C. Wijesinha, Published by Asian Educational Services, New Delhi, Madras - 2000. First published - 1837, reprinted - 1889.
3. CULAVAMSA Part I & Part II Being the more recent part of the Mahavamsa, Translated by Wilhelm Geiger, and from the German into English by C. Mabel Rickmers. First published in London 1929. Asia Educational Services, NEw Delhi - 1998.
4. MAHAVANSA, Translated from the original Pali into English, for the Government of Ceylon, by Mudeliyar L.C. Wijesinha, Part II Chap. 39 to 100, First published Colombo 1889. Asian Educational services, New Delhi - 2000.
5. THE DIPAVAMSA, An ancient Buddhist Historical Record, Translation into English by Hermann Oldenberg, First published Berlin - 1879. AES, New Delhi - 2001.
6. RAJAVALIYA, Translation into English by A.V. Suraweera, Ph.D., Vishva Lekha Publication, Ratmalana, Sri Lanka - 2000.


## ஏனைய நூல்கள்


1. A History of Ceylon, S.G. Perera, London - 1948.
2. Detugermunu, John M. Senaveratna, Colombo - 1946.
3. A Concise History of Ceylon, Prof. S.P. Paranavithane, Part I & II, Colombo - 1961.
4. Ancient Ceylon, H. Parker, London - 1909.
5. ஈழ வரலாற்று நூல்கள், பேராசிரியர் ச. பத்மநாதன், இளங்கதிர், பேராதனை.
6. இலங்கையில் தமிழ் மன்னர்களின் ஆட்சி. கலாநிதி. ச. புஸ்பரட்ணம், பொருளியல் - 3, அமரர் நா. கிருண்ணானந்தன் நினைவு மலர்.
7. ஈழத்து இந்து சமய வரலாறு, பாகம் I, பேராசிரியர் க. சிற்றம்பலம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளியீடு, 1996.
8. ஈழத்தவர் வரலாறு, கலாநிதி. க. குணராசா, பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு - 1996.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகாவம்சம் கூறுகின்ற இலங்கை வரலாற்றினை ஒருங்கே தொகுத்து, தனது விளக்கத்துடன் கலாநிதி.க. குணராசா இந்நூலை ஆக்கித் தந்துள்ளார். 'இலங்கைச் சரித்திரம்' குறித்து சுருக்கமும் விளக்கமும் நிறைந்த ஒரு நூலின் தேவை உணரப்பட்டதால், இந்நூல் வெளியிடப்படுகின்றது. மகாவம்சம் விபரிக்கும் மூலக்கதைகளைக் கூறாது, மகாவம்சம் கூறும் இலங்கை வரலாற்றை விபரிக்கமுடியும். ஆனால், வரலாற்றின் உண்மைகளையும் பொய்மைகளையும் வாசகர் அறிந்து அளவிட அக்கதைகளைத் தவிர்ப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமாகாது. சிங்கள இனத்திற்கு அவமானம் தரும் சம்பவங்கள் எனக் கருதி இன்று பலர் சிலவற்றைத் தவிர்த்தும், புதுக்கியும் மகாவம்சத்தைத் திரித்து எழுதுகின்ற வேளையில், அவற்றினைத் தவிர்க்காது, இலங்கைச் சரித்திரத்தை இந்நூல் கூறுகிறது. ஏற்பதும் ஏற்காததும் வாசகரைப் பொறுத்தது. அது அவரவர் உரிமை. கற்றலும் புரிதலும் வெவ்வேறு அளவு கோள்களைக் கொண்டு அளவிட வேண்டியவை என்பதை இவ்விடத்தில் அழுத்திக்கூற விரும்புகின்றேன். கலாநிதி க.குணராசா தாம் கற்றவற்றை அவர் புரிந்து கொண்ட விதத்தில் தெளிவாக வாசகர்களோடு கலந்து பேசுகிறார்.

28.5.2003.

கமலம் பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

# 1. மகாவம்சம்

## 1.1. அட்டகதா - மகாவம்சம்

மகாவிகாரைப் பிக்குகள் சேகரித்த மரபுவழிக் கதைகள், தகவல்கள்


இலங்கை வரலாற்றினைச் சிலவிடத்து நம்பகத் தன்மையோடும் பலவிடத்து நம்பகமற்றதாயும் விபரிக்கின்ற வரலாற்று நூல் ஆவணங்களில் முதன்மையானது மகாவம்சம் ஆகும். பாளி மொழியில் செய்யுள் வடிவில் பாடப்பட்ட மகாவம்சம், இலங்கைக்குப் பௌத்த சமயம் வந்த வரலாற்றையும், இலங்கையை ஆட்சிபுரிந்த மன்னர்களின் வரலாற்றையும் விபரிக்கும் ஒரு கால ஏடாக விளங்குகிறது. இலங்கையில் பௌத்த மதம் பரவி நிலைபெற்ற காலத்தில், பௌத்த விகாரைகளில் குறிப்பாக மகாவிகாரையில் வாழ்ந்த பௌத்த பிக்குகள் சமய மரபுகளையும், மன்னர்கள் சம்பந்தமான வரலாற்றுக் கதைகளையும், அம்மன்னர்கள் குறிப்பாக பௌத்தத்திற்கு ஆற்றிய பணிகளையும் கட்டுவித்த நீர்ப்பாசனக் குளங்கள் பற்றிய தகவல்களையும் வாய்மொழி மூலமும், ஏடுகளில் எழுத்திலிட்டும் பேணி வரலாயினர். பிக்குகளால் காலாகாலமாகப் பேணப்பட்ட இவ்வாறான மரபுகள் ஊறிய வரலாற்றுச் செய்திகள் 'அட்டகதா' எனப் பட்டது. பல்வேறு விகாரைகளில் பேணப்பட்ட 'அட்டகதா'க்கள், ஒரு கட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு 'அட்டகதா - மகாவம்சம்' என அழைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன வரலாற்றுக் குறிப்பு களைக் கொண்ட கால ஏடுகள் தீபவம்சமும் மகாவம்சமும்

## 1.2 தீபவம்சம்

இலங்கையின் புராதன வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்ட கால ஏடுகளாகத் 'தீபவம்சம்' என்ற நூலையும், மகாவம்சம் என்ற நூலையும் கொள்ளலாம் என கெய்கர் என்பார் கருதுவார். (Geiger.W.1912) அவரது இந்த அனுமானத்தை ஆர்.ஓ.பிராங் (R.O.Frank) என்பார் மறுதலித்து, இவ்விரு நூல்களுக்கும் வேறு மூலம் இருக்க வேண்டும் என்பார். எவ்வாறாயினும் கெய்கர் கருதுவது போல, எமக்குக் கிடைத்திருக்கும் வரலாற்றுச் செய்திகளைக் கொண்ட புராதனநூல்கள் தீபவம்சமும், மகாவம்சமுமாம் எனக் கொள்ளலாம்.





இலங்காபுரி
ஆதி திராவிடர்களின்
குடியிருப்புகள்





கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவம்சம்

கி.பி.4ஆம் நூற்றாண்டளவில் 'தீபவம்சம்' எழுதப்பட்டிருக்க வேண்டுமென வரலாற்றாசிரியர் கருதுவர். விகாரைகளில் பேணப்பட்ட மரபுகளையும் வரலாற்றுச் செய்திகளையும் கொண்ட 'அட்டகதா - மகாவம்சம்' என்ற ஏட்டுப்பிரதிகளைத் தழுவியே 'தீபவம்சம்' எழுதப்பட்டது. தீபவம்சத்தின் ஆசிரியர் யாரென அறுதியிட்டுக் கூறமுடியாது. காலத்திற்குக் காலம் பல பிக்குகளால் எழுதப்பட்ட பனுவல்களை ஒருங்கிணைத்துத் 'தீபவம்சம்' முழுமை பெற்றிருக்க வேண்டும். இந்தியாவில் பௌத்த மதம் தோன்றிய வரலாறு, அது இலங்கையில் பரவி நிலைபெற்ற வரலாறு, விஜயனின் இலங்கைக்கான வருகையிலிருந்து மகாசேன மன்னனின் ஆட்சிக்காலம் வரையிலான வரலாறு தீபவம்சத்தில்




இலங்காபுரி
கி.மு. 5 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்ச - திக்கா வம்சத்தப்பாகாசினி

விபரிக்கப்பட்டுள்ளது. மகாவம்சம் போன்று தெளிவும் செம்மையாகப் பேணப்பட்ட செய்யுள் மரபும் தீபவம்சத்தில் காண முடியாது. ஜாதகக் கதைகளினதும், சாஸ்திரரீதியான தகவல்களினதும் தொகுப்பாக தீபவம்சமுள்ளது. நம்பகத்தன்மையற்ற செய்திகள் தீபவம்சத்தில் நிறையவேயுள்ளன.

கெய்கரின்படி 'அட்டகதா - மகாவம்சம்' என்ற மரபுவழித் தொகுப்பிலிருந்து, தொகுத்தவர் எவரென அறியமுடியாத 'வம்சத்தப்பாகாசினி (Vamsathappakasini) என்றொரு தொகுப்பிருந்துள்ளது. இத்தொகுப்பிலிருந்து 'மகாவம்ச - திக்கா' (Mahavamsa - Tika) என்றொரு தொகுதி உருவாக்கப்பட்டது. இந்த 'மகாவம்ச-திக்கா'வே தீபவம்சத்திற்கான மூலநூலாகும் என்பதாம். மகாசேனனின் வரலாற்றுடன் தீபவம்சம் முற்றுப் பெறுவதனால், இது கி.பி. நான்காம் நூற்றாண்டில் முழுமை பெற்றிருக்க வேண்டுமென நம்பலாம் (Geiger.W 1912)

## 1.3 மகாவம்சம்

தீபவம்சத்தின் திருத்தமான வடிவமே மகாவம்சம்.

தீபவம்சம் என்ற நூலின் மிகத் திருத்தமான வடிவமே மகாவம்சம் (Mahavamsa) என்ற பனுவலாகும். தீபவம்சத்தை ஏதோ ஒரு வகையில் மீள்ஒழுங்கு செய்ததே மகாவம்சம் ஆகும் என பிளீற் (Fleet) என்பார் கருதுவார். (Mendis.G.C. - 1950). பாளி மூலத்திலிருந்து மொழிபெயர்த்த கெய்கர் மகாவம்சம் (Mahavamsa) எனவும், பாளி மூலத்திலிருந்து அதனை மொழிபெயர்த்த ஜோர்ஜ்ரேனர் என்பார் மகாவங்சம் (Mahavansa) எனவும் குறிப்பிட்டுள்ளனர். மகாவம்சத்தின் மூல ஆசிரியர் மகாநாம தேரர் ஆவார். மகாநாமதேரர்தான் மகாவம்சத்தின் ஆசிரியர் எனக் கொள்ளக்கூடிய ஆதாரங்கள் இல்லை என வாதாடுவாருமுளர். தீபவம்சத்தைத் தழுவி புத்தகோசர் என்பார் சமந்த பாசாதிகா (Samantha pasadika) என்றொரு நூலை எழுதியுள்ளார்.

சமந்த பாசாதிகா

தீபவம்சத்தில் அடங்கியிருப்பதுபோல, 37 அத்தியாயங்கள் மகாவம்சத்தில் அடங்கியுள்ளன. 38 ஆம் அத்தியாயத்திலிருந்து 100 வரையிலான அத்தியாயங்கள் 'சூளவம்சம்' (Culavamsa) என்ற தொடர் நூலிலுள்ளன. பாளியிலிருந்து மொழிபெயர்த்த வில்லியம் கெய்கர், முதல் 37 அத்தியாயங்களையும் 'மகாவம்சம்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்





மூலத்தின் மொழிபெயர்ப்பு பாளியிலிருந்து ஜேர்மனிய மொழிக்கு.

துள்ளார். மீதி 100 வரையிலான அத்தியாயங்களை சூளவம்சம் தொகுதி 1, சூளவம்சம் தொகுதி 2 என மொழி பெயர்த்துள்ளார். வில்லியம் கெய்கரின் மொழிபெயர்ப்பு, பாளியிலிருந்து ஜேர்மன் மொழியிலேயே முதலில் மொழி பெயர்க்கப்பட்டது. பின்னர் மாபெல் ஹேனஸ் போட் (Marbel Haynes Bode) என்பாரின் உதவியுடன், கெய்கரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டு 1912 இல் நூலாக வெளிவந்தது. ஆனால், கெய்கரின் 'மகாவம்சம்' வெளிவருவதற்கு முன்னர் ஜோர்ஜ் ரேனர் (George Turnour) என்பவரால் மகாவம்சம் பாளி மூலத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டு 1837ல் 'மகாவங்சம்' என்ற பெயரோடு வெளியிடப்பட்டது. (Mahavansa - 1912). இவரின் நூல் பின்னர் முதலியார் எல்.சி. விஜயசிங்க என்பவரால் மீளாய்வு செய்யப்பட்டு 1889இல் மறுபதிப்பாக வெளிவந்துள்ளது. முதலியார் விஜயசிங்க, சூளவம்சம் கூறும் 38 தொட்டு 100 வரையிலான அத்தியாயங்களைத் தொகுத்து மொழி பெயர்த்து மகாவங்சம் தொகுதி - 2 என 1889 இல் வெளியிட்டுள்ளார். அவரின்படி 100 அத்தியாயங்களும் மகாவங்சம் என்ற பொதுப் பெயரினுள் அடங்கின.

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் மகாவம்சம் மகாநாம

© Dr. K. Kunarasa



**நயினாதீவு நாகவிகாரை:** நாக மன்னர்களான மகோதரன், குலோதரன் இருவரும் ஒரு சிம்மாசனத்திற்காகச் சண்டையிட்டனர். புத்தர் வருகைதந்து அந்த யுத்தத்தை நிறுத்தி அமர்ந்த இடத்தில் பின்னர் நாகவிகாரை கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாம தேரர் - தீகசந்த சேனாதிபதி பிரிவெனா.

தேரரால் எழுதப்பட்டது. இவர் தீகசந்த சேனாபதி - பிரிவினாவைச் சேர்ந்த பிக்கு ஆவார். தீபவம்சத்திலும் பார்க்க இலக்கிய நயம் மிக்கதாக மகாவம்சம் பாடப்பட்டுள்ளதென்பர். மகாவம்சத்தை முற்று முழுதாக இலங்கை வரலாற்றினைச் சரிவரக் கூறும் ஆதார நூலாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது: அதேபோல மகாவம்சத்தை முற்று முழுதாக அப்படியே தூக்கி வைத்துவிட்டு, இலங்கை வரலாற்றினை இனங்காணவும் முடியாது. மகாவம்சம் ஒரு புராணம்: இதிகாசம்: இலங்கை வரலாற்றினை ஓரளவு புரிந்து கொள்ள உதவும் வரலாற்று ஆவணம்.

# 2. புத்தரின் இலங்கை விஜயங்கள்

## 2.1 முதலாவது வருகை

மகாவம்சத்தின் முதலாவது அத்தியாயம் புத்தரின் இலங்கை விஜயங்களை விபரிக்கின்றது. மகததேசத்திலுள்ள உருவெல என்னும் இடத்திலுள்ள அரசமரத்தின் அடியில், வைகாசி மாதத்துப் பௌர்ணமி நாளில் கௌதம புத்தர் அமர்ந்திருந்தார். அவ்வேளை பௌத்த சமயம் பெரும் உத்வேகத்துடன் பெரு வளர்ச்சியடையக்கூடிய



**விஜயனதும் தோழர்களினதும் வருகை:** ஆரிய வருகையைக் குறிக்கும் குறியீடு விஜயனதும் அவனது தோழர்களினதும் வருகையாகும். கௌதம புத்தர் பரிநிர்வாணம் அடைந்த நாளில் (கி.மு.483) விஜயனின் இலங்கை வருகை நிகழ்ந்ததாக மகாவம்சம் கூறுகிறது. (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)





இயக்கர்களின் மகாநாகா தோட்டம்.

இடம் இலங்கை என்பதும் ஆனால் அங்கு ஏற்கனவே வசித்து வருகின்ற இயக்கர்களை அங்கிருந்து அகற்றிப் புனிதப்படுத்த வேண்டுமென்பதும் அவருக்குப் புலனாயின. அத்துடன், இலங்கையின் மத்தியில் (மகாவலிகங்கை) நதிக்கரையோரத்தில், மூன்று ஜோயனா நீளமும் ஒரு ஜோயனா அகலமுமான மகாநாகா தோட்டம் அமைந்துள்ளது. (ஒரு ஜோயனா - ஏறத்தாழ 10 மைல்). இந்த மகாநாகா தோட்டத்தில், தீவு எங்ஙனும் வாழ்கின்ற பிரதான இயக்கர்கள் குறித்த ஒரு நாளில் வந்து கூடுவது வழக்கம். அவர்கள் கூடியிருக்கும் வேளையில் மகாநாகா தோட்டத்திற்கு வருகைதரப் புத்தர் எண்ணினார்.

ஆதிக்குடிகள் இயக்கர்.

மகாவம்சத்தின் மேற்படி குறிப்புக்களிலிருந்து, இலங்கைத் தீவின் ஆதிக் குடிகள், இயக்கர்கள் எனும் மக்களாவர் என்பது புலனாகின்றது. கதம்பநதிக்கும் (அருவியாறு/மல்வத்து ஓயா) மகாகங்கையின் (மகாவலி கங்கை) கழிமுகத்தையும் இணைக்கும் கற்பனைக் கோட்டிற்குத் தெற்கே இயக்க மக்கள் அதிகளவில் வாழ்ந்திருந்தனர். பொன்பரிப்பு, தாமிரபரணி, திரிகூடம், அரித்தகிரி, யக்குர கலை, யக்குரை, நிகும்பிலா வனம், விந்தனை, மகியங்கணை, கதிர்காமம் முதலானவை முக்கியமான இயக்கக் குடியிருப்புக்களாக விளங்கியுள்ளன. குறிப்பாக சிறிஸ்தவத்து என்பது நகரப்பண்பு வாய்ந்த

**பசவக்குளம்:** மகாதூபிக்கு மேற்கே பசவக்குளம் அமைந்துள்ளது. இதனை அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பண்டுகாபயன் 2400 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டுவித்தான். இதனுடைய பழைய பெயர் இதனைக் கட்டுவித்த மன்னனின் நினைவாக அபயக்குளம் என வழங்கியது. (கி.மு. 377-கி.மு.307)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்பாக விளங்கியுள்ளது எனத் தெரியப்படுகின்றது.

புத்தர் தோற்றுவித்த சூறைக் காற்று.

மகாநாகா தோட்டத்தில் இயக்கர்கள் கூடியிருந்தபோது, அவர்களது சிரசுகளுக்கு மேல் பயங்கரமான சூறைக் காற்றினைப் புத்தர் அவ்விடத்தில் தோன்றித் தோற்றுவித்தார் என மகாவம்சம் கூறும். பயமும் வெருட்சியும் அடைந்த இயக்கர்கள் தங்களை இப்பயங்கரத் துயர்களிலிருந்து காக்குமாறு புத்தரிடம் வேண்டினார்கள். 'உங்களுடைய பயத்தை நான் போக்குகின்றேன். ஆனால், முதலில் நான் அமர்வதற்கு ஓரிடம் தாருங்கள்' என்றார் புத்தர். அதற்கு இயக்கர்கள் 'இலங்கை முழுவதையுமே உமக்குத் தருகின்றோம். எங்களை இந்தப் பயங்கரங்களிலிருந்து காப்பாற்றுங்கள்' என வேண்டினர். குளிரையும், இருளையும், சூறையையும் நீக்கிவிட்டு, அவ்விடத்தில் (மான்) தோலை விரித்து அதன்மீது புத்தர் அமர்ந்து கொண்டார். அவ்வேளை இயக்கர்களைச் சூழ்ந்து, எல்லைப்புறத்தில், அவர்கள் வெளியேற முடியாதவாறு தீ பரவி எழுந்தது.

கிரிதீபம்.

புத்தர் கிரிதீபத்தை அருகில் அழைத்து அதில் இயக்கர்களை அமர்த்தி, கிரிதீபத்தைப் பழைய இடத்திற்குத் திருப்பியனுப்பி வைத்தார் என மகாவம்சம் பெருமைப்படும்.

இயக்கர்கள் துரத்தப்பட்டனர்.

கிரிதீபம் என்பது உண்மையில் இலங்கையின் மலைநாடாகும். இயக்கர்களை மகாநாகா தோட்டத்திலிருந்து மலைநாட்டிற்கும் இலங்கையின் உட்பகுதிகளுக்கும் துரத்தி அகற்றப்பட்டனர் என்பதே பொருத்தமென கெய்கர் கூறுகிறார் (Geiger W - 1912). அவ்வாறன்று புத்தர், கிரி என்ற தீவை அழைத்து, அவர்களை அதில் இருக்கச் செய்து அகற்றினார் என ஜோர்ஜ் ரேனர் தனது மொழிபெயர்ப்பில் குறிப்பிடுவார் (Turnour.G. - 1839). இவ்வாறே தீபவம்சமும் குறிப்பிடுகிறதென மெண்டிஸ் வலியுறுத்துவார் (Mendis G.C. - 1950). எவ்வாறாயினும், இலங்கையின் பூர்வகுடிகளை இங்கிருந்து அகற்றுவதற்கான முதல் காரியத்தைக் கௌதம புத்தர் தொடக்கி வைத்தார்.

தேவர் வருகை.

மகாநாகா தோட்டம் மஹியங்கணையில் அமைந்திருந்தது. புத்தரின் வருகையால் அவ்விடத்திலிருந்த இயக்கர்கள் அகன்றதும், அங்கு 'தேவர்'கள் கூடினார்கள். சுமணகுத்த மலை (சிவனொளிபாதம்)யின் தேவர்களின் இளவரசனான





மகாசுமணன் தன் பரிவாரங்களுடன் புத்தரைப் பணிந்து, அவர் போதனைகளை உள்வாங்கி, பௌத்தனாகினான் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கோடிக்கணக்கான ஜீவராசிகள் புத்தரின் போதனைகளைச் செவிமடுத்ததாகவும் மகாவம்சம் குறிப்பிடுகிறது. புத்தர் தங்கிய இந்தப்பிரதேசத்தில் பின்னர் மகியங்கணை தூபி அமைக்கப்பட்டது.

யார் இந்தத் தேவர்கள்?

யார் இந்த தேவர்கள்? இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கர்களும் நாகர்களும் என்பதை நிறுவுவதற்கு நாம் வேறு ஆதாரங்கள் தேடி அலையவேண்டியதில்லை: போதியளவு ஆதாரங்கள் மகாவம்சத்திலேயே உள்ளன. வடமேற்கு ஆசியாவிலிருந்து இந்தியாவிற்குள் கைபர், போலன் போன்ற இமயமலைக் கணவாய் ஊடாக ஆரியர்களின் வருகை கி.மு. 2500 - கி.மு. 1500 க்கும் இடையில் நிகழ்ந்துவிட்டது. அதன் பின்னர் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் அலையலையாக ஆரியக் குடியேற்றங்கள் நிலவின. அதேபோல தென்னிந்தியப் பகுதிகளிலிருந்து புராதன காலந் தொட்டே திராவிட மக்கள் இலங்கையின் வட பாகங்களில் தமது குடியேற்றங்களை அமைத்துக்

© Dr. K. Kunarasa



**தேவநம்பியதீசன்:** சைவனாக விளங்கிய தேவநம்பியதீச மன்னன் இலங்கைக்கு பௌத்த மதத்தை வரவழைத்தான். மகிந்த தேரர், சங்கமித்தை தேரி ஆகியோரின் குழுவினருடன் பௌத்த மதமும் இலங்கைக்கு வந்து சேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியரின் இந்திய வருகை - திராவிடரின் தென்புலப் பெயர்வு.

கொண்டனர். திராவிட மக்களைத் தென்புலமாக நெருக்கி நகர வைத்த ஆரியர்கள், திராவிட மக்களைத் தஸ்யூக்கள் (அடிமைகள்) எனவும் அசுரர்கள் எனவும் அழைத்து அவமானப்படுத்திய தோடு, தம்மைத் 'தேவர்'கள் எனவும் குறிப்பிட்டுக் கொண்டனர். இலங்கை வரலாற்றில் மகாவம்சமும் பிந்திய வரலாற்றாசிரியர்களும் ஆரியருடைய வருகை, கி.மு. 483 இல் முதன்முதல் நிகழ்ந்த விஜயனின் வருகையோடு ஆரம்பித்ததென்பதில் பிடிவாதமான நம்பிக்கை கொண்டிருந்தமையால், விஜயனின் வருகைக்கு முதலே இலங்கையின் தென் பகுதிகளில் ஏற்பட்டிருந்த ஆரிய குடியேற்றங்களை மனதில் கொள்ளாது போயினர் எனத் துணியலாம். புத்தரிடம் மகியங்கனை மகாநாமா தோட்டத்தில், தேவர்களின் இளவரசன் மகாசுமணனின் தலைமையில் தேவர்கள் ஞானோபதேசம் பெற்றுப் பௌத்த ராகியதாக மகாவம்சம் குறிப்பிடும். எனவே 'தேவர்கள்' இவ்வாறு முதலில் குடியேறியிருந்த ஆரியராவார்கள் எனக்கொள்வதில் எதுவித தவறுமில்லை. மேலும், தேவநம் பியதீசனின் காலத்திற்கு முதலே, இலங்கையில் பௌத்த மதத்தில் ஈடுபாடுடையோர் இருந்துள்ளனரென்பதற்கு புத்த ரின் மகியங்கணைக்கான முதல் விஜயமே சான்றாகின்றது. தனது சிரசினுள் கையை விட்டுப் பிடுங்கிய ஒரு பிடி தலைமயிரை வாங்கிய (ஆரிய) தேவமகாசுமணன், அதனை அவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்து, மணிகளால் சிறிய தூபி ஒன்றினை வழிபாட்டிற்காக அமைத்தான் என

மகாசுமணன் அமைத்த தூபி.

© Dr. K. Kunarasa



**திசவாவி:**
திசவாவி அநுராதபுரத்தின் மிக முக்கியமான ஒரு குளம். மன்னன் தேவ நம்பியதீசனால் கி.மு.240 அளவில் இக்குளம் கட்டப் பட்டது. 450 ஏக்கர் பரப்ப ளவைக் கொண்டது.





மகாவம்சம் குறிப்பிடுகின்றது. ஆக, தேவநம்பியதீசனுக்கு (கி.மு. 247 - கி.மு 207) நான்கு நூற்றாண்டுகளுக்கு முதலே இலங்கையில் பௌத்த வழிபாடு, ஏனைய முதன்மை பெற்ற இந்து சமய வழிபாட்டுடன் நிலை பெற்றிருந்துள்ளது.

## 2.2 புத்தரின் இரண்டாவது விஜயம்

மகோதரன் - குலோதரன் நாகமன்னர்கள்.

கோசல நாட்டில் ஜேத்தவனம் என்னும் காவில் புத்தர் அமர்ந்திருந்தவேளை, ஓர் இரத்தினச் சிம்மாசனத்திற்காக மகோதரன், குலோதரன் என்ற இரு நாக மன்னர்கள் யுத்தமொன்றுக்குத் தயாராகுவதை உணர்ந்தார். இந்தவிரு நாக மன்னர்களும் மாமனும், மருமகனுமாவர். சமுத்திரத்தில் 500 ஜோஜனாக்கள் தூரம் பரந்துள்ள நாகவரசின் மன்னனான மகோதரன், தனது இளைய சகோதரியான கிடாபிகாவை, கந்தவட்டமான மலையின் நாகமன்னனுக்கு மணம் செய்து கொடுத்திருந்தான். குலோதரன் இந்த நாக மன்னனின் மகனாவான். குலோதரனின் தாயின் தந்தை, பாட்டன், இரத்தின சிம்மாசனம் ஒன்றினை தனது மகளான கிடாபிகாவிற்கு வழங்கிவிட்டு இறந்து போயினன். இந்த சிம்மாசனத்திற்கு உரிமை கோரி மாமனும் மருமகனும் தம் படைகளுடன் நாக தீபத்தில் யுத்தம் புரிவதற்காகத் தயார் நிலைப்பட்டனர். இந்த யுத்தத்தை நிறுத்தும் பொருட்டுப் புத்தர், நாகதீபத்திற்கு வருகை தந்தார். அவரோடு சாமித்துஸ் சுமணன் என்ற 'தேவனும்'

இரத்தின சிம்மாசனம்.

© Dr. K. Kunarasa

**திசவாவியின் இன்னோர் தோற்றம்:**
தாது சேனனால் (கி.பி. 459) கலாவாவியிலிருந்து இந்தத் திசவாவிக்கு 20 மைல்கள் நீளமான ஐயகங்கைக் கால்வாய் மூலம் நீர் வழங்கும் கால்வாய் அமைக் கப்பட்டுள்ளது. அரச நந்தவனம், இசுறுமுனியா சைத்தியம், வெசகிரி சைத்தியம் என்பனவற்றிற்கு இந்த வாவியே நீர் வழங்குகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜரத்ன மரம்.

ஜேந்தவனத்தில் நின்றிருந்த ராஜரத்ன மரம் ஒன்றுடன் வந்தான். அவன் அந்த ராஜரத்ன மரத்தை புத்தருக்குக் குடைபோல நிழல் தருமாறு பிடித்து வந்தான் என்கிறது மகாவம்சம். நாகதீபத்திற்கு வந்த புத்தர் தனது ஆற்றலால் முதலில் இருள் சூழவைத்து, பின்னர், அதனை விலக்கி ஒளி பரவச் செய்து, நாகமன்னர்களையும் அவர்களது சேனா வீரர்களையும் பயங்கொள்ள வைத்தார். புத்தரைத் தரிசித்த நாகமன்னர்கள், சர்ச்சைக்குரிய இரத்தின சிம்மாசனத்தைப் புத்தருக்கே அன்பளிப்புச் செய்து வணங்கிச் நின்றனர். அச்சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்ட புத்தர், நாகமன்னர்கள் வழங்கிய உணவை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் நிலப்பரப்பிலும் சமுத்திரப் பரப்பிலும் வாழ்ந்த எட்டுக்கோடி நாகர்களுக்கு புத்தம், தர்மம், சங்கம் எனும் மும்மணிகளைப் போதித்தார்.

கல்யாணி அரசின் நாகமன்னனும், மகோதரனின் மாமனுமாகிய மணியக்கியன் என்பானும் இந்த யுத்தத்தில் பங்கெடுக்க வந்திருந்தான். அவனும் புத்தரின் போதனை களை விரும்பி ஏற்றுக்கொண்டான். புத்தர் தன்னுடன் சாமித் துஸ் சுமணன் காவி வந்த ராஜரத்தின மரத்தை அவ்விடத் (வாழ்த்தி)தில் நாட்டி, ‘இது உங்களுக்குச் சகலசௌபாக்கி யங்களையும் தரும்’ எனக்கூறி இரத்தின சிம்மாசனத்தை யும் அவர்களிடம் கொடுத்து விட்டு ஜேத்தவனம் திரும்பினார்.

## 2.3 புத்தரின் மூன்றாவது விஜயம்

கல்யாணி நாகமன்னன் மணியக்கியன்.

நாகதீபத்திற்கான விஜயம் நிகழ்ந்த மூன்றாம் வருடம், புத்தர் நிலையை எய்திய எட்டாம் வருடம், கல்யாணி நாகமன்னன் மணியக்கியனின் வேண்டுதலை ஏற்று, ஐநூறு சக பிக்குகளுடன் புத்தர் கல்யாணிக்கு விஜயம் செய்தார். பின்னாளில் கல்யாணி சேத்தியம் அமையவுள்ள இடத்தில் விலைமதிப்பற்ற ஒரு சிம்மாசனத்தில் அமர்ந்தார். பின்னர் சமனகுத்தமலை(சிவனொளிபாதம்) க்குச் சென்று அங்கு தன்னிரு பாதங்களையும் பதிய வைத்தார். அதன் பின்னர், பின்னாளில் பௌத்த சைத்தியங்களாகவும், பௌத்த மையங்களாகவும் வரவிருக்கின்ற தீகவாவி, மகாமேகவனம், போதிமரம், மகாதூபி, தூபராமதூபி, சிலாசேத்தியம் என்பன அமையவிருக்குமிடங்கள்





ஆகியவற்றிற்கு வருகை தந்து, ஆசீர்வதித்து ஜேத்தவனம் திரும்பினார். இவ்வாறாக அசுரர் (இயக்கர்) நாகர், தேவர் (ஆரியர்) ஆகியோர் வாழ்ந்த இலங்கையை மும்முறை விஜயங்கள் மேற்கொண்டு, தனது மத நம்பிக்கைகள் நிலைபெறும் நாடாக்கினார் என மகாவம்சம் விபரித்துள்ளது.

## 2.4 நாகர்கள்

பண்டைக் குடிமக்கள்.

மகாவம்சம் கூறுகின்ற புத்தரின் இரண்டாம், மூன்றாம் இலங்கை விஜயங்களிலிருந்து, இலங்கையின் புராதன குடிகளில் நாகர் எனப்படுவோர் அடங்குகின்றனர். புத்தர் தனது முதல் விஜயத்தில் இயக்கர்களை மகியங்கனையி லிருந்து அகற்றியது போல, நாகர்களை அகற்றிவிடமுடிய வில்லை. இலங்கையின் வட பெரும் பகுதி, நாகதீபம் எனப் பெயர் பெறுவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் இப்பிரதே சத்தின் பண்டைக் குடிமக்களாக வாழ்ந்திருந்த நாகர்களேயாவர்.

நாகர்கள் பண்பாடுடைய கலாசாரத்தைப் பேணிய மக்கள் என்பதும், புத்தருடைய காலத்தில் இவர்கள் பௌத்தத்தைத் தழுவினர் என்பதும், மேலும் இவர்கள் இலங்கையின் வடபாகத்தில் மட்டுமன்றி தென்மேற்குப் பகுதியில் களனியா வரை (கல்யாணி) பரவி வாழ்ந்தனர் என்பதும் மகாவம்சத் திலிருந்து தெளிவாகிறது. கிடைக்கக்கூடிய இலக்கிய, பண்டைய தேசப்பட(தொலமி) ஆதாரங்களிலிருந்து

© Dr. K. Kunarasa



**மிகிந்தலை தூபி:** மிகிந்தலை தூபி அரித்தகிரி எனப்படும் மிகிந்தலைக் குன்றில் மகிந்ததேரர், தேவநம்பியதீசமன்னனை முதல்முதல் சந்தித்து உபதேசம் செய்தார். அவ்விடத்தில் தூபி அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பல பகுதிகளிலும் நாகர் குடியிருப்புக்கள் இருந்துள்ளன என அறியமுடிகிறது. தேவி நுவரை, நாகர் கோயில், திருக்கோயில் நனிகிரி, தென்கிழக்கில் நாகதுமை, மணிபல்லவம் (நயினாதீவு), மதவாச்சி (மகாவில்லாச்சி) ஐம்புக்கோளம் (காங்கேசன்துறை), வல்லி புரம், நாகர் கோயில், குருந்தன்குளம், மிகுந்தலை, நாக சதுக்கம், கதிரைமலை (கந்தரோடை), கரியாலை நாகபடு வான், மகாதீர்த்தம் (மாந்தை) முதலானவை நாகர் குடியிருப்புக்களாக விளங்கியுள்ளன. மேலும், புத்தரின் வருகையின்போது இலங்கையில் மூன்று தெளிவான நாகவரசுகளாக நாகதீபம், கந்தமாதனம், கல்யாணி என்பன விளங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிங்ஹல விஜயனின் வருகையுடன் தான் இலங்கைத் தீவில் மக்கள் குடியேற்றங்கள் ஆரம்பமாகின என்பதை வலியுறுத்துவதற் காக இத்தீவின் மூதாதையினரை சிங்கள வரலாற்றாசிரியர் கள் கவனத்திற் கொள்ளாது ஒதுக்கியுள்ளனர்.

© Dr. K. Kunarasa



மகிந்த தேரர்:
அசோக மன்னனால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பௌத்த தூதுக்குழுவின் தலைமைப்பிக்கு மகிந்ததேரர்.






# 3. பௌத்த மகாநாடுகள்

சித்தார்த்தர் கௌதமபுத்தர் கதை.

மகாவம்சத்தின் இரண்டாம் அத்தியாயம் மன்னன் மகாசம்மதாவின் பரம்பரையை விபரிக்கின்றது. உலகின் இந்த யுகத்தின் தொடக்கத்தில் வாழ்ந்திருந்த ஒரு மன்னன் மகாசம்மதா ஆவான். இப்பரம்பரையில் வந்துதித்த ஜயசேனாவின் மகள் யசோதரா ஆவாள். அவள் சக்கா அஞ்சனாவின் மனைவியாவாள். இவர்களுக்கு மாயா, பயாபதி என்றிரு பெண்பிள்ளைகளும், தண்டபாணி, சாக்கிய சுபபுத்தா என இரு ஆண்மக்களும் இருந்தனர். மாயாவும் பயாபதியும் சுத்தோதனன் என்ற மன்னனின் ராணிகளாவர். மன்னன் சுத்தோதனனுக்கும் ராணி மாயாவுக்கும் அவதரித்தவரே கௌதம புத்தராவார். அவ் வேளை அவரின் பெயர் சித்தார்த்தர். இவ்வரலாற்றினை மகாவம்சத்தின் இரண்டாம் அத்தியாயம் கூறுகிறது.

மகாவம்சத்தின் மூன்றாம், நான்காம், ஐந்தாம் அத்தியாயங்கள் மூன்று பௌத்த மகாசபைகள் (மாநாடுகள்) குறித்துப் பேசுகின்றன. முதலாவது பௌத்த மகாநாடு கௌதம புத்தர் நாற்பத்தி ஐந்தாவது வயதில், வைகாசி பௌர்ணமியில், பரிநிர்வாணம் அடைந்த ஓரிரு நாட்களின் பின்னர் கூட்டப்பட்டது. தேரர்கள் ஆனந்தர்,

© Dr. K. Kunarasa



புறாவஸ்து சுறணிமு சைத்தியம்:
மிகிந்தலை வீதியமைந்துள்ள புறாவஸ்து சுரணிமு சைத்தியம். இதுவும் மகாயான பௌத்தம் சார்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகாசிபர் உபாலி முதலானோர் இதில் கலந்து கொண்டனர். மகாகாசிபர் இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். அஜாதசத்ரு மன்னன் காலத்தில் முதலாவது பௌத்த மகாசபை கூடியது. முதலாவது பௌத்த மகா சபை மாநாட்டில் ஐந்நூறு பிக்குகள் கூடினர். இந்த மகா நாட்டில் புத்தரின் போதனைகள் ஆராயப்பட்டு அவை தர்மம், விநயம் என இரு பிரிவுகளாக் தொகுக்கப்பட்டன. விநயம் என்பது பௌத்த பிக்குகளின் ஒழுக்க நெறிகளாம். மேலும் இந்த முதலாவது பௌத்த மகாநாட்டிலேயே திரிபிடகம் எனப்படும் பௌத்த மத வேதம் தொகுக்கப்பட்டது.

தர்மம் விநயகம்.

இரண்டாவது பௌத்த மகாசபை (மகாநாடு) நூறு வருடங்களின் பின்னர் மகத மன்னன் காலாசோகன் காலத்தில் எழுநூறு பிக்குகள் கூடி நடாத்தினர். ரேவத தேரர் என்பார் தலைமை வகித்தார். இந்த மாநாட்டில் பௌத்த சங்கத்தில் முதன் முதல் பிரிவுகள் ஏற்பட்டன. தேரவாதப் பிரிவோடு மகாசாங்கிகப் பிரிவு தோன்றியது.

மகா சாங்கிகம்.

மூன்றாவது பௌத்த மகாநாடு அசோக மன்னன் காலத்தில் பாடலிபுரத்தில் கூடியது. உலக நாடுகளுக்குப் பௌத்த மதத் தூதுவரை அனுப்பும் முயற்சி அந்த மகாநாட்டிலேயே எடுக்கப்பட்டது. மகிந்த தேரர் இலங்கைக்கு பௌத்த மதத்தைப் பரப்புவதற்காக வந்தமை இந்த மகாநாட்டின் முடிவுப்படியாகும்.

பௌத்த மதத் தூது.

# 4. விஜயனின் வருகை

## 4.1 விஜயனின் பிறப்பு

மகாவம்சத்தின் ஆறாவது அத்தியாயத்தில் நமது நாட்டின் அரசியல் வரலாறு, விஜயனின் கதையுடன் ஆரம்பமாகின்றது. வங்க தேசத்தின் மன்னன் கலிங்க தேசத்து மன்னனின் மகளை மணந்திருந்தான். அவர்களுக்கு சுப்பாதேவி என்றொரு மகள் பிறந்தாள். அவளுடைய ஜாதகத்தைக் கணித்த சோதிடர், அவள் விலங்குகளின் மன்னனுடன் (சிங்கம்) உறவு கொள்வாள்





எனத் தெரிவித்தனர். சுப்பாதேவி மிக அழகுடையவளாக வளர்ந்தாள். ஒருநாள் மகத நாட்டை நோக்கிப் பயணப்பட்ட வணிகக் குழுவுடன் இணைந்து, அரண்மனை விட்டு வெளியேறிப் பயணப்பட்டாள். லாலா நாட்டின் காட்டினூடாக அந்த வணிகக்குழு பயணம் செய்து கொண்டிருக்கும் போது, ஒரு சிங்கம் அக்குழுவினரைத் தாக்கியது. சுப்பா தேவியைத் தவிர ஏனைய அனைவரும் அவ்விடத்தை விட்டு நாலா திக்குகளிலும் சிதறி ஓடினர். ஆனால், அவள் அச்சிங்கம் வந்த திசையை நோக்கி நடந்து சென்றாள்.

சோதிடர் கூற்று.

வேட்டையாடி இரையைத் தின்று பசியாறிய நிலையில் அச்சிங்கம் அவ்வேளை இருந்தது. அது அவளைக் கண்டதும் பிரிய மேலீட்டால் தன் வாலை அசைத்தபடியும், காதுகளைத் தாழ்த்தியபடியும் அவளை நோக்கி வந்தது. முன்னரே சோதிடர் கூறிய செய்தியை அவள் அறிந்திருந்தமையால், பயமின்றி அச்சிங்கத்தை நாடிச் சென்றாள்: அதன் கால் களைத் தடவிக் கொடுத்தாள். அவளுடைய ஸ்பரிசத்தால்

சிங்கமும் சுப்பாதேவியும்.

© Dr. K. Kunarasa



அரித்த தேரர்: தேவநம்பியதீசனின் தூதுவராக அசோக மன்னனைச் சந்தித்த நல்லெண்ணக்குழுவின் தலைவர் அமைச்சர் அரித்தன். முதன்முதல் இலங்கையில் பிக்குவாக அபிஷேகம் பெற்றவர் அரித்த தேரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மகிழ்ந்த சிங்கம், அவளைத் தன் முதுகில் அமர்த்தி, வேகமாகத் தன் குகைக்குக் காவிச் சென்றது. அங்கு அவளோடு உறவு கொண்டதால், ஓர் ஆணும் பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகளைச் சுப்பாதேவி பெற்றெடுத்தாள்.

சிங்கபாகு - சிங்கசீவிலி.

பிறந்த ஆண்மகனின் கைகளும் கால்களும் சிங்கத்தின் பாதங்கள் போன்றிருந்தன. அதனால், அவனுக்கு சிங்கபாகு எனப் பெயரிட்டு அழைத்தாள். மகளுக்குச் சிங்கசீவிலி எனப் பெயரிட்டாள். சிங்கபாகுவிற்குப் பதினாறு வயது நடந்து கொண்டிருந்தபோது, தாயிடம், 'தாயே, எமக்கும் எம் தந்தைக்குமிடையில் தோற்றத்தில் இவ்வாறான வேறு பாடுகள் ஏன்?' எனக் கேட்டான். அவள் சகல விபரங்களையும் மகனிடம் தெரிவித்தாள். 'நாங்கள் இங்கிருந்து ஏன் வெளியே செல்லமுடியாதுள்ளது?' என சிங்கபாகு கேட்க, 'இக்குகையின் வாயிலைப் பாறையொன்றினால் உன் தந்தை அடைத்து மூடியுள்ளார்' என்றாள் சுப்பாதேவி. சிங்கபாகு தன் தோளினால் குகை வாயிலை அடைத்துக் கிடந்த பாறையைத் தள்ளி அகற்றி, அதேநாளில் ஐம்பது ஜோஜனா தூரம் சென்று திரும்பிப் பழையபடி குகைக்குள் வந்தான்.

ஒருநாள் சிங்கம் இரை தேடச் சென்ற வேளையில், சிங்கபாகு தன்னொரு தோளில் தாயையும், மறுதோளில் சகோதரியையும் இருத்தி, குகைக்குவெளியே வந்து வேகமாகப் பயணப்பட்டான். அவர்கள் இலை குழைகளைத் தம் ஆடைகளாக அணிந்து கொண்டு, வங்க தேசத்தின்

© Dr. K. Kunarasa



மிகிந்தலை தூபி:
(கண்டகி சைத்தியம்)





அநுரா- சுப்பாதேவி திருமணம்.

எல்லைக் கிராமம் ஒன்றினை அடைந்தனர். அவ்வேளை வங்கதேச மன்னனது மருமகன் அனுரா, அவர்கள் சென்றடைந்த பிரதேசத்தின் ஆள்வோனாக நியமிக்கப் பட்டிருந்தான். அனுரா, இவர்களைக் காண நேர்ந்தது. எவரென விசாரித்தபோது, 'நாங்கள் காட்டுவாசிகள்' என்றனர். அனுரா, அவர்களுக்கு ஆடையணிகளை வழங்கச் செய்தான். அகன்ற இலைகளில் வழங்கப்பட்ட உணவை அவர்கள் வாங்கிக் கரங்களில் ஏந்தியபோது, அவ்விலைகள் தங்கத் தட்டுகளாக மாறிய அதிசயத்தை அவன் கண்டான். வியப்படைந்த அனுரா வினவியபோது, சுப்பாதேவி தன் வரலாற்றினைக் கூறினாள். அவள் தனது மாமன் மகள் என்பதைப் புரிந்து கொண்ட அனுரா, அவர்களை வங்கதேசத்தின் தலைநகருக்கு அழைத்துச் சென்று, சுப்பாதேவியைத் திருமணம் செய்துகொண்டான்.

குகைக்குத் திரும்பிவந்த சிங்கம், மனைவியையும் பிள்ளைகளையும் காணாது கவலையடைந்தது. உணவும் நீருமின்றி அவர்களைத் தேடி எல்லைப்புறக் கிராமங்களுள்

© Dr. K. Kunarasa



சங்கமித்தை தேரி:
வெள்ளரசுக் கிளையுடன்
ஐம்புக்கோளத்திலிறங்கி
வந்த சங்கமித்தை தேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தைக் கொல்பவன் பரிசுக்குரியவன்.

புகுந்தது. அக்கிராமங்களில் வாழ்ந்தோர் பயத்தினால் தமது இருப்பிடங்களைக் கைவிட்டுஓடி மன்னனிடம் முறையிட்டனர். 'சிங்கத்தைக் கொன்று மக்களின் துயரைப் போக்குபவர் களுக்கு மூவாயிரம் பொற்காசுகள் வழங்கப்படும்' என மன்னன் பறைசாற்றுவித்தான். சிங்கபாகு, சிங்கத்தைக் கொல்ல முன்வந்தவேளைகளில், தாய் சுப்பாதேவி அனுமதிக்கவில்லை. மூன்றாவது தடவை தாயின் அனுமதி யின்றியே, சிங்கபாகு சிங்கத்தை வதம் செய்யப் புறப்பட்டான். பரிசுப்பணம் மூவாயிரம் பொற்காசுகளும் யானை ஒன்றின்மீது வைக்கப்பட்டிருந்தன. அதனை சிங்கபாகு எடுத்தபோது, அவனை அரசனிடம் அழைத்துச் சென்றனர். 'நீ அந்தச் சிங்கத்தைக் கொன்றால், உனக்கு அப்பிரதேசத்தை உரிமையாக்குவேன்' என மன்னன் அறிவித்தான்.

தந்தையைக் கொல்லல்.

சிங்கபாகு வில் அம்பு ஏந்தி, சிங்கத்தின் குகைக்கு வந்தான். அவனைக் கண்டதும் பாச மிகுதியால் சிங்கம் அவனை நோக்கிவர, அம்புகளால் அதன் உடலைத் துளை யிட்டுக் கொன்றான். பின்னர் சிங்கத்தின் தலையைத் துண்டி த்து, நகரத்திற்கு மீண்டான். அவன் திரும்பிய வேளை வங்கதேச மன்னன் இறந்து ஏழு நாட்களாகியிருந்தது. மன்ன னுக்கு சுப்பாதேவியைத் தவிர வேறெவரும் சந்ததியில்லை. அமைச்சர்கள் சிங்கபாகு மன்னனின் பேரனென இனம் கண்டு கொண்டனர். அவனை வங்கதேசத்தின் மன்னனாக்கினர்.

சிங்கபாகு மன்னனாதல்.

சிங்கபாகு மன்னனாகியதும், தனது சகோதரி சிங்க சீவிலியை மணந்து கொண்டான். தான் பிறந்த பிரதேசத் திற்குச் சென்று லாலா நாட்டையும் சிங்கபுரம் எனும் புதியதொரு நகரத்தையும் அமைத்துக் கொண்டான். சிங்கபாகுவிற்கும் சிங்கசீவிலிக்கும் பதினாறு தடவைகள் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு மொத்தமாக முப்பத்திரண்டு மக்கள்; அவர்களில் மூத்தவன் விஜயன்; இரண்டாமவன் சுமித்தா.

## 4.2 விஜயனும் தோழர்களும்

இளவரசன் விஜயன் மிகவும் கீழ்த்தரமான நடத்தை களையும், கொடூரமான குணவியல்புகளையும் கொண்டவ னாகக் காணப்பட்டான். அவனைப் போலவே அவனது





விஜயனின் துஷ்டத்தனங்கள்.

நண்பர்களும் விளங்கினர். அவர்களால் நாட்டு மக்கள் நித்தம் துயர்ப்பட்டனர். தாங்கமுடியாதளவு கொடுமைகளை அவர்கள் நாட்டு மக்களுக்குச் செய்தனர். மக்கள் திரண் டெழுந்து சிங்கபாகு மன்னனிடம் முறைப்பாடு செய்தனர். மன்னன் இருதடவைகள், மகனையும் அவனது தோழர்க ளையும் கடும் எச்சரிக்கைக்குள்ளாக்கியும், அவர்கள் திருந்தவேயில்லை. பொறுமையிழந்த மக்கள், 'உங்கள் மகனைக் கொன்றுவிடுங்கள்' என குரல் எழுப்பினர்.

நாடுகடத்தல். மூன்று மரக் கலங்களில்.

சிங்கபாகு மன்னன், விஜயனையும் அவனது எழுநூறு தோழர்களையும் கைப்பற்றி, சுதந்திரமிழந்த அடிமைகள் எனும் வகையில் அவர்களது சிரசு மயிர்களை அரை முண்டம் செய்து, மரக்கலம் ஒன்றில் ஏற்றிக் கடலிலனுப்பி னான். அதேபோல அவர்களது மனைவிமார்களை ஒரு மரக்கலத்திலும், அவர்களது பிள்ளைகளை இன்னொரு மரக்கலத்திலும் ஏற்றித் தனித்தனியே கடலில் பயணப்பட வைத்தான். மூன்று மரக்கலங்களும் வெவ்வேறு திக்குகளில் பயணப்பட்டு, வெவ்வேறு தீவுகளைச் சென்றடைந்தன. பிள்ளைகள் பயணப்பட்ட மரக்கலம் நக்கதீவையும், பெண்கள் பயணப்பட்ட மரக்கலம் மகிஷ தீவையும் சென்றடைந்தன. விஜயனும் தோழர்களும் பயணப்பட்ட மரக்கலம், இந்தியா வின் மேற்குக் கரையோரத் துறைமுகமான சுப்பராகத்தைச் சென்றடைந்தது. ஆனால், அப்பிரதேச மக்கள் இவர்களின் துட்டச் செயல்களை அனுமதிக்காததால், அவர்கள்

© Dr. K. Kunarasa



அரித்தகிரி தூபி: மிகிந்தலையிலுள்ள புராதன தூபி சிதிலமடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து துரத்தப்பட, மீண்டும் மரக்கலம் ஏறிப் பயணப் பட்டு இலங்கையின் தம்பபண்ணி (தாமிரபரணி) என்றவிடத்தை வந்தடைந்தனர். இவர்கள் தாமிரபரணியை அடைந்த வேளை, புத்தர் அரசமர நிழலில் பரிநிர்வாணம் அடைந்தார் என மகாவம்சம் கூறும்.

## 4.3 கட்டுக்கதைகள்

நம்பமுடியாத கட்டுக்கதை.

விஜயனின் கதை முற்றுமுழுதான கட்டுக் கதையாகும். விலங்கு ஒன்றிற்கும் மனித மகள் ஒருத்திக்கும் பிறந்த மன்னன் ஒருவனின் வழிவந்தவர்களாக விஜயனைக் காட்டுவதும், சிங்கள மக்களின் பரம்பரை அவ்வாறான 'சிங்கம்' ஒன்றின் வழியானது என்று கூறுவதும் உண்மையில் சிங்கள மக்களுக்குப் பெருமை சேர்க்காது. விஜயனின் கதை, சிங்கள மக்களின் மூதாதையினரின் வருகையைக் குறிக்கும் ஒரு குறியீடாகக் கருதலாம்.

வங்க இளவரசி, சுப்பாதேவி மகதத்தை நோக்கிப்



**சங்கமித்தை தேரியின் வருகை:**
அசோக மன்னனின் மகள் சங்கமித்தை தேரி, வெள்ளரசுக் கிளையுடன் ஜம்புக்கோளத்துறையில் (திருவடிநிலை) வந்திறங்கினாள்.
(நன்றி : தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)





பயணப்பட்ட வணிகக்குழுவைத் தாக்கியது சிங்கமன்று; ஒரு கொடூரமான காட்டுக் கொள்ளைக்காரன் என விளக்கம் தரும் கதைகளுமுள்ளன. சோதிடரின் கணிப்பு அறிவுபூர்வமானதன்று; எனினும் அவர்களது கணிப்பு ஏற்படுத்திய மனநிலைப் பதிவு, சுப்பாதேவி என்ற அப்பாவிப் பெண்ணைச் சிங்கத்தைத் தேடிச் செல்ல வைத்துவிட்ட துயரத்தையும் நினைவு கொள்ள வேண்டும். மேலும், இலங்கை விஜயனின் வருகைக்குப் பின்னரே சிங்கள இனம் தோன்றியது என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. பாகியான், ஹுவான் சாங் ஆகிய சீன யாத்திரிகர்களின் குறிப்புகளில், விஜயனுக்குப் பதில் சிங்ஹலன் என்பவனே, இலங்கையில் சிங்கள அரசை நிறுவியவன் எனக் குறிப்புள்ளது.

மனநிலைப் பதிவு.

விஜயனும் அவனது தோழர்களினதும் தாயகமான வங்கதேசம் எது என்பதில் இரு முரணான கருத்துக்க ளுள்ளன. இவர்களின் தாயகத்தை நிர்ணயிப்பதன் மூலமே,

வங்கதேசம் எது?

© Dr. K. Kunarasa



**ராணி அனுலா:**
தேவநம்பியதீசனின் சகோதரனின் மனைவி ராணி அனுலா, முதன்முதல் பிக்குனியாக இலங்கையில் மாறிய பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியர்களின் இலங்கை வருகையின் உண்மையையும், தூய்மையையும் நிர்ணயிக்க முடியும். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ளதே வங்கதேசமும் லாலா நாடும் சிங்கபுரமும் என இனம் காணும்போது, இந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்தே ஆரிய குடியேற்றம் ஏற்பட்டதெனக் கொள்ள வேண்டும். அது இருவகைகளில் இயல்பு நிலைக் கருத்துக்குப் பொருத்தமாகின்றது. ஒன்று மகாவம்சம் குறிப்பிடுகின்ற கலிங்கம், மகதம் என்பன இந்தியாவின் கிழக்குக் கரையிலேயே உள்ளன. மற்றையது, இலங்கைக்கு அருகில் அமைவது இந்தியாவின் கிழக்குக் கரையே. அதனால், குடியேற்றங்களுக்குக் கிட்டிய தூரப்பிரதேசமாக விளங்குகிறது. விஜயன் முதலில் கரையிறங்கிய சுப்பராகத்துறை, இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ளதால், இந்தியாவின் வடமேற்குப் பகுதியே (குஜராத்) விஜயனின் தாயகம் என நிறுவ பரணவிதான போன்றோர் விழைகின்றனர். சுப்பராகம், கிழக்குக் கரையிலுள்ள ஒரு துறைமுகமாகவே இனங்காணப்பட வேண்டும். ஆரிய குடியேற்றங்கள் இந்தியாவின் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் ஏற்பட்டதெனக் கொள்வதில் தவறில்லை.

கலிங்கம், மகதம், சுப்பராகம்.

# 5. குவேனி

கரை இறங்கல்.

பரிநிர்வாண நிலையை அடைந்து கொண்டிருந்த புத்தர் பிரான், இந்திரனை அழைத்து 'சிங்கபாகுவின் மகன் விஜயன் என்பான் தனது எழுநூறு தோழர்களுடன் லாலா நாட்டிலிருந்து புறப்பட்டு இலங்கைக் கரையிலிறங்குகிறான். அந்த நாட்டில் எனது சமயம் கொழிக்கவிருப்பதால் அவனையும் தோழர்களையும் அந்த நாட்டையும் பாதுகாக்குக' எனக் கேட்டுக் கொண்டாரென மகாவம்சத்தின் ஏழாவது அத்தியாயம் ஆரம்பமாகின்றது. இந்திரன் அந்தப் பணியை விஷ்ணுவிடம் ஒப்படைக்க, விஷ்ணு கடற்கரையில், ஒரு மரநிழலில் அமர்ந்திருந்த போது, கரையிறங்கிய விஜயனும் தோழர்களும் அவரிடம், 'இத் தீவு யாது?' என வினவினர். இதற்கு அவர், 'இது இலங்காபுரி' எனப் பதிலளித்ததோடு, மந்திர நீரை





அவர்களுக்குத் தெளித்து ஆசீர்வதித்ததோடு, அவர்கள் ஒவ்வொருவரதும் வலது கரத்தில் மந்திர நூலைக்கட்டிக் காப்பளித்தார். பின்னர் வானில் ஏகி மறைந்து போனார்.

நாயைத் தொடர்ந்த விஜயனின் தோழன்.

அவ்வேளை காளி என்ற ஓர் இயக்கி (யச்சினி) நாய் வடிவில் அவர்கள் முன் தோற்றம் தந்தாள். 'அருகில் குடிமனை ஒன்று இருக்கவேண்டும். அதனால்தான் நாய் காணப்படுகிறது' என எண்ணிய விஜயனின் தோழர்களில் ஒருவன், அந்த நாயினைப் பின் தொடர்ந்தான். ஒரு குளக்கரையில், ஒரு மரத்தினடியில் இயக்கத் தலைவி, குவேனி என்பாள் பெண் துறவி வடிவில் அமர்ந்திருந்து, நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். குளத்தையும் அதன் அருகே துறவிப் பெண் ஒருத்தியையும் கண்ட அவன், குளத்தில் இறங்கி நீரருந்தி, நீராடி, உண்பதற்காகத் தாமரைக் கிழங்குகள் சிலவற்றையும் பறித்தெடுத்தான். அவ்வேளை குவேனி எழுந்து, 'அப்படியே நில், நீ என் இரையாவாய்' எனக் கூறினாள். அவன் அப்படியே அசையாது நின்றான். அவன் கரத்தில் விஷ்ணு கட்டிய மந்தரித்த நூல் இருந்ததால், குவேனியால் கபளீகரம் செய்ய முடியாது போயிற்று. அதனால், அவள் அவனைப் பிடித்து ஓர் மறைவான இடத்தில் கிணற்றுள் சிறை வைத்தாள். அவன் திரும்பி வராமையால் அவனைப் பார்த்து வருமாறு இன்னொருவனை விஜயனனுப்ப, அவனும் அவ்வாறே

விஜயனின் ஆட்கள் சிறைப்படுதல்.

© Dr. K. Kunarasa



இந்து கட்டு சைத்தியம்: மிகிந்தலை வீதியிலமைந்துள்ள இந்து கட்டு சைத்தியம் மகாயன பௌத்தம் சார்ந்தது. ஆதலால் கைவிடப்பட்டு சிதைந்து போனது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைப்பட்டான். அவ்வாறாக அவனைத் தொடர்ந்து ஒருவர் பின் ஒருவராக வந்த விஜயனின் தோழர்கள், எழுநூறு பேரும் குவேனியால் சிறை பிடிக்கப்பட்டனர்.

விஜயன் - குவேனி சந்திப்பு.

தோழர்கள் திரும்பி வராததைக் கண்ணுற்ற விஜயனுக்குப் பயம் பற்றிக் கொண்டது; பஞ்சாயுதங்களை (சங்கு, வாள், வில், கோடரி, ஈட்டி, கவசம்) அணிந்து கொண்டான். மனிதர்களின் காலடிச் சுவடுகள் குளக் கரையில் வந்து முடிவதையும், அவர்கள் திரும்பி வந்த அடிச்சுவடுகள் அங்கு காணப்படவில்லை என்பதையும் அவதானித்தான். குளக்கரை மரத்தடியில் துறவி வடிவில் ஒரு பெண் அமர்ந்திருப்பதை யும் கண்டான். 'நிச்சயமாக என் தோழர்களை இவள்தான் பிடித்திருக்க வேண்டும்' என முடிவு செய்து, 'பெண்ணே, என் தோழர்கள் எங்கே' எனக் கேட்டான். 'இளவரசே, அவர்களால் உனக்கு ஆவ தென்ன? முதலில் இக்குளத்தில் குளித்து நீரருந்துங்கள்' என்றாள் குவேனி. தனது தகுதி நிலையை அவள் தெரிந் திருப்பதால், நிச்சயமாக அவள் ஒரு யக்ஷிணி (இயக்கப் பெண்) என முடிவு செய்த விஜயன், அவளது தலைமயிரை ஒரு கரத்தில் பற்றி, மறுகரத்தில் வாளை ஏந்தி, 'அடிமையே, அவர்களை என்னிடம் திருப்பி அளி. இல்லாவிடில் நீ இந்த வாளுக்கு இரையாவாய்' என்றான். பயந்துபோன குவேனி, உயிர்ப் பிச்சை கோரினாள். அத்துடன், 'நான் இந்த இராச்சியத்தையும் என்னையும் உனக்களிப்பேன்'

© Dr. K. Kunarasa



**மிகிந்தலை வைத்தியசாலை:** மிகிந்தலையின் புராதன வைத்தியசாலை. மிகிந்தலையில் வசித்த 2000 பிக்குகளுக்கு இந்த வைத்தியசாலை உதவியுள்ளது.






என்றாள். அவளிடம் சத்தியம் வாங்கிய விஜயன், உடனடியாக எனது தோழர்களை அழைத்துவா' என அவளுக்கு அபயம் அளித்துப் பணித்தான். அவள் சிறை வைத்திருந்த தோழர் களை மீள அளித்தாள். கப்பல் வியாபாரிகளிடமிருந்து கைப்பற்றிய அரிசி முதலான உணவுப்பொருள்களும், வேறு பொருள்களும் அங்கிருந்தன. அவர்கள் பசியாற உணவு தயாரித்துண்டார்கள். குவேனியும் உணவருந்தினாள்.

குவேனி விஜயனின் மனைவியாகுதல்.

குவேனி, ஒரு பதினாறு வயதுடைய பருவ மங்கையாக உருமாறி, ஆடை ஆபரணங்களுடன் விஜயன் முன் காட்சி தந்தாள். அம்மரத்தடியில் கூடார வீடொன்றையும், அதனுள் அற்புதமான படுக்கையையும் அமைத்தாள். விஜயன் குவேனி யைத் தன் மனைவியாக்கி அவளுடன் உறவு கொண்டான். இரவு கழிந்த வேளையில் அயலில் எழுந்த ஆடல் பாடல் சத்தத்தை விஜயன் கேட்டான். தன்னருகில் படுத்திருந்த குவேனியிடம், 'இச் சத்தம் யாது?' என வினவினான்.

© Dr. K. Kunarasa



**புத்தர்சிலை:** அநுராதபுர அரும்பொருள் காட்சிச்சாலையிலுள்ள புத்தர் சிலை. மன்னார் மாவட்டத்தில் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸமித்தா திருமணம்.

'நான் இந்த அரசினை இவனுக்கே வழங்க வேண்டுமாயின் எல்லா இயக்கர்களும் கொல்லப்பட வேண்டும். இல்லா விட்டால் என்னை அவர்கள் கொன்றுவிடுவார்கள்' எனக் குவேனி எண்ணமிட்டாள். அதனை நிறைவேற்றும் நோக் கோடு, 'சிறிஸ்துவத்து என்றொரு இயக்க நகரமுள்ளது. இயக்கத் தலைவனுடைய மகள் புஸமித்தாவுக்குத் திரு மணம். ஏழு நாட்களாக அத்திருவிழாவைக் கொண்டாடு கிறார்கள். இன்று அங்கு எல்லோரும் கூடியிருப்பார்கள். அவர்களை இன்று அழிக்காவிட்டால் இனிமேல் இப்படியான சந்தர்ப்பம் கிடைக்க வாய்ப்பரிது' என்றாள் குவேனி.

இயக்க மன்னன் களுசேனன்.

அதற்கு விஜயன், 'கட்புலனாக இயக்கர்களை நான் எப்படி அழிப்பது?' என்று வினவினான். 'நான் இயக்கர்களின் மத்தியிலிருந்து சத்தம் எழுப்புவேன். அத்திசையில் ஆயுதப் பிரயோகம் செய்யவும். எனது சக்தியினால் அவை அவர்க ளது உடல்களைக் கூறுபோடும்' என்றாள் குவேனி. அவ்வாறே விஜயனும் அவனது தோழர்களும் சிறிஸ்துவத்துத் திருமண வீட்டில் குழுமியிருந்த இயக்கர்களை அழித்தனர். இயக்க மன்னனான களுசேனனை விஜயன் கொன்று, அவனது அரச ஆடையை எடுத்துக்கொண்டான். சிறிஸ்துவத் தில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு, விஜயனும் தோழர்க ளும் குவேனியுடன் தம்பபண்ணிக்குத் திரும்பி வந்தனர். அங்கு ஒரு நகரத்தை உருவாக்கி அனைவரும் குடியேறினர்.

தம்பண்ணி - தாமிரபரணி என்ற பெயர் வந்த கதை.


முன்னர் மரக்கலத்திலிருந்து தரையில் இறங்கிய விஜயனும், தோழர்களும் கடல் காய்ச்சலினாலும் போதிய உணவு நீரின்றி பலவீனமுற்றதினாலும் தமது கையை நிலத்தில் ஊன்றியபடி அமர்ந்துள்ளனர். அவர்களுடைய கரங்களில் அவ்விடத்து மண் செங்கபில (செப்பு நிறம்) நிறமாகப் படிந்தது. அதனால், அவ்விடத்திற்குத் தம்ப பண்ணி எனப் பெயரிட்டனர் என மகாவம்சம் கூறுகிறது. அத்துடன் விஜயனின் தந்தை சிங்கபாகு, சிங்கத்தைக் கொன்றான். 'சீகள' என்பது சிங்கம். அவனுக்கும் விஜயனுக்குமுள்ள உறவு நிலையால், விஜயனும் அவனது தோழர்களும் தங்களை சீகள / சிங்களவர் என அழைத்துக் கொண்டனர் என மகாவம்சம் கூறுகிறது. இலங்கை ஒரு 'சீகள'வினால் வெற்றி கொள்ளப்பட்டது. அதனால் இத்தீவு சீகள / சிங்களம் எனப் பெயர் பெற்றது.





குடியேற்றங்கள்.

விஜயனின் அமைச்சர்கள், பல்வேறு பிரதேசங்களில் குடியேற்றங்களை உருவாக்கிக் குடியேறினர். அனுராதா என்பான் கதம்பநதியின் கரையில் அனுராதக் கிராமம் என்பதை அமைத்தான். உபதீசன் என்பான உபதீசகமம் என்றொரு கிராமத்தை காம்பிரா நதிக்கரையில் உருவாக்கி னான்; அனுராதபுரத்திற்கு வடக்கே உபதீசகமம் அமைந்தது. உஜ்யினி, உருவெலை, விஜித்தா ஆகிய அமைச்சர்களும் தத்தம் பெயர்களில் உஜ்ஜினிகமம், உருவெலகமம், விஜிதகமம் ஆகிய குடியிருப்புகளை அமைத்துக் கொண்ட னர். விஜயனின் தோழர்கள் இவ்வாறு தத்தமது பெயர்களில் கிராமங்களை அமைத்துக் கொண்ட பின்னர் விஜயனிடம் வந்து, இலங்கை மன்னனாக முடிசூடிக் கொள்ளுமாறு வேண்டினர். அதற்கு விஜயன், 'எனது தகுதிக்கு நிகரான அரசகுலப் பெண்ணொருத்தி மகாராணியாக வராத நிலையில் நான் முடி சூடுவது சரியல்ல' என்று கூறினான்.




**மகாவிகாரை:**
தேவநம்பியதீசன், மகிந்ததேரருக்கும் அவருடன் வந்த பிக்குகளுக்கும் அளித்த பௌத்த மையமே மகாவிகாரையாகும். அநுராதபுர நகருக்குத் தெற்கே முத்துசிவன் மன்னனால் அமைக்கப்பட்ட அரச நந்தவனமே மகாவிகாரை அமைந்துள்ள பிரதேசமாகும். மகாவிகாரைக்காணியின் ஒரு பகுதியைப் பிற்காலத்தில் மகாசேனனால் ஜேத்தவன விகாரைக்குப் பிரித்து வழங்கப்பட்டது. அரச நந்தவனத்தில் மகிந்த தேரர் முதலில் தங்கி போதனை செய்ததால் இது பின்னர் ஜோதிவனம் எனப்பட்டது. (ஜேத்தவனம்) மகாவிகாரை என்பது பல்வேறு சமயக்கட்டடங்களின் தொகுப்பாகும். ஸ்ரீ மகாபோதி (வெள்ளரசுக்கிளை), லோகபாசாடா (லோகமயாப்பாயா), மகாதூபி (ருவன்வெலிசாயா) என்பனவற்றோடு மகாதூபியைச் சூழ்ந்து அமைந்திருக்கும் அனைத்துக் கட்டமைப்புகளும் அடங்கும். மகாவிகாரை எல்லைக்குள் தூபராம தூபியும் அடங்கும். போதிமரம் அடங்கலான பகுதி மகாமேகவனம் எனப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பாண்டிய மகளிர்

விஜயனுக்குரிய அரச குலப் பெண்ணைத் தேர்ந் தெடுக்கும் நோக்குடன், ஜம்புத்தீபத்தின் (இந்தியா) தென் பாகத்திலுள்ளமதுரைக்கு, பாண்டிய மன்னனின் பெண் கேட்டு பெறுமதி மிக்க பரிசுப் பொருட்களுடன் தூதுவர் அனுப்பப்பட்டனர். தோழர்களுக்குரிய மணப் பெண்களும் கோரப்பட்டனர். பாண்டிய மன்னன் அக்கோரிக்கைக்கு இணங்கித் தனது மகளை விஜயனுக்கும் அரசப் பிரதானி களின் பெண்மக்கள் எழுநூறு பேரை அவனது தோழர் களுக்கும் மணப்பெண்ணாகத் தேர்ந்தெடுத்தான். ‘சிங்க பாகுவின் மகனும் இலங்காபுரியின் வேந்தனுமான விஜய னுக்கு நான் எனது மகளை மகாராணியாக அனுப்பவுள் ளேன். அமைச்சர்கள், பிரதானிகள் தங்களது குமர்களை விஜயனின் தோழர்களுக்கு மணம் செய்விக்க விரும்பில்,

© Dr. K. Kunarasa



ஶ்ரீ மகாபோதி (வெள்ளரசுக்கோயில்):
கி.மு. 528 இல் புத்தகாயாவிலுள்ள வெள்ளரசு ஒன்றின் கீழ் கௌதம புத்தர் பரிநிர்வாணம் அடைந்தார். அம்மரக்கிளை ஒன்று சங்கமித்தை தேரியால் இங்கு எடுத்துவரப்பட்டு, நாட்டப்பட்டது. 2200 ஆண்டுகள் பழைமையான மரம். திசவாவியிலிருந்து இப்போதி மரம்வரை நீரள்ளிவர உதவிய சுரங்கப்பாதை இன்று கண்டறியப்பட்டுள்ளது.





அவர்களை தேவையான ஆடையணிகளுடன் வீட்டு வாசலில் நிற்க வைக்கவும். அவ்வாறு செய்தால் அனுப்பி வைப்பதற்கு விரும்புகிறார்கள் என்பது தெளிவாகும்’ எனப் பாண்டிய மன்னன் அறிவித்தான்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பாண்டிய மகளிர்கள் அவரவ ருக்குரிய கௌரவத்திற்கேற்ப ஆடை அணி அலங்காரம் செய்யப்பட்டு, யானைகள், குதிரைகள், தேர்கள், அடிமைகள் என்பனவற்றோடு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்தோடு பதினெட்டு தொழில்சார் விற்பன்னர்கள் கொண்ட ஆயிரம் குடும்பங்களும் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் அனைவரும் மரக்கலங்களில் ஏறி, இலங்கையின் மகாதீர்த்தத்துறையை (மாந்தை) வந்தடைந்தனர்.

மகாதீர்த்தத் துறையை மண மக்கள் அடைதல்.

## 6.1. குவேனியும் பிள்ளைகளும்

விஜயனுக்கும் குவேனிக்கும் இரு பிள்ளைகள் பிறந்திருந்தார்கள். ஒரு மகன் ஜீவகத்தா; ஒரு மகள் திசாலா. பாண்டிய மணப்பெண்கள் வந்திறங்கியிருக்கும் வேளையில் குவேனியும் பிள்ளைகளும் தன்னுடன் இருப்பதை விரும்பாத விஜயன், ‘பிள்ளைகளை என்னுடன் விட்டுவிட்டு இவ்விடத்திலிருந்து எங்காவது சென்றுவிடு’ என்றான். குவேனி எவ்வளவோ இரந்து பார்த்தாள். விஜயன் ஒப்புக் கொள்ளாத நிலையில் தனது இரண்டு

ஜீவகத்தா - திசாலா.

© Dr. K. Kunarasa



வெள்ளரசுக் கிளை:
வெள்ளரசு மரத்தின் ஒரு தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு லங்காபுரிக்கு (சிறிஸ்துவத்து) ஓடிச் சென்றாள். இயக்கர்கள் தங்களைத் தப்பவிடமாட்டார்கள் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.

குவேனியின் மரணம்.

இயக்கரின் நகரத்திற்கு வெளியே தன்னிரு பிள்ளைகளையும் மறைந்திருக்கச் செய்துவிட்டு, அவள் மட்டும் நகரத்திற்குள் புகுந்தாள். அவளைக் கண்ட இயக்கர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். 'எங்களை ஒற்றறிவதற்காகவே அவள் மீண்டும் வந்திருக்கிறாள்' எனக் கூச்சலிட்டனர். அவள் எதுவும் கூறுவதற்கு முதலே ஓர் இயக்கன் விட்ட பலமான முஷ்டிக் குத்தினால் குவேனி செத்து விழுந்தாள்.

குவேனியினுடைய தாய்வழி மாமன் குமாரா என்பான் நகரத்திற்கு வெளியே வந்து, குவேனியின் இரு பிள்ளைகளையும் சந்தித்தான். 'நீங்கள் யார்?' என்று வினவ, 'நாங்கள் குவேனியின் பிள்ளைகள்' என்றனர். 'உங்களுடைய தாயைக் கொன்றுவிட்டார்கள். உங்களைக் கண்டால் விடமாட்டார்கள். ஆகவே, எங்காவது ஓடித் தப்புங்கள்' என்றான் குமாரா.

புலிண்டர்கள் உதயம்.

அவர்கள் திக்குத் திசை தெரியாமல் தப்பி ஓடி சுமணகுத்த மலைப் பகுதியை (சிவனொளிபாதம்) அடைந்தனர். மூத்த மகன் வளர்ந்ததும் தங்கையைத் தன் மனைவியாக்கிக் கொண்டான். மத்திய மலைநாட்டின் உட்பகுதிகளில் அவர்கள் தம் குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டு வாழ்ந்தனர். அவர்களே பிற்காலத்தில் புலிண்டர்கள் (வேடர்) என்போராயினர்.

விஜயன் - பாண்டிய இளவரசி திருமணம்.

பாண்டிய மகளிர்களை அழைத்து வந்த தூதுவர்கள், அவர்களையும் ஏனையோரையும் விஜயனிடம் ஒப்படைத்தனர். பாண்டிய இளவரசியை விஜயன் மணந்து, இலங்கையின் மன்னனாக முடி சூடிக் கொண்டான்; தோழர்களும் தத்தமக்குரிய பாண்டியப் பெண்களை மணந்து கொண்டனர். பாண்டிய மன்னனுக்கு ஒவ்வொரு வருடமும் நூறாயிரம் காசு பெறுமதியான முத்துக்களைத் (திறையாக) அனுப்பி வைத்தான். இவ்வாறாக தாமிரபரணியிலிருந்து விஜயன் முப்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான் என மகாவம்சம் கூறுகிறது.






# 7. விஜயனும் ததாகதரும்

கி.மு. 483 ஆம் ஆண்டு நிகழ்ந்த விஜயனதும் அவனது தோழர்கள் எழுநூறு பேரினதும் இலங்கை வருகைக்கு முன்னர் இந்தியாவிலிருந்து ஆரியரின் வருகை இங்கு நிகழ்ந்துள்ளது. விஜயனின் கதை ஒரு கட்டுக்கதை என்பதை நாம் மறக்கக்கூடாது. இவ்வாறான நாடோடிக் கதைகள் பலவுள்ளன என்பர். குவேனி பற்றிய குறிப்புக்கள், மகாவம்சத்துக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்ட தீபவம்சத்தில் எதுவுமில்லை. விஜயனும் அவனது தோழர்களும் பாண்டிய நாட்டு இளவரசிகளை மணந்து கொண்ட வரலாற்றை நோக்கும் போது, தென்னிந்திய திராவிட மக்களது பெருங்குடியேற்றம் விஜயன் காலத்தில் நிகழ்ந்த உண்மையை

© Dr. K. Kunarasa



**வெள்ளரசு மரம்:** புனித வெள்ளரசுக் கிளைகள் ஒடிந்து விழாதிருக்க முட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிடக் குடியேற்றம்.

உணர முடிகின்றது. எழுநூற்றொரு பாண்டிய மகளிர், பதினெண் குழாம், ஆயிரம் குடும்பங்கள், அடிமைகள் எனப் பெரும் எண்ணிக்கையான பாண்டிய மக்கள், மகாதீர்த்தம் ஊடாக இலங்கையில் குடியேறியுள்ளனர். இவ்வளவு எண்ணிக்கையில் வந்திறங்கியபடியால்தான், 'மகாதித்த' (மகாதீர்த்தம்) (வந்திறங்கிய துறை) என்ற பெயரே வந்ததென மகாவம்சம் கூறுகிறது. விஜயனும் தோழர்களும் மணந்த பெண்கள், பாண்டிய மகளிர்கள் என்பதால், தமிழர்களை மணந்தனர் என்பதையும்,சிங்ஹல விஜயனினதும் தோழர்களினதும் 'சீகள' இரத்தத்துடன், பாண்டிய நாட்டுத் திராவிடரது குருதி கலந்தது என்பதையும் தாங்கிக் கொள்ள முடியாத சிங்கள வரலாற்றாசிரியர்கள், பாண்டிய மதுரையை பாண்டு மதுராவாக்கி, மகாபாரத பாண்டவர் குலத்தில் வட இந்தியாவில் தேடி வருகின்றனர். ஆனால் மகாவம்சத்தில் கெய்கரின் மொழிபெயர்ப்பிலும், முதலியார் விஜயசிங்கவின் திருத்தத்திலும் 'தெற்கேயுள்ள மதுரை/ மதுரா எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாவம்சம், விஜயனின் இலங்கை வருகைக்கு சமய புனிதத் தன்மையை சேர்க்க விரும்பியுள்ளது. 'பரிநிர்வா ணத்தை எய்துவதற்காக இரு சால மரங்களிடையே ததாகதர் (புத்தர்) படுத்திருந்த அதேநாளில், விஜயன் இலங்கையின் தாமிரபரணிப் பகுதியில் இறங்கினான்'



**மகாபோதி:**
மகாபோதியைச் சுற்றித் தங்கமுலாம் பூசப்பட்ட வேலிகள் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளன.
(நன்றி: டெய்லி நியூஸ்)





என மகாவம்சம் கூறுகிறது. (Mahavamsa VI. 47) விஜயனைச் சிங்களவரசின் முதல் மன்னனாக இனங் காண விரும்பும் மகாவம்ச ஆசிரியர், அவனை பௌத்த மதத்தின் முக்கிய பரிநிர்வாண புனிதத்துடன் ஏதோ ஒரு வகையில் இணைக்க விரும்பியமையின் வெளிப்பாடாகும்.

# 8. பண்டுவாசுதேவன்

மகாவம்சத்தின் எட்டாவது அதிகாரம் பண்டுவாசு தேவன் பற்றிய கதையாகும். விஜய மன்னனிற்கும் பாண்டிய இளவரசிக்கும் சந்ததி ஏற்படவில்லை. தனது ஆட்சிக் காலத்தின் இறுதி முப்பத்தெட்டாவது வருடம், விஜயன் தனக்குச் சந்ததியில்லாமையால் இந்த நாடு அரசனின்றி அவதிப்படக் கூடாதெனக் கருதி, தனது

© Dr. K. Kunarasa



**தூபராம தூபி:**
அநுராதபுரத்தில் முதன்முதல் அமைக்கப்பட்ட தாதுகோபம் தூபராம தூபியாகும். புத்தரின் விலாவெலும்பை வைத்து இத்தூபி, தேவநம்பியதீசனால் கட்டப்பட்டது. தூபராம தூபியைச் சுற்றி விகாரைக்கான கட்டடங்களுள்ளன. நெற்குவியலின் வடிவில் அமைக்கப்பட்டது. பின்னர் திருத்தும்போது இத்தூபி கோயில்மணி வடிவில் அமைந்து விட்டது. முன்னர் இவ்விடத்தில் மகோஜன் (மகேசன்/சிவன்) என்பாருக்கு ஒரு கோவிலிருந்தது. அதனை அவ்விடத்திலிருந்து அகற்றி இத்தூபி கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விஜயனின் மரணம்.*

சகோதரன் சுமித்தனிடம் ஆட்சியை ஒப்படைக்க எண்ணி, ஆளுங்கணத்தாரின் அனுமதியுடன் தூதுவரைச் சுமித்த னிடம் அனுப்பி வைத்தான். விஜயன் ஆட்சியுரிமையாளன் ஒருவன் வருவதற்கு முன்னரே மரணமடைய நேர்ந்தது. உபதீசகமத்திலிருந்து அமைச்சர்கள், இளவரசன் ஒருவனை எதிர்பார்த்து நிர்வகித்து வந்தனர். ஓராண்டு காலம் இலங்கை மன்னனில்லாத நாடாக விளங்கியது.

*பண்டுவாசுதேவன் இலங்கை அரசனாக முன்வரல்.*

லாலா தேசத்தில் சிங்கபுரத்தின் மன்னன் சிங்கபாகு இறந்ததும், அவனது மகன் சுமித்தன் அரசனாகியிருந்தான். விஜயனின் கடிதத்தைத் தூதுவர் சுமித்தனிடம் கையளித்த னர். அரசனுக்கும் அவன் மணந்திருந்த மட்றா நாட்டு இளவரசிக்கும் மூன்று ஆண்மக்கள் இருந்தனர். 'எனக்கோ வயதாகிவிட்டது. உங்கள் மூவரில் ஒருவர் இலங்கைக்குச் சென்று, அந்த இராச்சியத்தைப் பொறுப் பெடுங்கள்' என்று மன்னன் கோரியபோது, மூன்றாவது மகனான பண்டுவாசு தேவன் அக்கோரிக்கையை ஏற்று, இலங்கைக்கு மரக்கல மேறினான். தன்னுடன் அமைச்சர்களின் புத்திரர்கள் முப்பத் திரண்டு பேரையும் சந்நியாசிகள் வடிவில் அழைத்து வந்தான். அவர்களது மரக்கலம் மகாகந்தாரநதி முகத்தில் அமைந் துள்ள கோணகமாகாத் துறையில் வந்து சேர்ந்தது. மரக் கலத்தில் வந்திறங்கிய சந்நியாசிகளை அவ்விடத்து மக்கள் நன்குஉபசரித்தனர். 'தலைநகருக்குரிய பாதை எது?' எனப் பண்டுவாசுதேவா குழுவினர் விசாரித்தபோது, உபதீசக மத்திற்கான வழி காட்டப்பட்டது; அங்கு வந்தடைந்தனர்.

*சோதிடர் கூற்று.*

உபதீசகமத்திலிருந்து அரச நிர்வாகத்தைக் கவனித்து வந்த பிரதம அமைச்சர், சோதிடர்களிடம் இளவரசனின் வருகை பற்றி வினவியபோது, 'இன்றிலிருந்து ஏழாம் நாள் இங்கு வருவார்கள்' எனத் தெரியவந்தது. 'புத்தரின் மதத்தை யும் இந்த நாட்டில் நிலைபெறச் செய்வார்கள்' எனவும் அறிவித்தனர். அவர்கள் கூறியவாறு ஏழாம் நாள் பண்டுவாசு தேவாவும் நண்பர்களும் சந்நியாசிகளாகத் தலைநகருக்கு வந்தனர். பிரதம அமைச்சர் அவர்களை எதிர்கொண்டு விசாரித்து, அடையாளம் கண்டுகொண்டார். பண்டுவாசு தேவாவிற்குரிய மகாராணி உடனடியாகக் கிடைக்காமை யால், மகுடம் தரித்துச் சிம்மாசனம் ஏறுவது சிலகாலம் தடைப்பட்டது.






## 8.1. பத்தகச்சானா

கங்கை நதியோரத்தில் சக்கபாண்டு என்றொரு மன்னனின் சிற்றரசு விளங்கியது. அவனுக்கு ஏழு ஆண் மக்களும், பத்தகச்சானா எனும் மகளும் இருந்தனர். பத்தகச்சானா பொன்னிற மேனி அழகுடையாள். கங்கைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏழு மன்னர்கள் அவளை மனைவியாக அடைய விரும்பி மன்னனுக்குப் பரிசுப் பொருட்கள் அனுப்பிக் கோரி வந்தனர். படையெடுப்புகள் மூலம் நாட்டையும் பத்தகச்சானாவையும் அம்மன்னர்கள் கவர்ந்து கொள்ளலாம் என்ற அச்சம் சங்கபாண்டு மன்ன னுக்கு இருந்தது. சோதிடர்களும், இளவரசி நன்னிமித்தான பயணம் ஒன்றினை மேற்கொள்வாள் எனத் தெரிவித்தனர். மன்னன், பத்தகச்சானாவையும் முப்பத்திரண்டு தோழிப் பெண்களையும் விரைந்து செல்லக்கூடிய மரக்கலம் ஒன்றில் ஏற்றி 'எவரால் என் மகளை வெற்றி கொள்ள முடியுமோ அவரே பெறுக' என்ற செய்தியோடு, கங்கை நதியில் பயணப்பட வைத்தான். அவளை விரும்பிய ஏழு மன்னர்கள் எவருக்கும் அவள் கிட்டவில்லை. மரக்கலமானது கங்கை நதியில் பயணப்பட்டு, வங்காளக் கடலினூடாக, கோணக மகாத் துறையை பன்னிரண்டாம் நாள் வந்தடைந்தது. இளவரசியும் தோழிகளும் தம்மை சந்நியாசினிகளாக உடையணிந்து உருமாறிக் கரையிறங்கினர். மக்களை

© Dr. K. Kunarasa



**தூபராம வட்டதாகே தூபி:** தூபராம தூபியின் முன்னைய வடிவம் இது. சிதைந்திருந்த தூபராம தூபியை 7ஆம் நூற்றாண்டில் இரண்டாவது அக்போ, வட்டதாகே வடிவில் புனர்நிர்மாணம் செய்தான். பாரிய தூண் களை நாட்டி வட்ட வடிவமான கூரையொன் றினை அமைப்பித்தான். அநுராதபுரம் அரும் பொருள் காட்சியகத் திலுள்ள மாதிரி வடிவம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தகச்சானாவைப் பண்டு வாசுதேவா மணந்துகொள்ளல்.

விசாரித்துத் தலைநகரான உபதீசகமத்திற்கு வந்து சேர்ந்தனர். அப்பெண்களைக் கண்ட ஓர் அமைச்சர், அவர்களின் உண்மை விபரத்தைக் கேட்டறிந்து, மன்னன் முன் அழைத்துச் சென்றார். பண்டுவாசுதேவா பத்தகச்சானாவை மணந்து கொண்டான். தோழர்கள் பத்தகச்சானாவின் தோழியரை விஜிதபுரத்தில் வாழ்ந்தனர் என மகாவம்சம் கூறுகிறது. பண்டுவாசுதேவாவின் கதையும், பத்தகச்சானாவின் கதையும் ஒருவிதமான நாடகத்தன்மை வாய்ந்தது. பண்டுவாசுதேவாவுடன் முப்பத்திரண்டு தோழர்கள் சந்நியாசிகள் வடிவில் வந்தனர். பத்தகச்சானாவுடனும் முப்பத்திரண்டு தோழியர்கள் சந்நியாசினிகள் வடிவில் வந்துள்ளனர். இரு தொகுதியினரும் மகாகந்தார நதியின் முகத்திலுள்ள கோணகமாத் துறையை வந்தடைந்துள்ளனர். இரு தொகுதி ஆரியரின் வருகையாக இந்தச் சம்பவங்களை ஏற்றுக் கொள்ளலாம். மகாகந்தார நதியை, மன்னாருக்கு வடக்கேயுள்ள ஒரு நதியாகக் கெய்கர் இனங்காணுவார். அதைப்பற்றி எதுவுமே ரேணர் குறிப்பிடவில்லை. உண்மையில் மகாநதியென அக்காலத்தில் அழைக்கப்பட்ட மகாவலிகங்கையின் வடகழிமுகக் கிளையே மகாகந்தார நதியென அடையாளங்காண முடியும். அதிலுள்ள துறைமுகம் கோகர்ணமாகும். அதனையே கோணகமகாத் துறையென மகாவம்சம் குறிப்பிடுகிறது.

© Dr. K. Kunarasa



**தூபராமதூபி:** தூபராம வட்டதாகேயைத் தாங்கி நின்ற கருங்கற் தூண்கள்.






எனவே, விஜயனதும் தோழர்களினதும் குடியிறக்கம் இலங்கையின் மேற்குக் கரையில் நிகழ, பண்டுவாசுதேவாவினதும் பத்தகச்சானாவினதும் கூட வந்தவர்களினதும் குடியிறக்கம் கிழக்குக் கரையில் நிகழ்ந்துள்ளது.

# 9. அபயன்

மகாவம்சத்தின் பத்தாவது அதிகாரம் அபயன் என்பானின் வரலாற்றைக் கூறுகின்றது. பண்டுவாசுதேவாவிற்கும் ராணிக்கும் பத்து ஆண்மக்களும் ஒரு பெண்மகவும் பிறந்தனர். மூத்த மகனின் பெயர் அபயன்; கடைசி மகளின் பெயர் சித்திரா. அவள் பிறந்தவேளை சோதிடங் கணித்த பிராமணர் சிலர், 'இவளுக்குப் பிறக்கின்ற மகன், தாய்வழி மாமன்மாரைக் கொன்று, இந்த இராச்சியத்தைக் கைப்பற்றுவான்' என்றனர். சோதிடர்களின் எதிர்வுகூறலில் நம்பிக்கையில்லாத அபயன் தவிர்ந்த ஏனைய சகோதரர்கள் ஒன்பது பேரும், 'தங்கை சித்திராவைக் கொன்றுவிடுவோம்' என்றெழுந்தனர்.

அபயன் ஒப்புக் கொள்ளாமையால், ஒற்றைத் தூணில் அமைக்கப்பட்ட கோபுர அறையொன்றில் சித்திராவைச் சிறை வைத்தனர்; அக்கோபுர அறையின் நுழைவாயில் மன்னனது படுக்கை அறையிருந்தது. சித்திராவிற்குத்

© Dr. K. Kunarasa



**பாதலாஞ்சன தூபி:** அநுராதபுரத்தில் தூபராம தூபிக்கு அருகில் அமைந்துள்ள சிறிய தூபியின் எச்சம். இதனை பாதலாஞ்சன தூபி அல்லது சிலாதேசிய தீகதூபி என்பர். புத்தரின் மூன்றாம் வருகையின போது இவ்விடத்தில் புத்தர் தன் பாதச்சுவடுகளைப் பதித்தாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாக ஒரு பணிப்பெண்ணும், காவலுக்கு நூறு படை வீரர்களும் நியமிக்கப்பட்டனர். காண்போரைக் கவர்ந் திழுக்கும் உன்மத்தம் கொள்ள வைக்கும் வனப்புடையவ ளாகச் சித்திரா விளங்கினாள். அதனால், அவளை 'உன்மத்த சித்திரா' என அழைக்கலாயினர்.

## 9.1 பத்தகச்சானாவின் சகோதரர் வருகை

சக்கபாண்டுவும் ராணி சுசீமாவும்

அதேவேளை, கங்கைக்கரை அரசனான சக்கபாண்டுவும் அவனது ராணி சுசீமாவும் தங்களது மகளான பத்தகச் சானாவின் நலமறிய விரும்பி, மூத்தவன் கமணி தவிர்ந்த ஏனைய புதல்வர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தனர். அவர்களைப் பண்டுவாசுதேவாவும் ராணி பத்தகச்சானாவும் மகிழ்வோடு வரவேற்றனர். அவர்கள் தங்களது சகோதரியை நீர்மல்க மகிழ்வோடு அரவணைத்தனர். பின்னர், இலங்கை யைச் சுற்றிப் பார்த்து, தாம் குடியேறக்கூடிய கிராமங்களை உருவாக்கிக் கொண்டனர். இராமா என்ற இளவரசன் குடியேறிய கிராமம் இராமகோணா எனப்பட்டது; விஜித்தன் என்பான உருவாக்கிய கிராமம் விஜிதகமம் என்றும், திக்காயு என்பான் உருவாக்கிய கிராமம் திக்காஜு என்றும், ரோகண என்பான் உருவாக்கிய கிராமம் ரோகணம் என்றும் அழைக்கப்படலாயின. அனுராதா என்பான் பெரியதொரு குளத்தை நிர்மாணித்து அதற்குத் தெற்கே ஒரு அரண்மனையையும் அமைத்து அதில் வசித்தான். பண்டுவாசுதேவா மன்னன் தனது மூத்த புதல்வன் அபயனை தனக்குப் பின் பட்டமேற்கும் யுவராஜனாக்கினான்.

## 9.2 உன்மத்த சித்திராவின் காதல்

திக்காகாமினி.

பத்தகச்சானாவின் ஒரு மகனான தீக்காயு என்பானின் மகனான திக்காகாமினி உன்மத்த சித்திராவின் பேரழகினைக் கேள்விப்பட்டு, தனது இரு அடிமைகளான கோபகசித்தன், காலவேலன் (இயக்கர்கள்) என்போரோடு, தலைநகரான உபதீசகமத்திற்கு வந்தான். மன்னனைச் சந்தித்துத் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். அவனை மன்னன் அரசபணியில் அமர்த்திக் கொண்டான். அரண்மனைச் சேவையில் அமர்ந்த அவனுக்கு உன்மத்த சித்திராவைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது.





உன்மத்த சித்திராவின் காதல்.

உன்மத்த சித்திரா, தனது கோபுர சிறைக்கூட யன்னலின் அருகில் நின்று அரண்மனையைப் பார்க்கும் வேளையில், திக்காகாமினியைக் காண நேர்ந்தது. காதல் மேவ, தனது பணிப்பெண்ணிடம் 'யார் அவன்?' என வினவினாள். 'உங்க ளுடைய மாமன் மகன் அவன்' எனப் பணிப்பெண் விடை யிறுத்தாள். பணிப்பெண் மூலம் இருவரும் தமது காதலைப் பரிமாறிக் கொண்டனர். ஒருநாள் யன்னலூடாக இரகசிய மாக கீழிறக்கப்பட்ட கயிற்றேணி மூலம், காமினி, உன்மத்த சித்திராவின் அறைக்குள் நுழைந்தான்; உறவு கொண்டனர். இரவு முழுவதும் அங்கே அவளுடன் தங்கி விட்டு பொழுது விடிய வெளியேறினான். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தன. அதனால் உன்மத்த சித்திரா கர்ப்பமுற்றாள். பணிப்பெண் மகாராணி பத்தகச்சனாவிடம் முழுவிடயத்தை யும் எடுத்துரைத்தாள். மன்னனுக்கும் செய்தி தெரியவந்தது. அவன் தனது புதல்வர்கள் அனைவரையும் கூடிக் கலந்தா லோசித்து, 'இனிச் செய்ய வேண்டியவை இவைதாம். சித்திராவை காமினிக்கே கலியாணம் செய்து வைப்போம் இவளுக்குப் பிறக்கும் பிள்ளை மகனாகவிருந்தால் அதனைக் கொன்றுவிடுவோம்' என முடிவு செய்தனர்.

கோபிகசித்தன் காலவேலன்

பிரசவ வேளை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில், திக்காகாமினி தனது அடிமைகளான கோபிகசித்தனை யும், காலவேலனையும் அழைத்துப் பிறக்கவிருக்கும் குழந்தையைப் பாதுகாக்குமாறு பணித்தான். அவர்களும்

© Dr. K. Kunarasa



**கந்தரோடை சமாதித்தூபிகள்:** கந்தரோடையில் காணப்படும் மிகப் புராதன பௌத்த தூபிகள். தமிழ்ப் பௌத்தர்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்துள்ளனர். பிரதம பிக்குகளை அடக்கம் செய்து கட்டப்பட்ட சமாதித் தூபிகள். மயானமிது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்போகதை.

தம்மை இயக்கர்களாக உருமாற்றி, கருப்பையிலிருக்கும் சிசுவைப் பாதுகாத்தனர். உன்மத்த சித்திரா ஏற்கனவே தனது பணிப்பெண் மூலம், தனக்குக் குழந்தை பிரசவமாகும் காலத்தில் பிரசவிக்கும் பெண்ணொருத்தியை ஒழுங்கு செய்திருந்தாள். உன்மத்த சித்திராவுக்கு ஒரு மகனும், ஒழுங்குபடுத்தியிருந்த பெண்ணுக்கு ஒரு மகளும் பிறந்தனர். தனக்குப் பிறந்த மகனுடன் ஆயிரம் பொற்காசுகளையும் சேர்த்து மகனைத் தன் பணிப்பெண் கும்போகதையிடம் வழங்கிவிட்டு, ஒழுங்குபடுத்தியிருந்த பெண் சிசுவைத் தன்னருகில் தனக்குப் பிறந்த மகளாக வளர்த்திக் கொண்டாள். 'சித்திராவுக்குப் பெண் மகவே பிறந்தது' எனக் கேள்விப்பட்டு மாமன்மார் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் தாய்க்கும், அவளது தாய்க்கும் பிறந்தது மகன் என்பது தெரிந்திருந்தது. அதனால் பேரனின் பெயரையும் யுவராஜாவின் பெயரையும் (பண்டுவாசுதேவன், அபயன்) இணைத்து பண்டுகாபயன் எனக் குழந்தைக்குப் பெயரிட்டனர்.

பண்டுகாபயன் பிறப்பு.

© Dr. K. Kunarasa



**புத்தர் சிலை:** அநுராதபுர அருங்காட்சிச்சாலையிலுள்ள புத்தர் சிலை. யாழ்ப்பாண வல்லிபுரம் பகுதியிலிருந்து பெறப்பட்டது.





அபயன் மன்னனாதல்.

பண்டுவாசுதேவா முப்பது வருடங்கள் ஆட்சி புரிந்தான். பண்டுகாபயன் பிறந்தபோது, மன்னன் மரணமடைந்தான். எல்லாரும் கூடி, பண்டுவாசுதேவாவின் மூத்த மகன் அபயனை மன்னனாக்கினர்.

## 9.3 ஆரிய குடியேற்றங்கள்

விஜயன் கி.மு 483 தொட்டு 445 வரை அரசாண்டான் எனக் கணிப்பர். பண்டுவாசுதேவா கி.மு. 444 இலிருந்து கி.மு 414 வரை முப்பதாண்டுகள் ஆட்சி புரிந்துள்ளான். இருவருக்குமிடையில் ஓராண்டு மன்னராட்சி நிலவவில்லை. கௌதம புத்தர் பரிநிர்வாணமடைந்த ஆண்டையும், விஜயன் இலங்கைக்கு வந்த காலத்தையும் ஒன்றாகக் கருத வைப்பதில், மகாவம்ச ஆசிரியர் விரும்பியதால், இலங்கையை ஆண்ட மன்னர்களின் ஆட்சிக் காலத்தின் நம்பகத்தன்மை ஊறுபடுவதைப் பின்னர் காணமுடியும்.

இரு ஆரியக்குடியேற்றங்கள் கி.மு 445 உக்கும் கி.மு 414 உக்கும் இடையில் நிகழ்ந்துள்ளன. ஒன்று பத்தகச்சனாவினதும் அவள் பரிவாரங்களினதுமாகும். மற்றையது பத்தகச்சனாவின் சகோதரர்களினதும் அவர்களது



**எல்லாளன் - துட்டகாமினி யுத்தம்:** தம்புள்ள ஓவியம் (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணக்கதை.

பரிவாரங்களினதுமாகும். பத்தகச்சனாவின் சகோதரர்கள் அமைத்துக் கொண்டதாகக் குறிப்பிடப்படும் கிராமங்களில் உருவெலை, அனுராதகமம், விஜித்தபுரம் ஆகியன விஜயனின் அமைச்சர்களால் உருவாக்கப்பட்டவை என மகாவம்சம் முன்னைய அதிகாரங்களில் குறிப்பிட்டுள்ளது. எனவே, விஜயனின் அமைச்சர்களால் உருவாக்கப்பட்டு, அழிந்த நிலையிலிருந்த கிராமங்களைப் பத்தகச்சனாவின் சகோதரர்கள் புதுப்பித்தனரெனக் கொள்ளலாம். மேலும், உன்மத்த சித்திரா - திக்காகாமினி சம்பந்தமான கதை ஏற்கனவே வழக்கிலுள்ள தேவகி - வாசதேவர், கம்சன் - கிருஷ்ணன் சம்பந்தமான புராணக் கதையாகும். பண்டு காபயனின் பின்னால் விபரிக்கப்படவிருக்கும் வாழ்க்கையிலும் இதே புராணக்கதை தொடராகக் கையாளப்பட்டுள்ளது என்பதை மனதிற் கொள்ளவும்.

# 10. பண்டுகாபயன்

மகாவம்சத்தில் பத்தாவது அதிகாரம் பண்டுகாபயன் பற்றியதாகும். அவன் வளர்ந்த விதம், எதிர்கொண்ட இடர்கள், மன்னனாகியமை என்பவற்றினை விலாவாரியாக விபரிக்கிறது. அதற்காக மகாவம்ச ஆசிரியர் 106 செய்யுட்களைப் பயன்படுத்தியுள்ளார்.

உன்மத்தசித்திராவின் பணிப்பின்படி பிறந்த குழந்தையை ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு, பணிப்பெண்ணான கும்போகதை என்பாள் துவரமண்டலத்தைச் சென்றடைந் தாள். (சேத்தியமலைக்கு அருகிலுள்ள கிராமம்) அவ்வேளை வேட்டைக்காக தும்பறைக் காட்டிற்கு வந்திருந்த மாமன்மா ரான இளவரசர்கள் அப்பணிப் பெண்ணையும் அவள் காவிவரும் கூடையையும் கண்டனர். 'இதனுள் யாது உள்ளது?' எனக் கேட்க, 'துவரமண்டலத்தி லுள்ள என் மகளுக்கு இனிப்புப் பலகாரங்கள் கொண்டு செல்கிறேன்' என்றாள். 'அவற்றை வெளியில் எடு' என இளவரசர்கள் கட்டளையிட்டனர். பணிப்பெண் தயங்கி நின்றவேளை, அச் சிசுவிற்குக் காவலாக வந்துகொண்டிருந்த கோபகசித்தனும், காலவேலனும் (யஷ்சர்) ஒரு காட்டுப் பன்றியை இளவரசர்





இரட்டைக் குழந்தைகள் பிறந்தனவென அறிவிப்பு.

பார்வையில் பட வைத்தனர். உடனே, பணிப்பெண்ணையும் அவள் காவிவந்த கூடையையும் மறந்த இளவரசர்கள், அக்காட்டுப் பன்றியை வேட்டையாடும் அவாவுடன் துரத்திச் சென்றனர். பணிப்பெண் கும்போகதை, சிசுவை எடுத்துக் கொண்டு, துவாரமண்டலத்தை அடைந்து, ஒப்படைக்குமாறு ஏற்கனவே தெரிவித்திருந்த நம்பிக்கைக்குரிய இடையனிடம் ஆயிரம் பொற்காசுகளோடு ஒப்படைத்தாள். அவ்வேளை, அந்த மனிதனின் மனைவியும் ஒரு மகவைப் பெற்றெடுத் தாள். 'என் மனைவிக்கு இரட்டைக்குழந்தைகள் பிறந்துள் ளன' என அம்மனிதன் ஊருக்கு அறிவித்து வளர்த்தான்.

## 10.1 பண்டுகாபயனின் இளமைக்காலம்

பண்டுகாபயனுக்கு ஏழு வயதாகியபோது, அவனது மாமன்மார்களுக்கு உன்மத்தசித்திராவுக்குப் பிறந்தது ஆண்குழந்தை என்பதும் அது இன்னமும் உயிருடனுள்ளது என்ற உண்மையும் தெரியவந்தது. அதனால், 'துவர மண்டலத்திலுள்ள ஏழு வயதுள்ள ஆண்பிள்ளைகள் அனைவரையும் கொன்றுவிடுக' எனப் படையாட்களை ஏவி விட்டனர். துவரமண்டலத்தின் குளக்கரையில் பண்டுகாபய னும் அவன் வயதொத்த சிறுவர்களும் விளையாடுவது



**தம்புள்ளை ஓவியம்:**
துட்டகாமினி யானைமேலேறி எல்லாளனுக்கு எதிரான யுத்தத்திற்குச் செல்லல்.
(நன்றி : தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் கொல்லப்படல்.

வழக்கம். அவ்வேளை குளத்தினுள் இறங்கி, சுழியோடும் திறனுடைய பண்டுகாபயன் குளத்தினுள் வளர்ந்திருந்த ஒரு மரத்தினடியிலுள்ள துவாரப் பொந்தினுள் தன்னை மறைத்து நீண்ட நேரம் மூச்சடக்கி இருக்கப் பழகியிருந் தான். இளவரசனின் ஏவற்படையினர் வந்தவேளை பண்டுகாப யன் துவாரப்பொந்தினுள் தன்னை மறைத்துக்கொண்டான். ஏவலாட்கள் விளையாடிக் கொண்டிருந்த ஏனைய சிறுவர் கள் அனைவரையும் கொன்றுவிட்டு, ‘அனைவரும் கொல்லப் பட்டனர்’ என இளவரசர்களுக்கு அறிவித்தனர். கொலையா ளிகள் சென்றதும் வெளியே வந்த பண்டுகாபயன், வளர்ப்புப் பெற்றோரிடம் திரும்பி வந்தான். எதுவித அச்சமு மின்றி வளர்ந்து பன்னிரண்டு வயதினை அடைந்தான். மந்தைகள் மேய்ப்போருடன் தன் பொழுதைக் கழித்தான்.

பண்டுகாபயனின் மாமன்மார் தங்களது மருமகன் இன்னமும் உயிருடன் உள்ளான் என எவ்வாறோ தெரிந்து கொண்டனர், அதனால், துவாரமண்டலத்திலுள்ள பன்னிர

© Dr. K. Kunarasa



**துட்டகாமினி:**
மகாதூபியிலுள்ள துட்டகாமினி சிலை. மகாவம்சத்தின் கதாநாயகன்.






பன்னிரண்டு வயதிற்கு மேற் பட்ட அனைத்துச் சிறுவர் களையும் கொல்லுமாறு பணிப்பு.

ண்டு வயதொத்த அனைத்து இடையர்களையும் கொன்று விடுமாறு ஆட்களை ஏவிவிட்டனர். அந்தவேளை, இடையச் சிறுவர்கள் ஒரு மானை வேட்டையாடிவிட்டு, கிராமத்திற்குச் சென்று, மானை வாட்டி உண்பதற்கு ஏதுவாக நெருப்பு எடுத்து வருமாறு பண்டுகாபயனை அனுப்பி வைத்தனர். கிராமத் திற்கு வந்த பண்டுகாபயன் ‘எனக்கு நடக்கமுடியாதளவிற்கு கால் அடிபட்டுவிட்டது’ எனக்கூறி, நெருப்பினை எடுத்துச் செல்லுமாறு வளர்ப்புத் தந்தையின் மகனை அனுப்பி வைத்தான். அவனும் அவ்வாறே சென்றான். அந்நேரம் இடையச் சிறுவர்களைச் சூழ்ந்துகொண்ட கொலையாட்கள். அவர்கள் அனைவரையும் கொன்று சென்றனர்.

## 10.2. பிராமணக்குரு பண்டுலன்

பண்டுகாபயனுக்குப் பதினாறு வயது நடக்கும்போது,

© Dr. K. Kunarasa



**மகாதூபி:**
மகாவிகாரையின் மையம் மகாதூபியாகும். இதனை ருவான்வெலிசாயா எனவும் அழைப்பர். புத்தரின் உடல் தாதுவை (எலும்பு) வைத்து இத்தூபியைத் துட்டகாமினி கட்டுவித்தான். நீர்த்துளி அமைப்பு. கட்டும்பணி கி.மு. 144 இல் ஆரம்பமானது. சத்தாதீசன் இதன் கட்டுமானத்தை நிறைவு செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணன் பண்டுலன்.

மாமன்மார்களுக்கு அவன் உயிருடன் இருக்கின்ற செய்தி தெரியவந்தது. அதற்குள் பண்டுகாபயனின் தாய் உன்மத்த சித்திரா, ஒரு நம்பிக்கையான அடிமையிடம் ஆயிரம் பொற் காசுகளை வழங்கி, இளவரசனை வேறொருவிடத்தில், பண்டுலன் என்ற பிராமணனிடம் சேர்ப்பிக்குமாறு அனுப்பி வைத்தாள். இப்பிராமணன் வேதபுராணங்கள் நன்கறிந்து தெளிந்த, செல்வம் மிக்க பிரதானியாவான். லங்காபுரிக்குத் தெற்கே, பண்டுலகமம் எனும் கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவனிடம் பண்டுகாபயன் அழைத்து வரப்பட்டான். 'நீயா பண்டுகாபயன்?' என்று பண்டுலன் விளம்ப, 'ஆம்...' என்றான் அவன். 'நீயே மன்னன். எழுபதாண்டுகள் இந்த நாட்டை ஆளப்பிறந்தவன்' எனப் பிராமணன் எதிர்கூர்வு செய்தான்.

பண்டுலனின் எதிர்கூர்வு.

பின் சகல போர்க் கலைகளையும், கல்விகேள்விகளையும் அவனுக்கும், அவனோடு தனது மகனான கந்தாவுக்கும் கற்பித்தான். 'கந்தாவே உனது புரோகிதனும் முதலமைச் சனுமாவான்' எனப் பண்டுலன் இளவரசனுக்கு எடுத்துரைத் தான். பயிற்சிகள் முடிந்ததும் பண்டுலன் ஆயிரம் பொற்காசு களை இளவரசனிடம் வழங்கி, ஐநூறு வீரர்கள் கொண்ட படையணி ஒன்றினை உருவாக்கினான். 'எப்பெண் இலையைத் தொடும்போது பொன்னாக மாறுகிறதோ, அவளே உன் ராணியாவாள்' எனக்கூறி ஆசீர்வதித்து காசா மலைக்கு அருகிலுள்ள பானா நகரத்திற்கு அனுப்பி வைத்தான். (அனுராதபுரத்திற்குத் தென்கிழக்கு 18 மைல் தூரத்திலுள்ள ககாமலை எனக் கெய்கர் அடையாளம் காண்பார்) அங்கு எழுநூறு வீரர்களைத் தன் படையில் சேர்த்துக் கொண்டான். மொத்தமாக ஆயிரத்து இருநூறு வீரர்கள் கொண்ட படையுடன், கிரிகந்தைமலை நோக்கிப் பண்டுகாபயன் முன்னேறினான்.

## 10.3 சுவர்ணபாலி

கிரிகந்தசிவன்.

பண்டுவாசுதேவா மன்னனால், இறைவரி வசூலிக்கும் அதிகாரியாக கிரிகந்தை மலைப்பிரதேசத்தில் விளங்கியவன் கிரிகந்தசிவன் ஆவான். இவன் பண்டுகாபய னின் மாமன் முறையானவன். அவனுக்கு பாலி என்ற பேரழகு மங்கை மகளாவாள். கிரிகந்தசிவன் பாரிய வயலொன்றின் அறுவடை நடவடிக்கைகளை தன் பணியாட்





பண்டுகாபயன் - பாலி சந்திப்பு.

களுடன் மேற்பார்வையிட்டு வரும் வேளை, தந்தைக்கும் பணியாட்களுக்குமான உணவை எடுத்துக்கொண்டு தன் பணியாட்கள் சூழ்ந்துவர பாலி ஒரு பல்லக்கில் பயணப்பட்டு வந்தாள். பண்டுகாபயனின் படை அவளை எதிர்கொண்டது. 'யார் நீ?' என அந்த அழகியை அவன் விசாரித்தான். அவள் தன்னை யாரெனக் கூறி, தந்தைக்கும் பணியாட்க ளுக்கும் உணவு கொண்டு செல்வதாக எடுத்துரைத்தாள். 'எங்களுக்கும் பசியாக உள்ளது. உணவு தருக' எனப் பண்டுகாபயன் கேட்க, அவள் தங்கக்கலசம் ஒன்றில் சோறிட்டு அவனுக்கு வழங்கினாள். ஏனையோருக்கு அமுது படைக்க, வாழையிலைகளை எடுத்தபோது அவை தங்கக் கோப்பைகளாக மாறின. அந்த அதிசயத்தைக் கண்ட பண்டுகாபயன், பிராமணக் குருவின் தூரதிருஷ்டியை எண்ணிக் கொண்டான். 'இவளே என் மகாராணியாவாள்' என முடிவு செய்தான். எல்லாரும் உணவு உண்டும், கொண்டு வந்த உணவு கொஞ்சமும் குறையவில்லை. தொட்டதும் வாழையிலை தங்கக்கலசமாக மாறியதால், இவள் பின்னர் சுவர்ணபாலி என அழைக்கப்பட்டாள். (சுவர்ணம் - தங்கம்)

பண்டுகாபயன், அவளைக் கவர்ந்து தன் தேரில் ஏற்றிக் கொண்டு தன் படை சூழ்ந்துவர முன்னேறியபோது, கிரிகந்தசிவன் தன் படையுடன் அவனை எதிர்கொண்டு தோல்வியைத் தழுவ நேர்ந்தது. யுத்தம் நிகழ்ந்த அவ்விடம் பின்னர் கலகநகர் என்னும் கிராமமாக மாறியது.

© Dr. K. Kunarasa



மகாதூபி:
இன்னொரு தோற்றம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்ணபாலியின், ஐந்து சகோதரர்களும் லோகித்வாக கந்தை எனுமிடத்தில் மோதியபோது, பண்டுலனின் மகன் கந்தாவினால் கொல்லப்பட்டனர்.

மாமன்மாருடன் யுத்தம்.

பண்டுகாபயன் தனது சேனாவீரர்களுடன் மகாகங்கையை (மகாவலி)க் கடந்து, தொலாமலையை அடைந்தான். அவ்விடத்தில் நான்கு வருடங்கள் பாசறை அமைத்துத் தங்கினான். அவன் படையுடன் வந்திருக்கும் செய்தியை அறிந்த மாமன்மார், மன்னன் அபயனை உபதீசகமவில் இருத்திவிட்டு, போருக்கு ஆயத்தமாகிப் புறப்பட்டனர். தூமரக்கைமலைக்கோட்டையில் தங்கி யுத்தத்திலீடு பட்டனர். பண்டுகாபயன் தன் மாமன்மாரை அடித்து விரட்டி

© Dr. K. Kunarasa



மகாதூபி:
மகாதூபியின் இன்னொரு தோற்றம்.






விட்டு தூமரக்கைக்கோட்டையில் மேலும் இரண்டாண்டுகள் தங்கியிருந்தான்.

அபயனின் தம்பி தீசன் அரசனாகுதல்.

தோல்வியடைந்த இளவரசர்கள், உபதீசகமத்திற்குத் திரும்பிச் சென்று மன்னன் அபயனிடம் செய்தியைத் தெரிவித்தனர். மன்னன் இரகசியமாக ஓராயிரம் பொற்காசு களையும், 'நீ கைப்பற்றிய நதிக்கு அப்பாலுள்ள பிரதேசத்தை ஆள்வாயாக. நதிக்கு இப்பால் படையெடுத்து வராதிருப்பா யாக' என்ற செய்தியடங்கிய ஓலையையும் ஒரு தூதுவன் மூலமனுப்பி வைத்தான். இதனை அறிந்த ஒன்பது இள வரசர்களும், 'எவனைக் கொல்வதற்காகக் காத்திருக்கின் றோமோ, அவனிடம் அரசை ஒப்படைத்து விட்டாய். இனியும் நீ மன்னனாக இருக்கமுடியாது' என அபயனிடம் கூறியபோது, அவன் ஆட்சியிலிருந்து விலகிக் கொண்டான். அடுத்த மூத்தவனான தீசன் என்பான் ஆட்சியாளனாகினான். இவ்வாறு அபயனின் இருபது வருட ஆட்சி முடிவுக்கு வந்தது.

## 10.4 சேதிய புரவி

சேதியா என்ற யக்ஷணி தூமரக்கை மலையில் வாழ்பவள்; அவள் அழகிய குதிரை வடிவில் தும்பரியங் கனை என்றவிடத்தில், ஒரு குளத்தினருகில் மேய்ந்து



தங்கத்தூபி:
சமயச்சடங்குகளுக்காக உபயோகிக்கப்படும் தங்கத்தூபி. கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. மகாதூபி மகாவிகாரையில் உள்ளது.
(நன்றி : தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத்திய புரவியை அடக்கியமை.

கொண்டிருந்தாள். செந்நிறக் கால்களோடு கூடிய வெண்ணிறமான அக்குதிரையைக் கண்ட ஒருவன், பண்டுகாபயனிடம் அது குறித்துத் தெரிவித்தான். பண்டுகாபயன் கயிற்றுடன் புறப்பட்டுச் சென்று, அப்பரியை அணுகினான். மகாவம்சம் சேதிய குதிரை இளவரசனைப் படுத்தியபாட்டினை விபரிக்கின்றது. தூமரக்கை மலையைப் பலதடவை சுற்றி வந்தது. மகாகங்கையில் பலதடவை குதித்து அமிழ்ந்தி கரையேறியது. பண்டுகாபயன் களைக்காமல் அதனைத் தொடர்ந்து மகாகங்கையில், கச்சகதுறையில் அக்குதிரையைப் பற்றினான். மகாகங்கையில் மிதந்து வந்த பனைஓலைச் சார் ஒன்றினைப் பற்றியபோது அது அவனது நல்வினையால் அற்புதமான வாளாகியது. 'நீ இன்னமும் என்னை அலைக்கழிக்கில் இந்த வாளால் உன்னைக் கொன்றுவிடுவேன்' என்று இளவரசன் திடமாகக் கட்டளையிட்டதும், 'எனனைக் கொல்லாது விடில் இராச்சியத்தைக் கைப்பற்ற உதவுவேன்' என்று உறுதி கூறியபின் சேதிய யக்ஷிணி அடங்கினாள். இளவரசன் அக்குதிரைக்குக் கடிவாளமிட்டுத் தன் வசப்படுத்திக் கொண்டான். அதன்பின் அக்குதிரைமீது அமர்ந்து இளவரசன்,தூமரக்கைக் கோட்டைக்கு மீண்டு அவ்விடத்தில் மேலும் நான்கு ஆண்டுகள் கழித்தான். அதன்பின் சேனையை நடாத்தி அரித்தாமலைக் கோட்டையைக் கைப்பற்றி, அதில் ஏழாண்டுகள் கழித்தான்.

## 10.5 முடிசூடுதல்

சமாதானத் தூது.

அபயனையும் கிரிகண்டசிவனையும் தவிர்ந்த மற்றைய எட்டு மாமன்மார்களும் தம் சேனா வீரர்களோடு அரித்தா மலைக்கோட்டையை முற்றுகையிட்டனர். பண்டுகாபயன் தனது யக்ஷிணியோடு கலந்தாலோசித்து, மாமன்மார் களுக்குப் பரிசுப்பொருள்களை ஒரு பகுதி சேனாவீரர்களு டன் அனுப்பி, 'என்னை மன்னித்துவிடுங்கள். நாம் சமாதானமாவோம்' என அறிவித்தான். மாமன்மார் அதனை ஏற்காமையால் யுத்தம் மூண்டது. மாமன்மார்களும் அவர்களுடன் வந்த சேனாவீரர்களும் மாண்டனர். பிரதான தளகர்த்தன் காட்டிற்குள் ஒரு புதருக்குள் ஓடி ஒளிந்தான். அவ்விடம் பின்னர் சேனாபதிகும்பம் எனப்பட்டது.





லபுகமம்.

யுத்தத்தில் மரணமடைந் தவர்களின் சிரசுகள் ஒரு பெரும் பழக்கும்பமாகக் குவிந்து கிடந்ததால், அவ்விடம் பின்னர் லபுக்கம (ரித்தலவுக்கு வடமேற்கே லபுனொறுவா) எனப் பெயர் பெற்றது. (லபு - பழம்)

பண்டுகாபயன் மன்னனாகுதல்.

இப்போரில் வெற்றி பெற்றதும் பண்டுகாபயன், அனுராதகமத்திற்குப் படையோடு சென்றான். அவனின் மாமன் அனுராதன் தன் அரண்மனையை ஒப்படைத்துவிட்டு வெளியேறினான். பண்டுகாபயன், அனுராதகமத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். அனுராதபுரத்தின் முதல் மன்னன் இவனே. உபதீசகமத்திலிருந்து அரச பட்டுக் குடையை வரவழைத்து அனுராதகமத்திலிருந்த புனித தீர்த்தக்குளத்தில் அதனைத் தூய்மைப்படுத்தி சிம்மாசன மேறினான். சுவர்ணபாலி அவனது பட்டமகிஷியாகினாள். பண்டுலன் குருவின் மகன் சந்தா அமைச்சனாகினான்.

## 10.6 இயக்கமன்னன் சித்தராஜா

பண்டுகாபயன் அனுராதகமத்தை நகரமாகக் கட்டமைத்தான். அவன் தாயின் வேண்டுகோளுக்கிணங்க, மூத்த மாமன் அபயனை அவன் கொல்லாது விட்டான். அவனை அனுராதகமத்தின் 'நகரகுத்திகன்' (நகரகாவலன்) ஆக்கிக் கௌரவித்தான். அத்தோடு தன் மனைவி சுவர்ண பாலியின் தந்தையான கிரிகந்தசிவனுக்கு கிரிகந்தையை மீண்டும் அளித்தான். பெரியதொரு குளத்தை உருவாக்கி

© Dr. K. Kunarasa



**மகாதூபி:**
மகாதூபியைச் சுற்றியுள்ள மேடையின் நான்கு பக்க மூலைகளிலும் சிறிய தூபிகள் நான்குள்ளன. மகாதூபியின் பிரமாண்டத்தை உணர்த்தும் வகையில் இவையுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதற்குத் தனது வெற்றியைக் குறிக்கும் விதத்தில் 'ஜய வாவி' (ஜய - வெற்றி) எனப் பெயரிட்டான். தனக்குப் பலவிதங் களிலும் உறுதுணையாகவிருந்த கணங்களான காலவேலன், சித்தன் ஆகியோருக்கு நகரத்தின் கிழக்குப் பக்கத்தில் ஆலயங்கள் அமைப்பித்தான். இயக்கர்களின் தலைவனான சித்தராஜாவை அபயக் குளத்திற்கு அருகே குடியமர்த்தி னான். தனது குழந்தைப் பருவத்தில் தன்னைக் காப்பாற்றி உரியவரிடம் ஒப்படைத்த அடிமைப்பெண், இப்பிறப்பில் இயக்ககுலத்தில் பிறந்திருந்தாள். அவளை அனுராதபுரத் தின் தென்வாயிலில் குடியமர்த்தினான். தனது குதிரையாக விளங்கித் தனக்கு உதவிய சேதிய யக்ஷிணியை அரண்மனை வளாகத்தினுள் ஆலயம் அமைத்து இருக்கச் செய்தான். பண்டுகாபயன் தனது மக்களையும், இயக்க மக்களையும் சமமாக நேசித்தான். விழாக்காலங்களில் சமமான உயர ஆசனங்களில் பக்கம் பக்கமாக (சிங்கள ஆரிய) மன்னன் பண்டுகாபயனும், இயக்க மன்னன் சித்த ராஜாவும், அமர்ந்திருப்பர். தேவர்களும் (ஆரியர்), மனிதர் களும் (இயக்கர்) ஆடும் நடனங்களைக் கண்டு களிப்பர்.

இயக்க ஆலயங்கள்.

## 10.7 பண்டுகாபயனின் பணிகள்

பண்டுகாபயன் அனுராதபுர நகரத்தில் நான்கு புற நகர்களை உருவாக்கினான். அபயக்குளம் (பசவக்குளம்), பொதுமயானம், மரணதண்டனை வழங்கும் கொல்களம்,

© Dr. K. Kunarasa



மகாதூபி:
ருவான்வெலிசாயாவின் நுழைவாயிலிலுள்ள சிறிய தூபி ஒன்று.






அரசராணிகளுக்கான அந்தப்புரம் என்பனவற்றை அமைப்பித்தான். வைஸ்சாவனா என்ற தெய்வத்திற்கு அரச மரத்தடியிலும், வைத்தியதேவனுக்கு ஒரு பனை மரத்தடியிலும் கோயில்கள் எடுப்பித்தான். இவை நகரத்தின் மேற்கு வாயிலில் உருவாக்கப்பட்டன. மேலும் நகரத்தினை சுத்திகரிப்பதற்காக ஐநூறு சண்டாளர்களை யும் (இழிகுலத்தோர்), இருநூறு சண்டாளர்களை நகரத்தின் இரவுக் காவலுக்கும், நூற்றியம்பது சண்டாளர் களைப் பிரேதம் காவிகளாகவும், அதே எண்ணிக்கையான சண்டாளர்களை மயான பரிபாலகராகவும் நியமித்தான்.

வைஸ்சாவனா வைத்திய தேவன்.

மயானத்திற்கு மேற்கே சண்டாளர்கள் வசிப்பதற்கென ஒரு கிராமத்தைத் தாபித்தான். இக்கிராமத்திற்கு வட கிழக்கே அவர்களுக்கான மயானம் அமைந்தது. மயானத் திற்கு வடக்கே பாசானமலைக்கு இடையில் மன்னனின் கோட்டைக் காவலர்களுக்கான வீடுகள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு வடபுறமாக காமினி குளம் அமைந்திருந்தது. (கரம்பவாகுளம்) அத்துடன் வெவ்வேறு மதத்துறவிகளுக்கான ஆச்சிரமங்களும் அமைத்து வழங்கினான். அதே மயானத்திற்குக் கிழக்கே ஜோதியா என்ற பிராமணனுக்கு இல்லமொன்று வழங்கி னான். அதே பகுதியில் கிரி என்ற சமணனுக்கு வதிவிடம் ஒன்று வழங்கினான். அப்பிரதேசத்தில் கும்ஹண்டா என்ற துறவிக்கு ஓர் ஆலயமும் அமைத்தான். இக்கோயிலுக்கு

குடியிருப்புகள்.

© Dr. K. Kunarasa



மகாதூபி:
யானைகள் வரிசை மதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காயும் வேட்டையாடுபவரின் குடிமனைக்கு கிழக்காயும் வேறு சமயங்களைப் பேணுகின்ற ஐநூறு பேருக்கு இருப்பிடங்கள் அமைத்துக் கொடுத்துள்ளான். ஜோதியா இல்லத்திற்கும் காமினி குளத்திற்கும் இடையில் பரதேசிகளாக அலையும் துறவிகளுக்காக ஒரு விடுதி அமைத்தான். அதேபோல சிவனை வழிபடுகின்ற பிராமணர்களுக்காக ஒரு விடுதியும், நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்காக இன்னொரு விடுதியும் அமைப்பித்தான்.

துறவிகளுக்கான விடுதி.

பண்டுகாபயனின் பன்னிரண்டாவது ஆட்சிக்காலத்தில், இலங்கையின் அனைத்துக் கிராமங்களும் தெளிவான எல்லைகளால் வரையறுக்கப்பட்டன. அவனோடு இயக்கர்களான காலவேலனும், சித்தராஜாவும் அவர்களது மக்களும் கட்புலனான வடிவில் மனிதர்களாக வாழவும் தலைப்பட்டனர். அபயனுக்கும் பண்டுகாபயனுக்கும் இடையில் பதினேழு வருடங்கள் ஆட்சியாளர்களான அரசர்கள் இருக்கவில்லை. பண்டுகாபயன் தனது முப்பத்தேழாவது வயதில் அனுராதபுரத்தில் முடி தரித்து, எழுபது ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் என மகாவம்சம் கூறுகிறது.

## 10.8 இயக்க கோயில்கள்

பண்டுகாபயன் கி.மு 377 ஆம் ஆண்டு முடிதரித்து கி.மு 307 ஆம் ஆண்டு வரையிலான எழுபது ஆண்டுகள் ஆண்டுள்ளதாக மகாவம்சம் மூலம் அறிய வருகின்றது. அவன் முப்பத்தேழாவது வயதில் அரசுரிமை பெற்றிருப்பதால், இறக்கும்போது அவனுக்கு வயது 107 ஆகும். இது ஐயத்திற்குரியதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டாலும், வியப்புக்குரியதன்று. 107 ஆண்டுகள் வாழ்தல் அசாத்தியமன்று. பண்டுகாபயனின் இளமைக் காலக் கதைகள் புராணக் கதையொன்றின் தழுவலே. நம்பகமற்ற விடயங்கள் பல அவற்றிலிருந்தாலும், பண்டுகாபயனின் அரசுரிமைப் போராட்டம் திடீரெனக் கனியாகவில்லை. நீண்டகாலம் எடுத்த ஓயாத போராட்டம் என்பதால், பண்டுகாபய மன்னன் கற்பனையாகான் என வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுவர்.

பண்டுகாபயன் கற்பனையல்ல.

பண்டுகாபயன் காலத்தில் சித்தராஜா போன்ற இயக்கச் சிற்றரசர்கள் இருந்துள்ளனர் என்பதையும், இயக்க மக்கள்





சிங்கள மக்களுடன் சரிசமனாக வாழ்ந்துள்ளனர் என்பதும் தெளிவாகின்றது. அவனது பணிகளிலிருந்து, பலவேறு சமயக் குரவர்களும் அவனாட்சியில் பாதுகாக்கப்பட்டுள்ளனர். அவரவருக்குரிய வீடு, விடுதி, கோயில் என்பன மன்னனால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. தனக்குதவி செய்த அசாத்தியத் திறமை பெற்ற இயக்கர்களுக்கு அனுராதபுரத்தில் அவன் கோயில்கள் அமைத்துள்ளான். அபயக்குளத்திற்கு அருகில் சித்தராஜாவுக்கும், நகரத்தின் கிழக்கு வாயிலில் காலவேலனுக்கும் தென்வாயிலில் கும்போகதைக்கும், சேதியயக்ஷிணிக்கு அரண்மனைக் குள்ளும், நகரத்தின் மேற்கு வாயிலில் அரச மரத்தினடியில் வைஸ்சாவனாவுக்கும், பனை மரத்தினடியில் வைத்திய தேவனிற்கும் கோயில்கள் அமைத்துள்ளான். இவர்கள் பௌத்தமதத் தெய்வங்களல்லர். வைஸ்சாவனாவைக் குபேரனாகவும், (கெய்கர்) வைத்திய தேவனை சிவனாகவும் (சிற்றம்பலம்) இனங்காணுவர். பண்டுகாபயனின் வரலாற்றிலிருந்து பௌத்தம் வருவதற்குமுன் இலங்கையிலிருந்த வழிபாட்டுமுறைகள், நம்பிக்கைகள் என்பனவற்றை அறியமுடிகிறது. லிங்க வணக்கம், நாக வணக்கம், விருட்ச வணக்கம், சைன மதம், பைசாச வணக்கம், இறந்தோரை வணங்கும் முறை என்பன இருந்துள்ளன.

சிங்கள மக்களுக்கு சரிநிகராக இயக்கர்கள்.

அபயனுக்கும் (கி.மு. 404 - கி.மு. 394) பண்டுகாபயனுக்கும் (கி.மு. 377 - கி.மு.307) இடையில் பதினேழு ஆண்டுகள் அரசனெவனும் ஆட்சியிலில்லை என மகாவம்சம் கூறுகிறது.

© Dr. K. Kunarasa



**அரசன் - அரசி - அமைச்சன் - சேவகன்:** அநுராதபுரக்காலச் சிற்பம் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அது தவறு. அக்காலகட்டத்தில் கி.மு. 394இல், அபயனை ஆட்சியிலிருந்து விலகச் செய்துவிட்டு, அவனது தம்பியாகிய தீசன் அரசபீடத்தில் அமர்ந்து கி.மு. 377 வரை ஆண்டுள்ளான் என்பதையும் மகாவம்சம் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளது.

# 11. தேவநம்பிய தீசன்

முத்துசிவன் மன்னனாதல்.

மகாவம்சத்தின் பதினோராவது அதிகாரம் இலங்கை மன்னர்களில் அதி முக்கியமானவனான தேவநம்பிய தீச மன்னன் குறித்து விபரிக்கின்றது. பண்டுகாபயன் மரணமடைந்த பின்னர் அவனதும் சுவர்ணபாலியினதும் மகனான முத்துசிவன் என்பான் அரியணை ஏறினான். அவன் காலகட்டத்தில் இராச்சியம் மிக அமைதியானதாக விளங்கியது. அனுராதபுரத்தில் மகாமேகவனம் என்ற அழகிய தோட்டத்தை முத்துசிவன் அமைத்தான். பழமரங்களும், பூஞ்செடிகளும் அந்த மகாமேகவனத்தில் நிறைந்திருந்தன. அவ்விடத்தை இத்தோட்டத்தை அமைப்பதற்காகத் தெரிவு செய்தபோது, அசாதாரண காலநிலையாக பெரும் மேகம் கூடிக் கனத்த மழைப் பொழிவை வழங்கியதால் இத்தோட்டம் மகாமேகவனம் எனப் பெயர் பெற்றது.

அனுராதபுரத்திலிருந்து முத்துசிவன், அறுபது ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவனுக்குப் பத்துப் புதல்வர்களும் இரு புத்திரிகளும் அழகும் திறமையும் உடையவர்களாக



**லோகபாசாடா:**
கி.மு. 3ஆம் நூற்றாண்டில் போதிக்கோயிலில் வாழ்கின்ற பிக்குகளுக்காக தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்ட போயாமனையே லோகபாசாடா என்ற லோகமகாபயா ஆகும். இதன் கூரையோடுகள் பித்தளை முலாம் பூசப்பட்டிருந்தமையால் இதனைப் பித்தளை மாளிகை எனவும் அழைப்பர்.
(நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)





விளங்கினர். அவர்களுள் இரண்டாவது மகனான தீசன் அசாதாரண ஆற்றலும் அறிவுமுடையவனாக விளங்கினான். முத்துசிவனுக்குப் பின்னர் அனுராதபுரத்தின் மன்னனாக தீசன் முடிதரித்துக் கொண்டான். மகாகிறா (மார்கழி) மாதத்து முழுநிலவு நாளில் அவன் முடிதரித்துக் கொண்டபோது, பல நன்னிமித்தங்கள் ஏற்பட்டதென மகாவம்சம் கூறும். பூமியினுள் புதையுண்டிருந்த பெறுமதிமிக்க உலோகங்களும், வைரங்களும் தாமாகவே நிலமட்டத்திற்கு வந்தன. புதையல் நிறைந்த கப்பல் ஒன்று உடைந்து கரையொதுங் கியது. அனுராதபுரத்திற்குத் தென்புறமாக இரு ஜோஜனா தூரத்திலமைந்துள்ள சத்தாமலையில் தேர்த்துலாத் தடிப்பில் வெள்ளி, தங்க, பலவர்ணப் பூக்கள் நிறத்திலான மூங்கில்கள் மூன்று தோன்றின. எட்டு வகையான முத்துக்களான கயா, ஹாயா, ரதா, அமலகி, அங்குலி வைத்தக, கும்பக், வளைய, பரகதிக என்பன சமுத்திரத்திலிருந்து கரையொதுங்கின. இவையனைத்தும் தேவநம்பிய தீசனுக்கு வழங்கப்பட்டன. இவ்வளவு செல்வத்தையும் கண்ணுற்ற தீசன், ‘இப்பெறுமதி மிக்க செல்வங்களைப் பெறத்தகுதியானவர் எனது நண்பர் தர்ம அசோகரே ஆவார். இவற்றை அவருக்கு என் பரிசில்களாக அனுப்புவேன்’ என முடிவு செய்தான். அசோகனும் தீசனும் ஒருவரையொருவர் நேரில் சந்தித்தவர்களல்லர்; எனினும், முகம் காணாமலேயே நட்புடையவர்களாக இருந்தனர்.

தீசன் மன்னனாகிய போது ஏற்பட்ட நன்னிமித்தங்கள்.



**குஜ்ஜதீஸ்ஸ பர்வதம் (தூபி):**
அநுராதபுர நகரின் தென்வாயில் மகாதூபிக்கும் ஜேத்திவனராம தூபிக்குமிடையில் குஜ்ஜதீஸ்ஸ பர்வதம் அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11.1 தூதுக்குழு

மகா அரித்தன் தலைமையிலான தூதுக்குழு.

மன்னன் தீசன் ஒரு தூதுக்குழுவினைத் தெரிவு செய்தான். அதில் அவனுடைய மருமகனும் மூத்த அமைச்சனுமான மகா அரித்தன், அரசனின் பிராமணப் புரோகிதன், இன்னொரு அமைச்சர், அரச தனாதிகாரி ஆகியோர் அடங்கியிருந்தனர். மூவகை இரத்தினங்கள், அரச தேருக்கான மூங்கில் துலாக்கள் மூன்று, வலம்புரிச்சங்கு, எட்டு வகையான முத்துக்கள் ஆகியவற்றோடு இவர்கள் ஜம்புகோளத் துறையில் மரக்கலம் ஏறினர். பதினான்கு நாட்களின் பின்னர் பாடலிபுரத்தை அடைந்து, அசோகனிடம் இப்பரிசில்களை வழங்கினர். 'இவற்றிற்கு நிகரான செல்வம் இல்லை' என தர்ம அசோகன் மகிழ்ச்சியடைந்தான். அரித்தனுக்குச் 'சேனாதிபதி' எனவும், பிராமணனுக்குப் 'புரோகிதன்' எனவும், அமைச்சனுக்கு 'தண்டநாயக்கன்' எனவும், மற்றவனுக்குச் 'சேதி' எனவும் கௌரவப் பட்டங்களை வழங்கினான். அவர்களுக்கான பரிசில்களோடு மாளிகைகள் தரப்பட்டன. பின்னர் தன் அமைச்சர்களோடு கலந்து பேசி, தேவநம்பிய தீசனுக்குப் பரிசில்கள் அனுப்புவதென முடிவாகி, அரசனாக அபிஷேகம் செய்து கொள்வதற்கான பொருட்களான யாக் மயிர்களால் செய்யப்பட்ட பீலி விசிறி, மகுடம், உடைவாள், தங்கப் பாதுகைகள், குடை, தலைப்பாகை, காதணிகள், சங்கிலிகள், குடங்கள், சந்தனக்கட்டைகள், உயர்ந்த பட்டாடைகள், விலையுயர்ந்த துவாய்கள், நாகர்களிடமிருந்து பெறப்பட்ட பல்வகை ஆபரணங்கள், வாசனைத் தைலம், செம்மண், அனோதத்தை ஏரியிலும் கங்கையிலும் பெறப்பட்ட புனிதநீர், ஒரு அரச கன்னிப்பெண்,பல்வகைத் தங்கப் பாத்திரங்கள், பெறுமதியான அம்பாரி ஒன்று,அரிய மருந்துகள், பழவகைகள், நூற்றியறுபது மூடை மலை அரிசி என்பனவற்றைப் பரிசிலாக அனுப்பி வைத்தான். 'நான் புத்தனின் அடிமை. சாக்கிய முனியின் போதனைகளை உபாசிப்பவன். புத்தரிடத்தும் அவர் தர்மத்திலும் நான் சரணடைந்துள்ளேன். மனிதருட் சிறந்தவனே, உன் மனதையும் நம்பிக்கையுடன் மாற்றி மும்மணிகளிடம் (புத்தம், தர்மம், சங்கம்) நீயும் சரணடைவாயாக. நீயும் அவனது அருளாசிக்குட்படுவாயாக' என்ற செய்தியையும்





அசோகனின் தர்மச்செய்தி.

தூதுவர்கள் மூலம் அனுப்பி வைத்தான். இலங்கையிலிருந்து தூதுவர்களாக வந்த அரித்தன் முதலானோர் பாடலிபுரத்தில் ஐந்து மாதங்கள் தங்கியிருந்து, இலங்கைக்கு வர தமிலிற்றியாத்துறையில் கலமேறினர். ஜம்புகோளத் துறையை வந்தடைந்தனர். அசோகன் வழங்கிய பரிசில்களை அசோகனின் தூதுவர்கள் மன்னனிடம் வழங்கினர். தேவநம்பியதீசன் அசோகன் அனுப்பிய மகுடாபிஷேகப் பொருட்களைப் பயன்படுத்தி மீண்டும் ஒருமுறை தேவநம்பிய தீசன் என்ற நாமத்தோடு (கடவுளுக்குப் பிரியமான தீசன்) முடிபுனைந்து கொண்டான் என மகாவம்சம் கூறுகிறது.

## 11.2 தேவநம்பியதீசனுக்கு முந்தைய சமயநிலை

சீராகும் வரலாறு.

முத்துசிவன் கி.மு. 307 ஆம் ஆண்டு அரியணையேறி கி.மு.247 வரைஅறுபது வருடங்கள் ஆட்சி புரிந்துள்ளான். தேவநம்பியதீசன் கி.மு. 247 இல் அரியாசனம் ஏறினான். இந்த மன்னனது ஆட்சிக்காலத்திலிருந்தே இலங்கை வரலாறு ஓரளவு சீராகின்றது என்பர். ஜாதகக் கதைகள், மரபுக்கதைகள், மகாபாரதக் கதைகள் என்பவற்றோடு கூறப்பட்டு வந்த மகாவம்ச வரலாறு, தேவநம்பியதீசனின் பின்னர் நம்பகத் தன்மையுடையதாக மாறுகின்றது. தேவநம்பியதீசனுக்கு முன்னைய இலங்கையின் மதவழிபாடு தெளிவானது.



**தக்கினதூபி:** தக்கினதூபி அல்லது தென்தாதுகோபம் சிதைந்த நிலையிலுள்ள தோற்றம் இதுவாகும். (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ந்துமத வழிபாடுகள்.

நாகர்களில் பெரும்பாலோர் இந்துக்களாக (லிங்கவழிபாடும், நாகவழிபாடும்) விளங்கியுள்ளனர். ஒரு சிறு சாரார் பௌத்த மதத்தைக் கைக்கொண்டிருந்தனர். அதேபோல, ஏற்கனவே இலங்கைக்கு வந்திருந்த ஆரியர்கள் (தேவர்கள்) பௌத்த மதத்தைக் கைக்கொண்டிருந்தனர். புத்தரின் இலங்கை விஜயங்களால் ஏற்பட்ட மதமாற்றமிவை என்பதை மறந்துவிடக்கூடாது. இயக்க மக்கள் இயற்கை வழிபாட்டுடன், பைசாச வணக்கமுடையவர்களாக (ஆவி) விளங்கினர். சமணத்துறவிகள் (நிகண்டர்கள்), ஆஜீவர்கள் (ஒருமதம்) என்போரும் இருந்துள்ளனர். காலவேலன், சித்தரரிா, சேதிய, வைஸ்சாவனா, வைத்தியநாதன் போன்ற இயக்கத் தேவர்களும், தலவிருட்சத் தேவர்களும், வழிபடப்பட்டுள்ளனர். தேவநம்பியதீசன் கால பௌத்தமத வருகைக்குப் பின்னரும் இந்த வழிபாட்டு முறைகள் அழிந்து போகவில்லை. அவை தனித்துவமாக வளர்ச்சி பெற்றதுடன், பௌத்த வழிபாட்டுடனும் ஊடுருவிச் செறிந்தன.

# 12. மகிந்ததேரரின் வருகை

மகாவம்சத்தின் பன்னிரண்டாம் அதிகாரம், பௌத்த மதமானது உலகின் ஏனைய பாகங்களில் எவ்வாறு பரவியதென்பதை விளக்குகிறது. பதின்மூன்றாம் அதிகாரம் மகிந்ததேரரின் இலங்கை வருகையை விபரிக்கின்றது.

© Dr. K. Kunarasa



**தக்கின தூபி:**
தக்கின தூபியின் இன்றைய தோற்றம். புனருத்தாரணத்திற் குட்படவில்லை.





மகிந்த தேரரின் தேச சஞ்சாரம்.

மகிந்ததேரர் துறவறம் பூண்டு பன்னிரண்டு வருடங்களாகின. அவருடைய குருவிடமிருந்து அனைத்தும் கற்று, இலங்கையில் பௌத்தத்தைப் பூரணமாக நிறுவ ஏற்ற காலத்தை எதிர்பார்த்திருந்தார். 'மன்னன் முத்துசிவன் வயோதிபன். அவனது மகன் மன்னனாகட்டும்' எனக் காத்திருந்தார். அக்கால இடைவெளியில் தேசசஞ்சாரம் செய்ய விரும்பி தன்குருவிடமும், தந்தையான தர்ம அசோகனிடமும் விடைபெற்று, இட்டிய, உத்திய, சம்பல, பத்தசால ஆகிய நான்கு தேரர்களையும், சங்கமித்தாவின் மகனான சுமணனையும் (இளம் பிக்கு சுமணா) பண்டுகன் என்றொரு உபவாசியையும் அழைத்துக் கொண்டு

© Dr. K. Kunarasa



**தக்கினதூபி சிற்பத்தூண்:**
எல்லாளனின் சமாதியெனக் கூறப்படும் தக்கினதூபியின் சிற்பத்தூண் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கிணகிரிக்குச் சமயயாத்திரை மேற்கொண்டார். அவ் வகையில் ஆறு மாதங்கள் கழிந்தன. பின்னர் தன் தாய் தேவியைச் சந்தித்தார். அசோகனுக்கும் தேவிக்கும் பிறந்த பிள்ளைகளே மகிந்தரும் சங்கமித்தாவும் ஆவார். தாயிடம் மகிந்ததேரர் 'என் தந்தையின் வழிநடத்தலுடன் மும்மணி களையும் அறிந்த தேவநம்பியதீச மன்னன், பெரும் விழா வொன்றினை மிசாகாபர்வத (மிகிந்தலை) த்தில் ஜெற்றா (ஆனி) மாதத்தில் எடுக்கவுள்ளான். அவ்வேளை நாம் அங்கு செல்லவுள்ளோம்' என்றார். மகாராணி தேவியின் மருமக னான பண்டுகன் என்பான், மகிந்ததேரரின் உபதேசத்தில் தன்னை இழந்து அவருடன் சேர்ந்து கொண்டான். வைகாசி மாதப் பௌர்ணமி நாளில் அவந்தி நகரின் வேதிசகிரி நகரத்தி லிருந்து ஆகாயமார்க்க மாக அவர்கள் மிசாகா பரிவதத் தின் அம்பத்தாலா (சீலகுத்த) சிகரத்தில் வந்தடைந்தனர்.

வேதிசகிரியிலிருந்து மிசாக பர்வதம்.

## 12.1 மகிந்ததேரரும் மன்னனும்

தேவநம்பியதீசன் தனது பரிவாரங்களுடன் (நாற்பதாயிரம் என்கிறது மகாவம்சம்) கால்நடையாக மிசாக பர்வதத்திற்கு வந்திருந்தான். அந்த மலையின் தேவன், வருகை தந்திருக்கும் தேரர்களை மன்னனுக்குக் காட்ட விரும்பி, மான் வடிவில் எதிர்ப்பட்டான். மன்னன் அதனை வேட்டையாடத் துரத்தியபோது அம்மான் மிசாக பர்வதத்தின் அம்பத்தாலா சிகரம் மருங்காக ஓடி தேரரின் அருகே வந்து மறைந்தது. மகிந்ததேரர் மட்டும் காட்சி தந்தார். மகிந்ததேரர் 'தீசா, என்னருகில் வா' என்றழைத் தார். தன் பெயரைக்கூறி அழைப்பது, இயக்கனாகத்தான் இருக்கவேண்டும் என மன்னன் எண்ணமிட்டான். 'நாங்கள் தர்மராஜாவின் தூதுவர்கள். உன்மீதுள்ள கருணையால் ஜம்புத்தீவிலிருந்து இங்கு வந்துள்ளோம்' என்றபோது, தேவநம்பியதீசன் தனது கையிலிருநது வில்லையும் அம்பையும் கீழே வைத்துவிட்டு, அவரருகில் சென்று அமர்ந்தான். அவ்வேளை மகிந்ததேரருடன் கூடவே வந்தவர் களும் கட்புலனாகி அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

பௌத்த தர்மத்தை விளங்கிக் கொள்ளுமளவிற்கு தேவநம்பியதீசனிடம் அறிவுக் கூர்மையுள்ளதா என அறிய விரும்பிய மகிந்ததேரர், தேவநம்பியதீசனிடம் பல





வினாக்களைக் கேட்டு, அவனது அறிவுக்கூர்மையைச் சோதித்துத் திருப்தியடைந்தார். அதன் பின்னர் பௌத்த தர்மத்தின் ஒரு பகுதியான சுள்ளபத்தி பதோபம என்ற சூத்திரத்தை அவனுக்குப் போதித்தார். மன்னனுடன் கூடவே வந்த நாற்பதினாயிரம் ஆளணியினரும் மும்மணிகளின் உபாசகர்களாயினர்.

பௌத்தராகுதல்.

அன்றுமாலை மகிந்ததேரரையும் அவரது தர்மக் குழுவினரையும் மன்னன் தன்னுடன் தலைநகருக்கு வருமாறு அழைத்தான். அவர்கள் அன்றிரவு மிசாக பர்வதத்திலேயே தங்குவதாக அறிவித்தனர். பாண்டுகதேரர் மூலம், மகிந்தர் அசோகனின் மகனென அறிந்து மன்னன் பெருமகிழ்வெய்தி னான். மறுநாள் மன்னன் விடுத்த அழைப்பிற்கு இணங்க மகிந்தரும் ஏனையோரும் தலைநகருக்கு ஆகாயமார்க்க மாகச் சென்று, ஓரிடத்தில் இறங்கினர். நகரத்திற்குக் கிழக்கே அவர்கள் இறங்கியவிடத்தில் பின்னர் பத்மன சத்தியம் எனும் சத்தியம் கட்டப்பட்டது.

பத்மன சத்தியம்

அரண்மனையில் மகிந்ததேரரும் ஏனையோரும் மன்னனால் கௌரவமாக வரவேற்கப்பட்டனர். மன்னனால் அளிக்கப்பட்ட உணவை உண்டனர். பின்னர் அரச குடும்பத் தினரும் அரச நிர்வாகிகளும் நிறைந்த கூட்டமொன்றில் மகிந்ததேரர் பௌத்தமதப் போதனைகளை உரைத்தார். மன்னனின் தம்பி யுவராஜா மகாநாகன், அவனது மனைவி

© Dr. K. Kunarasa




நுவரவாவி: அனுரதபுரப் புராதன நகரின் கிழக்கே அமைந் துள்ள நுவரவாவி பெரிய தொரு குளமாகும். பல மன்னர்களால் காலத்துக் குக்காலம் கட்டியமைக்கப் பட்டது. ஜோதக் கால்வாய் மூலம் காந்தார நதியிலி ருந்து (அருவியாறு கதம்ப நதியின் ஒரு கிளை) நீரைப்பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராஜா மகாநாகன்.

அனுலா ஆகியோரும் கலந்து கொண்டனர். அனுலாவுடன் ஐநூறு பெண்களும் கூடிவந்து போதனையைக் கேட்டனர். நகரத்தில் வாழ்ந்த மக்கள் செய்தி தெரிந்து அரண்மனை வாயில்களில் திரளாகக் கூடினர். இடம் காணாமையால் மன்னன், அரச யானைகள் கட்டியிருக்கும் பெரு மண்டபத்தையும் முன் வெளியையும் சுத்தம் செய்து அப்பகுதியில் மகிந்ததேரரைக் கொண்டு பௌத்த மத தர்மத்தை உபதேசிக்க வைத்தான். ஆயிரக் கணக்கானோர் பௌத்தத்தைத் தழுவினர்.








## 12.2 மகாமேகவனத்தில் தங்கியமை

யானைகள் கோட்டமும் பெருந்திரளான மக்கள் கூடி உபதேசத்தைப் பெறுவதற்குப் போதாமையால், அரண்மனையின் தென் வாயிலினை அடுத்து அமைக்கப்பட்டிருந்த நந்தவனத்தைத் தேர்ந்தெடுத்தனர். அந்த நந்தவனம் குளிர் தருக்களைக் கொண்டிருந்தது. மகிந்ததேரரும் குழுவினரும் அந்த நந்தவனத்தில் அமர்ந்து பௌத்த சமய தர்மத்தை அங்கு கூடிய ஆயிரக்கணக்கான மக்களுக்குப் போதித்தனர். அன்று மாலையானபோது, மகிந்ததேரர் தன்குழுவினருடன் மிசாக பர்வதத்திற்குத் திரும்பிச் செல்ல விரும்பியபோது, தேவநம்பியதீசன் விரைந்து வந்து, அவர்களை நீர்வசதியும், நிழல்வசதியும் நிறைந்த மகாமேகவனத்தில் தங்கிவிடுமாறு கோரினான். மகிந்ததேரர் திரும்பி மகாமேகவனத்திற்கு வந்தார். அவர் திரும்பியவிடத்தில் பின்னர் கதம்பநதிக் கரையில் நிவத்தாசேத்தியம் கட்டப்பட்டது. நந்தவனம் நகரின் தென்பகுதியிலும், மகாமேகவனம் நகரின் கிழக்கு வாயிலிலும் அமைந்திருந்தன. மகாமேகவனத்தில் தேரர்கள் தங்குவதற்கான போயமனை, தங்குஞ்சாலை, அன்னசாலை முதலானகட்டட வசதிகளை மன்னன் செய்து வழங்கினான். இவ்வாறாக இலங்கையின் பௌத்தமையமான மகா விகாரைக்கு வித்திடப்பட்டது. மகாமேகவனம் பௌத்த சமயச் சடங்ககளுக்கு உகந்ததாக இருந்ததால் அதனை மன்னன் தாரை வார்த்து மகிந்ததேரருக்கு வழங்கினான்.

நிவத்தாசேத்தியம்.

© Dr. K. Kunarasa



நுவரவாவி: நுவரவாவியின் ஒரு கண்கவர் எழிற்கரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுலா ராணி பௌத்த மதத்தைத் தழுவல்.

அனுலா ராணியும் அவளது ஐநூறு சேடிகளும் பௌத்த மத பிக்குணிக்கான சடங்குகளைக் கோரினர். அதற்குத் தனது சகோதரி சங்கமித்ததேரியை அழைப்பதாக மகிந்த தேரர் ஊறுதியளித்தார். 'பாடலிபுரத்தில் எனது சகோதரி சங்கமித்தா பிக்குணியாகவுள்ளாள். போதிமரத்தின் தென் கிளை ஒன்றினை எடுத்துக்கொண்டு இலங்கை வருவாள். அவள் பெண்களைப் பிக்குணியாக்கும் சடங்கினைச் செய்வாள்' என்றார் மகிந்ததேரர்.

பின்னர் மகாமேகவனத்தின் பல்வேறு பகுதிகளில் அமைய வேண்டி சமயக்கட்டிடங்கள் எங்கெங்கு அமையவேண்டு மென நிலையங் குறித்தார். சங்கமித்தாதேரி கொண்டு வர விருக்கின்ற அரசமரம் நாட்டி வளர்க்கப்பட வேண்டிய இடத் தையும் மகிந்ததேரர் குறித்து ஒதுக்கினார். அவ்விடத்திலேயே மகாவிகாரை பின்னர் அமைக்கப்பட்டது. மகாமூச்செலா என்ற விடத்தில் உபதேச மண்டபமும் பன்காம்பலமாலா என்ற விடத்தில் தானமண்டபமும் அமைக்குமாறு இடம் குறித்தார்.

மாங்கனிகளுடன் மாமரம் தோன்றிய அதிசயம்.

பன்காம்பலமாவில் அரச தோட்டக்காரன் பழுத்த மாங்கனி ஒன்றினை மன்னனுக்கு வழங்கினான். மன்னன் அதனை மகிந்ததேரருக்கு உண்ணுமாறு அளித்தான். தேரர் அதனை உண்டுவிட்டு, மாங்கொட்டையை ஓரிடத்தில் நடுமாறு மன்னனிடம் கொடுத்தார். நட்டவிடத்தில் தன்னிரு கைகளையும் கழுவினார். பார்த்துக் கொண்டிருக்கத்தக்க தாக, அம்மாங்கொட்டையில் துளிர் வந்து செடியாகி மரமாகி மாங்கனிகளுடன் விளங்கிய அதிசயத்தை அனைவரும் கண்டு வியப்பிலாழ்ந்தனர்.

நான்கு புத்தர்களின் வருகை.

பின்னர் மகிந்தர், பிற்காலத்தில் வானளாவி எழவிருக் கின்ற மகாதூபி அமையவுள்ள இடத்தையும் அடையாளம் காட்டினார். தூபராமதூபி அமையவிருக்கும் இடத்தையும் அடையாளமிட்டார். அத்துடன் முன்னர் இலங்கைக்கு காரு சந்தகர், கோணகமனர், காசபர், கோதமர் என நான்கு புத்தர்கள் வருகை தந்தார்கள் என்றும், அவ் வேளைகளில் மகாமேகவனம் முறையே மகாதீர்த்தம், மகானோமா, மகா சாகரா என அழைக்கப்பட்டதெனவும், இலங்கை முறையே ஓயாதீபம் (Ojadipa), வரதீபம் (Varadipa), மண்டதீபம் (Mandadipa), லங்காதீபம் (Lankadipa) என அழைக்கப்பட்ட





தெனவும் எடுத்துரைத்தார்.

ஜோதிவனம்.

மகிந்ததேரரும் குழுவினரும் நந்தவனத்தில் பௌத்த போதனையை மக்களுக்குச் செய்துவிட்டு, மகாமேகவனத் திற்கு இரவு திரும்புவர். நான்காம் நாள் அனைவரையும் அழைத்து, தூபராமதூபிக்கான கட்டட வேலைகளைத் தொடக்கி வைத்தார். தூபியின் எல்லையைக் கதம்பநதிக் கரையில், மன்னனைக் கொண்டு வட்டச்சுற்றாக உழுது வித்து வரையறுத்தார். நந்தவனம் மகிந்ததேரரின் இடமாகிய தால் காலகதியில் ஜோதிவனம் எனப்பட்டது. பல பிரிவேனாக் களும் ஆராமைகளும் தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்டன

## 12.3 புனிதசின்னங்கள்

அனுராதபுர மகாமேகவனத்தில் இருபத்தாறு நாட்க ளைக் கழித்த மகிந்ததேரரும் குழுவினரும் மழைகாலத் தைக் கழிப்பதற்காக சேத்தியபர்வதத்திற்கு (மிகிந்தலை) சென்று தங்கினர். அந்நாளில் அமைச்சனான மகாஅரிட்ட



**அசோகராமப்புத்தர்:**
மல்வத்துஓயாவின் இடது கரையில் அசோகராமப்புத்தர் சிலை உள்ளது. இவ்விடச்சூழலில் இரு விகாரை, ஒரு தூபி, ஒரு குளியலறை என்பவை இருந்துள்ளமைக்கான கட்டட இடிபாடுகளுள்ளன.
(நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரித்தனும் சகோதரர்களும் பௌத்தராகுதல்.

னும், அவனது ஐம்பத்தைந்து சகோதரர்களும் சங்கத்தில் சேர்ந்து கொண்டனர். அவர்கள் முறைப்படி தங்கள் தலை மயிரை முண்டகம் செய்து பிக்குகளாக அபிஷேகம் பெற்றனர். அவ்விடத்தில் மன்னன் கண்டக சேத்தியத்தை அமைக்க ஆவன செய்தான். மகிந்த தேரரும் ஏனையோரும் மழைக்காலத்தில் தங்குவதற்கான அறுபத்திரண்டு கற்குகை இருப்பிடங்களை கண்டகசேத்தியச் சூழலில் அமைத்துக் கொடுத்தான்.

சாமனேரர் சுமணன்.

மழைகாலம் முடிவுற்றதும் மகிந்ததேரர் தலைநகருக்கு மீண்டார். பௌத்த வழிபாட்டிற்குரிய தாதுச் சின்னங்கள் இன்மையை மன்னனிடம் எடுத்துக்கூறி, அசோக மன்னனிடம் சாமனேரர் சுமணனை அனுப்பி வைத்தார். சாமனேரர் சுமணன் (இளம் பிக்கு / சங்கமித்தாவின் மகன்) பாடலிபுத்திரம் சென்று, அசோகனைச் சந்தித்து புத்தரின் தாடையெலும்பு, பிற எலும்புகள் சில, அவருடைய பிச்சா பாத்திரம் முதலான புனிதச் சின்னங்களைப் பெற்றுவந்தார். அவர் கொண்டுவந்த புத்தரின் தாடையெலும்பை வைத்து அமைக்கப்பட்ட தூபியே தூபராமசேத்தியமாகும். இலங்கையின் முதலாவது தாதுகோபமும் இதுவே.

### 13.4 வெள்ளரசுக்கிளை

மகிந்ததேரர் ஒருகால் உறுதியளித்த போதிக்கிளையி



**தந்த தாதுக் கோயில்:** தேவ நம்பிய தீசன் காலத்தில், அமைக்கப்பட்ட கோயில், அவ்வேளை இக்கோயில் தர்மாக்கா எனப்பட்டது. கி.பி. 303 - 331 இல், கீர்த்திஶ்ரீமேக வர்ணன் புனிததந்த தாதுவை இங்கு பிரதிஸ்டை செய்தான். (நன்றி. தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)





னதும் பெண்களுக்குத் துறவறச் சடங்கினைச் செய்வதற்கு சங்கமித்ததேரியின் வருகையையும் தேவநம்பியதீசன் மறந்துவிடவில்லை. அமைச்சர் அரித்ததேரரை அழைத்து, அசோக மன்னனிடம் தூது அனுப்பி வைத்தான். அசோகன் தானே நேரில் சென்று, புத்தகாயாவிலிருந்த மகாபோதியின் அதாவது வெள்ளரசு விருட்சத்தின் மரக்கிளையை வெட்டுவித்து, சங்கமித்ததேரியுடன் அனுப்பி வைத்தான். சங்கமித்ததோரி, தன் பிக்குணிகள் குழுவுடன் ஜம்புக் கோளத் துறைமுகத்தை (காங்கேசன்துறை திருவடிநிலை) வந்தடைந்தாள். (கி.மு. 246, கார்த்திகை, பௌர்ணமி) தேவநம்பியதீசனும் பரிவாரங்களும் ஜம்புக்கோளத்திற்கு நேரில் சென்று வரவேற்றனர்.

சங்கமித்த தேரியின் வருகை.

சங்கமித்ததேரியுடன் ஒரு பெரும் ஆளணியே இலங்கையில் வந்து குடியேறியுள்ளது. போதிமரக் கிளை யுடன் பதினெட்டு அரசகுலத்தவர், பதினெட்டு பிரபுக்கள் குடும்பத்தினர், எட்டுப் பிராமணர், எட்டு வர்த்தகர் குடும்பத் தினர், அவ்வாறே விவசாயிகள், மந்தைமேய்ப்போர் (கோவி யர்), நெசவாளர், குயவர்கள், நாகர், இயக்கர் முதலானோர் வந்தனர். சங்கமித்ததேரியுடன் பதினெட்டு பிக்குணிகளும் வந்தனர். அனைவரும் மகாஅரித்தன் தலைமையில் ஜம்புக் கோளத்தை வந்தடைந்தனர் என மகாவம்சம் கூறுகிறது.

அனுராதபுரத்தின் வடக்கு வாயிலிலிருந்து ஜம்புக் கோளத்துறை வரையிலான நெடுஞ்சாலை செப்பனிடப்



**படிதாங்கிக் குள்ளன்:** அனுராதபுரக்கட்டிடங்களின் படிகளில், படிதாங்கிக் குள்ளர்கள் (குள்ள பூதங்கள்) மிகச் சிறிய வடிவில் அமைக்கப்பட் டுள்ளனர். அவர்களின் முதுகுகள் படிகளைத் தாங்கி நிற்கும். (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திர பர்ணசாலை.

பட்டது. மன்னனும் பரிவாரங்களும் ஜம்புக்கோளக் கரையில் வெள்ளரசுக் கிளையின் வருகைக்காகக் காத்திருந்தனர். அவர்கள் காத்திருந்தவிடத்தில் சமுத்திரபர்ணசாலை (விடுதி) அமைக்கப்பட்டது. வெள்ளரசுக் கிளையைத் தன் தலையில் தாங்கிய மன்னன் அதனைக் காவி வந்து ஒரு பல்லக்கில் வைத்தான். அனுராதபுரத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. இந்த ஊர்வலம் முன்னர் புத்தரால் அரவணைக்கப்பட்ட நாகர்கள் வாழிடங்களிலும், பிராமணன் திவக்காவின் கிராம வாயிலிலும் தரித்து நின்று புறப்பட்டது. அனுராதபுரத்தின் வடக்கு வாயிலூடாக நுழைந்த இந்த ஊர்வலம், தெற்கு வாயில் வழியாக மகாமேகவனத்துள் புகுந்தது. சுமணதேரரால் தக்கவாறு ஒழுங்குபடுத்தப்பட்டு, ஏற்கனவே மகிந்ததேரரால் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில், அரசகுலப் பிரதானிகள் பதினாறு பேர்களினால் தூக்கி குழியில் வைக்கப்பட்டு நடப்பட்டது. இந்த வைபவத்திற்கு கதிர்காம சத்திரிய மன்னனும், சந்தணகம சத்திரிய மன்னனும்வந்திருந்தனர். வடபகுதியைச் சேர்ந்த தீவக்கன் என்ற பிராமணரும் கலந்து கொண்டார் என மகாவம்சம் மூலம் அறியமுடிகிறது.

வெள்ளரசு மரத்தின் எட்டு நாற்றுகள்.

இவ்வாறு நாட்டப்பட்ட போதிமரக் கிளை வளர்ந்து செழித்தபோது, பெறப்பட்ட எட்டு நாற்றுக்கள் இலங்கையின் பல பகுதிகளில் நடப்பட்டன. அவை ஜம்புகோளத்துறையில் போதிமரம் இறங்கிய இடத்திலும், பிராமணர் திவக்காவின் கிராமத்திலும், தூபராமா சேத்தியத்திலும், இசராசமானராமா (இசுருமுனகல) விலும், பத்துமசேத்தியத்திலும், சேத்திய பர்வதத்தின் ஆராமையிலும், கதிர்காமத்திலும், சந்தனகமத்திலும் நாட்டப்பட்டன.

மகாராணி அனுலாவும் அவளது ஐந்நூறு பணிப்பெண்களும் சங்கமித்தாதேரியிடம் அடைக்கலமாகி, பிக்குணிகளாயினர். அவர்களுக்கான வதிவிடங்கள் உருவாக்கப்பட்டன. பௌத்த சங்கத்தில் சேர்பவர்களின் எண்ணிக்கைபெருகவே, தேவநம்பியதீசன் மகாவிகாரை, சேத்தியபர்வத விகாரை, தூபராமசேத்தியம் முதலான வற்றுடன் திருப்திகொள்ளாது மேலும் இஸ்சரசமண விகாரை (இசுருமுனியா விகாரை), பத்மதூபி, வெசகிரி






விகாரை, உபசிக்க விகாரை, ஹற்றல்ககா விகாரை, நாகதீபத்தில் ஜம்புக்கோள விகாரை, திசமகா விகாரை, பச்சினராம விகாரை முதலானவற்றை நிறுவினான். நாற்பதாண்டுகள் ஆட்சி புரிந்து சமயத் தொண்டாற்றிய பின்னர் தேவநம்பியதீசன் மரணமடைந்தான்.

## 13.5 நான்கு தேரிகள்

கி.மு. 247 ஆம் ஆண்டு அரசுகட்டிலேறிய தேவநம்பிய தீசன் கி.மு. 207 வரையிலான நாற்பது வருடங்கள் அரசாண் டுள்ளான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் பௌத்த மதம் இலங்கையில் பெரு வளர்ச்சி கண்டது. மகிந்ததேரரும் சங்கமித்தாதேரியும் இலங்கைக்கு வந்தனர். பெரும் எண்ணிக்கையானோர் அவர்களுடன் வந்து இங்கு குடியேறினர். வெள்ளரசுக்கிளை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது.

சங்கமித்தாதேரி வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வருவதற்கு முதல், ருகான்நந்தா என்ற தேரி வெள்ளரசுக் கிளை ஒன்றினைக் கொண்டுவந்த வரலாற்றை மகிந்த தேரர், தேவநம்பியதீசனுக்குக் கூறுவதாக மகாவம்சம் பதினைந்தாம் அதிகாரத்தில் வருகின்றது. எட்டுக்கூடைகள்

ருகான்நந்தா.



**உழவுவிழா:**
சிங்கள மன்னர்கள் யானைகள் பூட்டி, கலப்பை பிடித்து, வயல் உழுது நெற்செய்கையை வருடாவருடம் ஆரம்பித்து வைப்பார்கள்.
(நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த சம்பக மலர்களை மன்னன், மகிந்ததேரருக்கு வழங்க, அவர் மலர்களை ஓரிடத்தில் தூவ புவி நடுக்கம் ஒரு கணம் ஏற்பட்டது. காரணத்தை மன்னன் மகிந்தரிடம் வினவினான். அதற்கு அவர், 'இவ்விடத்தில் ஏற்கனவே நான்கு புத்தர்கள் விஜயம் தந்துள்ளனர். அதனையே இப்புவி நடுக்கம் குறிக்கின்றது' என்றார். தொடர்ந்து காருசந்தகர், கோணகமனர், காசபர், கோதமர் ஆகிய நான்கு புத்தர்களின் விஜயத்தைக் கூறுகிறார். அவ்வேளை களில் மகாமேகவனத்தின் பெயர்கள் யாவை எனவும், இலங்கை அழைக்கப்பட்ட பெயர்கள் யாவை எனவும் கூறுகிறார். காருசந்தகர் கட்டளைப்படி, ருகாநந்ததேரி, போதிமரத்தின் தென்புறக்கிளையை இங்கு கொண்டுவருகி றாள். அவள் ஐநூறு பிக்குணிகளுடன் வருகிறாள். அதனை அபயமன்னனிடம் கொடுக்க, அவன் மகாதித்தவனத்தில் அதனை நடுகிறான் என மகாவம்சம் கூறுகிறது. (Mahavamsa. XV - 77)

ந்தகநந்தாதேரி.

இரண்டாம் முறை கோணகமன புத்தர் இலங்கைக்கு வந்து மகானோம வனத்தில் தங்கியிருக்கிறார். அவரின் பணிப்பின்படி, கந்தகநந்தாதேரி போதி மரத்தின் தென் கிளையைக் கொண்டு வருகிறாள். அதனை மன்னன் சமித்தாவிடம் கொடுக்க, அவன் மகானோமா வனத்தில் நடுகிறான். மூன்றாம் முறை காசிப புத்தரின் கட்டளைப்படி சுத்தம்மதேரி போதிக் கிளையை இங்கு கொண்டு

© Dr. K. Kunarasa



**புல்லன்குளம்:**
அனுராதபுரப் புராதன நகரின் மேற்கெல்லையாக புல்லன்குளம், அபயவாவி, திஸ்ஸவாவி என்பனவுள்ளன. அபயகிரி விகாரைக்கு தென்மேற்கே புல்லன்குளம் அமைந்துள்ளது.





வருகிறாள். அதனை வாங்கிய மன்னன் ஜயந்தன் மகாசாகரவனத்தில் அதனை நடுகிறான். எனவே, மூன்று தடவைகள் வெள்ளரசுக்கிளை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு நடப்பட்டுள்ளது. மகாதித்த எனப்படும் மகாதீர்த்த தோட்டத்தில் (மாந்தை) முதலாவது வெள்ளரசுக் கிளை யும், ஏனைய வேறிரு வனங்களிலும் நாட்டப்படுகின்றன. மகாதீர்த்தவனம், மகானோமாவனம், மகாசாகரவனம் ஆகிய மூன்றும் மகாமேகவனமே எனவும் மகாவம்சம் கூறுகிறது. (Mahavamsa - XV) நான்காவது தடவையாக வெள்ளரசுக் கிளையை சங்கமித்ததேரி கொண்டு வருகின்றாள். இவை அனைத்தும் உண்மையாயின், தேவநம்பியதீசன் காலத்திற்கு முதலே பௌத்தம் இங்கு நிலைகொண்டுள்ளது எனக் கொள்ள வேண்டும். இல்லா விடில் மகிந்ததேரரின் வருகையையும், சங்கமித்ததேரி யின் வருகையையும், வெள்ளரசுக் கிளையின் வருகையை யும் வெவ்வேறு எழுத்தாளர்கள் வெவ்வேறு பெயர்களுடன் எழுதிவைக்க, அவற்றை மகாநாமதேரர் மகாவம்சத்தில் எடுத்தாண்டிருக்க வேண்டும். மகாவம்சத்தில் ஓரிடத்தில், முன்னைய போதி மரங்கள் நின்றிருந்தவிடத்தில், சங்க மித்தாதேரி கொண்டு வந்த கிளை நாட்டப்பட்டதெனவும் வருகின்றமை (Mahavamsa - XIX) மனதிற் கொள்ளத்தக்கது.

தூபராமசேந்தியம் பட்டப்பட்ட இடத்தில் முன்னர் 'மாகேஜ' என்ற தெய்வத்தின் கோயில் இருந்ததாக

**தங்கமீன் பூங்கா:**
அரச நந்தவனத்தில் அமைந்திருக்கும் அரச குளியற் கேணியின் சிதைந்த தோற்றம். நீர் கேணிக்கு வரவும் வெளியேறவும் தக்கவாறு அமைக்கப் பட்டுள்ளது. திசவாவிக்கு அருகில் இசுறுமுனியாவிற்கு வடக்காக இது அமைந்துள்ளது. இந்த நந்தவனப் பகுதியைத் தங்கமீன் பூங்கா என்பர். (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியலாம். மாகேஜகோயிலை நீக்கிவிட்டே தூபராமசேத்தியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாகேஜனை சிற்றம்பலம் என்பார். மகேசன் - மகேஸ்வரன் - சிவன் என இனங்காண்பார். ஏற்கக்கூடியதே. (சிற்றம்பலம் - 1996)

தேவநம்பியதீசன் காலத்தில் இலங்கை முழுவதற்கும் அவனே அரசனாக விளங்கியுள்ளான். நாகதீபம், கதிர்காமம், சந்தானகமம் முதலான பிரதேசங்களிலிருந்த சிற்றரசுகள் தேவநம்பியதீசனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்துள்ளன. அதனால்தான வடக்கே ஜம்புக்கோளத்துறை வரை அனுராதபுர மன்னனின் மேலாதிக்கம் நிலவியுள்ளது. போதிமர நடுகையின் போது கதிர்காமம், சந்தானகமச் சிற்றரசர்கள் சமுகங் கொடுத்துள்ளனர் என்பது முக்கியமானது. இவர்கள் தமிழ்ச் சத்திரிய மன்னர்களாவார்கள்.

### 13.6 தேவநம்பியதீசனின் பின்

உத்தியன் மன்னனாதால்.

தேவநம்பியதீசனின் மரணத்திற்குப் பின்னர் அவனுடைய இளைய சகோதரன் உத்தியன் மன்னனானான். தேவநம்பியதீசனுக்குப் பிள்ளைகள் இல்லாமையினால் அவனது சகோதரன் அரசகட்டிலேற நேர்ந்தது. உத்தியனின் எட்டாவது வருட ஆட்சிக்காலத்தில், அறுபது வயதினையடைந்த மகிந்ததேரர், ஒரு மழைக்காலத்தில் சேத்திய பர்வதத்தில் பரிநிர்வாணம் அடைந்தார். இந்த மன்னனுடைய ஒன்பதாவது ஆட்சிக்காலத்தில், தனது ஐம்பத்தொன்பதாவது வயதில் சங்கமித்தாதேரியும் நிர்வாணமடைந்தார். மகிந்ததேரர் வகித்த இடத்தை மகாஅரித்ததேரர் எடுத்துக் கொண்டார். உத்தியனின் ஆட்சி பத்தாண்டுகள் நீடித்தது. (கி.மு. 207 முதல் கி.மு.197 வரை)






# 14. ஐந்து மன்னர்கள்

உத்தியனின் இளைய சகோதரன் மகாசிவன் அடுத்து அனுராதபுர அரியணை ஏறினான். இவனே நகரின் கிழக்குப் பகுதியில் நாகரங்கன விகாரையை அமைப்பித்தவனாவான். பத்தாண்டு ஆட்சியின் பின்னர் மகாசிவன் இறக்க அவனது தம்பி சூரத்தீசன் மன்னனாக முடிசூடிக் கொண்டான். அவன் ஹத்திக்ககந்தா விகாரை, கொண்ணாகிரி விகாரை, வன்கத்தார பர்வதவிகாரை, பச்சினா பர்வத விகாரை, கொலம்பகாலா விகாரை, மகாகுல விகாரை முதலான விகாரைகளைக் கட்டுவித்தான். ஐநூறு விகாரை வரை சூரத்தீசன் அமைத்ததாக மகாவம்சம் கூறும்.

சேனன் - குத்திக்கன் படையெடுப்பு.

சுரத்தீச மன்னன் காலத்தில் சேனன், குத்திக்கன் என்ற இரு தமிழ் குதிரை வியாபாரிகள் படையுடன் வந்து சூரத்தீசனை வெற்றி கொண்டு இருபத்திரண்டு வருடங்கள் அனுராதபுரத்திலிருந்து அரசாண்டுள்ளனர். முத்துசிவனின் ஒன்பதாவது மகன் அசேலன் அவர்களை வெற்றி கொண்டு அனுராதபுரத்திலிருந்து பத்தாண்டுகள் அரசாண்டான். அசேலனுக்கு அபயன், தேவநம்பியதீசன், உத்தியன், மகாசிவன், மகாநாகன், மத்தாபயன், சூரத்தீசன், கிரா என எட்டுச் சகோதரர்கள் இருந்தனர்.



கற்பின்னல்வேலைச் சுவர்க்கட்டிடம்: அநுராதபுர ஜோத்தா அல்லது நந்தவனத்தில், மகாசேன மன்னனால் கட்டப்பட்டது. மகாவிகாரைச் சொந்தமானதாக விளங்கியது. (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14.1 எல்லாளன்

சோழநாட்டிலிருந்து படையுடன் வந்த எல்லாளன் என்பான் அசேலனிடமிருந்து நாட்டை வெற்றி கொண்டு நாற்பத்திநான்கு வருடங்கள் நல்லாட்சி புரிந்தான். அவனுடைய படுக்கையறையில் ஓர் ஆராய்ச்சிமணி தொங்கும்; அதன் இணைப்புக்கயிறு அரண்மனை வாயிலில் இருக்கும். நீதி கோருவோர் எந்நேரத்திலும் ஆராய்ச்சிமணி இழுத்து அடிக்கலாம். எல்லாளனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். அவனுடைய மகன் தேரிலேறி, திசா வாவி அருகாகச் சென்றபோது ஒரு பசுக்கன்று தேர்ச் சில்லில் அகப்பட்டு இறந்து போனது. தாய்ப்பசு அரண் மனைக்கு வந்து ஆராய்ச்சிமணியை இழுத்தடித்தது. விபர மறிந்த மன்னன் அதே தேர்ச்சில்லின்கீழ் படுக்கவைத்து மகனைக் கொன்றுவிடுமாறு தீர்ப்பு வழங்கினான்.

பனைமரத்திலிருந்த கூட்டில் வாழ்ந்த பறவைக்குஞ்சு ஒன்றை ஒரு பாம்பு விழுங்கியது. தாய்ப்பறவை மணியை அடித்து மன்னனிடம் முறையிட்டது. மன்னன் அப்பாம்பைப்



அநுராதபுர நகர அமைப்பு.






பிடித்து அதன் வயிற்றைக் கீறி, வயிற்றிலிருந்த குஞ்சை வெளியே எடுத்து வழங்கினான். ஒருமுறை தேரில் வரும்போது சேத்திய பர்வத தூபியின் ஒரு பக்கத்தினை தேரின் அச்சு முட்டிச் சேதப்படுத்திவிட்டது. மன்னன் உடனே வீதியில் குதித்துப் படுத்து, 'தேரின் சில்லால் என் சிரசைக் கொய்துவிடுக' என்று கூடவந்த அமைச்சர் களிடம் கூறினான். அமைச்சர்கள் தடுத்து ஆலோசனை கூறினர். அதன்படி தூபியைத் திருத்துவதற்குச் சேத மடைந்த பதினைந்து செங்கற்களுக்காக பதினையாயிரம் காகாப்பணங்களை வழங்கினான். ஒரு வயோதிபப் பெண், முற்றத்தில் நெல்மணிகளைக் காயவிட்டிருந்தாள். காலம் தப்பித் திடீரெனப் பெய்த மழையால் அவளுடைய நெல் முழுவதும் பாழாகியது. அவள் எல்லாளனிடம் முறைப்பாடு செய்தாள். அவன் அவளுக்கும் நீதி வழங்கினான். அவன் வருணனிடம் வாரத்துக்கொரு தடவை இரவில் மட்டும் மழை பொழிய வேண்டுதல் விடுத்தான். இவ்வாறாக நீதிநெறி தவறாத மன்னனாக எல்லாளன் விளங்கினாலும், பொய்யான நம்பிக்கைகளைக் கொண்ட ஒரு பைசாச மதத்தை நம்பும் (இந்துவான) மன்னனிடம் சிறப்பான ஆட்சியை எதிர்பார்க்க முடியாது என மகாவம்சம் புலம்பும்.

எல்லாளனின் சிறப்புகள்.

## 14.2 எல்லாளனின் நீதி தவறா ஆட்சி

கி.மு 145 தொட்டு கி.மு.101 வரையிலான 44 ஆண்டுகள் தமிழ் மன்னன் எல்லாளன் ஆட்சிக் காலமாகும்.



**அபயகிரி விகாரை:** அபயகிரி விகாரையின் முன்னைய தோற்றம். இதனை உத்தர விகாரை (வடவிகாரை) எனவும் அழைப்பர். அபயகிரி விகாரையையே ஜேத்தவன விகாரையென நம்புவோருமுளர். வட்டகாமினி (வலகம்பாகு) என்ற மன்னனால் இது கட்டப்பட்டது. (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளனைச் சோழ இளவரசனாகவும், தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தவனாகவும் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இப்படியொரு சோழன் இருந்ததாகத் தமிழ்நாட்டு வரலாற்றில் ஆதாரங்களில்லை. இந்த மன்னன் உத்தர தேசத்தின் (வடவிலங்கை) ஒரு பகுதியிலிருந்து அனுராதபுரத்தின்மீது படையெடுத்த தாகவே கொள்ள வேண்டும். (புஸ்பரட்ணம் - 1998) பெலிவாவி எனப்படும் வவுனிக் குளத்தின் ஆரம்பத்தோற்றம் எல்லாளனுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (Parker.H - 1909)

பௌத்தத்திற்கு ஆதரவு வழங்கிய எல்லாளன்.

எல்லாளனின் நீதிதவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்க, மனுநீதிச்சோழனின் கதைகளை அவன்மீது ஏற்றி மகாவம்சம் புகழ்கிறது. எனினும், இவன் தவறான மார்க்கத்தை (இந்துசமயத்தினை) தழுவியவன் என இகழவும் மகாவம்சம் தவறவில்லை. எல்லாளனின் நீதி வழுவாமையைக் கூறமுயலும் கதைகள் நம்பகமானவையல்ல. எனினும் மகாவம்சம் கூறுகின்ற தாதுகோப உடைவிற்கு மன்னன் வழங்கிய பதினையாயிரம் காகாக்காசுகள் அவன் பௌத்த சமயத்திற்கும் ஆதரவு அளித்தான் என்பதை நிரூபிக்கின்றது. எல்லாளனின் ஏகாதிபத்தியம் இலங்கை முழுவதும் பரவியிருந்தது. கல்யாணி, உருகுணை ஆகியவிரு தென்னிலங்கை இராச்சியங்களும் எல்லாளனின் ஆட்சியை ஏற்றிருந்தன.

# 15. துட்டகாமினியின் பிறப்பு

'எல்லாளனை வெற்றி கொண்டு துட்டகாமினி என்பான் அனுராதபுர சிம்மாசனத்தில் அமர்ந்தான். அவனுடைய வரலாற்றை விபரிப்போம்' என மகாவம்சத்தின் இருபத்திரண்டாம் அதிகாரம் ஆரம்பமாகின்றது.

அனுராதபுரத்து மன்னன் தேவநம்பியதீசனின் இரண்டாவது சகோதரனும், யுவராஜாவுமான மகாநாகன் அடுத்து அரசனாகிவிடுவான் என்ற பயத்தில், அனுராதபுரத்தின் சிம்மாசனம் தனது மகனுக்கே கிடைக்கவேண்டும் என்ற அவாவினால் மகாராணி மகா






நாகனைக் கொலை செய்ய ஒரு சதி செய்தாள். நஞ்சூட்டப்பட்ட மாங்கனி ஒன்றினை மாங்கனிகள் நிரம்பிய தட்டொன்றில் மிக மேற்கனியாக அடுக்கி மகாநாகனுக்கு அனுப்பிவைத்தாள். அவ்வேளை மகாநாகன் தாரகா குள வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தான். மகாராணியின் மகனான சிறுவனும் அவனுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். அச்சிறுவன் நஞ்சிடப்பட்ட மாங்கனியை உண்டு இறக்க, பயமுற்ற மகாநாகன் தன் மனைவிமார், பணியாட்கள், குதிரைகள் அனைத்தோடும் உருகுணைக்கு ஓடித்தப்பினான்.

மகாநாகன் உருகுணைக்கு ஓடுதல்.

ஓடும் வழியிலிருந்த ஜத்தலாலா விகாரையில் அவனின் மனைவிகளில் ஒருத்தி ஒரு ஆண் மகவைப் பெற்றாள். அக்குழந்தைக்கு விகாரையின் பெயரையும் தன் தமையன் தேவநம்பியதீசனின் இறுதிப் பெயரையும் இணைத்து ஜத்தலாயாதீசன் எனப் பெயரிட்டான். பின்னர் அவன் உருகுணைக்கு வந்து, மகாகமம் என்ற பெருங் கிராமத்தைத் தலைநகராகக் கொண்டு உருகுணைக்கு

© Dr. K. Kunarasa



அபயகிரி விகாரை: அபயகிரி விகாரையின் இன்றைய தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கவண்ணதீசன் உருகுணையின் மன்னனாதல்.

மன்னனாகினான். நாகமகாவிகாரையை மகாகமத்தில் கட்டுவித்தான்; உடகந்தாரா விகாரையையும் அவனே அமைப்பித்தான். மகாநாகனின் மரணத்திற்குப் பின்னர் அவனது மகனான ஜக்தலாயாதீசனும், அதன்பின் அவனது மகனான கோதபாயனும் உருகுணையின் மன்னராகினர். கோதபாயனின் மகன் காக்கவண்ணதீசன் (காவந்ததிஸ்ஸன் எனவும் பெயர்) தந்தையின் பின்னர் மன்னனாக அரியணை ஏறினான். கல்யாணி அரசனின் மகளான விகாரதேவி காக்கவண்ணதீசனின் பட்டமகிஷியாவாள்.

## 15.1 கல்யாணிதீசன்

கல்யாணி இராச்சியத்தின் அரசன் தீசனாவான். அவனுடைய இளைய சகோதரனான அய்ய - உத்திக்கன் என்பானுக்கும் கல்யாணிதீசனின் மனைவி மகாசித்ததேவிக்கும் கள்ள உறவு இருந்தது. இந்த உறவு மன்னனுக்குத் தெரியவந்ததும் உத்திக்கன் நாட்டை விட்டோடினான். பின்னர் தமையன் மனைவிக்கு ஒரு காதல் கடிதம் எழுதி, பிக்கு வேடமணிந்த ஒருவனிடம் கையளித்து, அதனை அரசியிடம் சேர்ப்பிக்கும் மார்க்கத்தையும் கூறினான். ஒவ்வொருநாளும் அரண்மனைக்குப் பிச்சையேற்கச் செல்லும் தேரர் பின்னால் செல்லும் பிக்குகளுடன் சென்ற வேடதாரி, கடிதத்தை அரசியின்முன் தருணம் பார்த்து நழுவவிட்டபோது, அதனைக் கண்ணுற்ற

© Dr. K. Kunarasa



**பிரார்த்தனை மண்டபம்:** அபயகிரி விகாரையின் அருகே அமைந்த பிரார்த்தனை மண்டபம்.






லங்கா விகாரை அருகில் கரையொதுங்கிய வள்ளம்.

கல்யாணிதீசன் கடிதத்தை எடுத்துப் படிக்க நேர்ந்தது. கோபமுற்ற மன்னன் பிரதம தேரரையும், வேடதாரியையும் கொன்று கடலில் வீசுவித்தான். அதனால் கடல் பொங்கிக் கல்யாணி இராச்சியத்தின்மீது பரவியது. கடற்கடவுளைச் சாந்தப்படுத்துவதற்காக தனது மகள் தேவியைப் பொன் வள்ளமொன்றில் ஏற்றி, 'இவள் அரசனின் மகள்' என எழுதி, கடலில் செல்லவிட்டான். அந்த வள்ளம் உருகுணை லங்காவிகாரை அருகில் கரையொதுங்க, காக்கவண்ணதீசன் அவளைத் தன் ராணியாக்கிக் கொண்டான். அவள் கரையொதுங்கிய இடம் விகாரை ஒன்றுக்கு அருகாக இருந்தமையால் அதன்பின் அவள் விகாரதேவி என அழைக்கப்படலானாள்.

காக்கவண்ணதீசனின் சமயப் பணிகள்.

காக்கவண்ணதீசன், திசமகா விகாரை, சித்தலாபதா விகாரை, கமித்தவலி விகாரை, குத்தலி விகாரை முதலான விகாரைகளைக் கட்டுவித்தான். பௌத்த மும்மணிகளில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தான். அவ்வேளை மிகவும் அருளும் நற்பண்புகளும் கொண்ட தேரர் ஒருவர், கோதபர்வத விகாரையிலிருந்தார். அவரது உபதேசப்பணிகளுக்கு உதவுமுகமாக ஒரு பாறையின்மீது ஆகாசசேத்தியம் ஒன்றினை காக்கவண்ணதீசன் நிறுவிக் கொடுத்தான். அத்துடன் பிக்குகளுக்கு உணவு முதலானவற்றை அளிக்கும் பணியிலும் ஈடுபட்டான். ஒருநாள் கோதபர்வததேரர் கடும் சுகவீனமுற்றார்.அவரை

**குட்டன் பொக்கனை:** குட்டன் பொக்கனை என்னும் இரட்டைத் தடாகத்தின் அன்றைய நிலை. அபயகிரி விகாரைப் பிக்குகள் குளிப்பதற்காக அமைக்கப்பட்டது. (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பிக்குகள் ஒரு மூடு பல்லக்கில் வளர்த்தி சிலாபாசா பிரிவேனாவிலுள்ள திசஆராமைக்கு எடுத்து வந்தனர்.

விசாரதேவியின் வேண்டுதல்.

விகாரைதேவி, தனது மதிய உணவை உண்பதற்கு முன் அரண்மனையிலிருந்து உணவுப் பொருட்களை எடுத்துச்சென்று பிக்குகளுக்கு வழங்கும் வழக்கமுடைய வள். உணவு மட்டுமன்றி மலர்கள், பரிமள கந்தங்கள், ஆடைகள், மருந்துகள் என்பனவும் வழங்கி வந்தாள். திசஆராமையில் நோய்வாய்ப்பட்டிருந்த கோதபர்வததேர ரின் படுக்கையருகில் அமர்ந்து, 'இந்த உலகில் பிள்ளைகள் இல்லாமல் எவ்வாறு மகிழ்ச்சி வரும்' என்றாள். கோதபர்வத தேரர், அவளுக்கு ஆறு சக்திகளைக் கொடுத்து அவளுக் குப் பிள்ளைகள் பிறப்பார்கள் எனவும் கூறி, 'இந்த நோயுற்ற வனுக்கு விடுதலை கொடு, மகாராணி' என்றார். அவள் தனக்கு அளிக்கப்பட்ட சக்திகளைப் பயன்படுத்தி, 'நீங்களே எனக்கு மகனாகப் பிறக்க வேண்டும். அதுவே எனக்கு மகிழ்ச்சி தரும்' என்றாள். அவளுடைய விருப்பம் நிறைவேறி யது. அரச குலத்தில் பிறப்பதற்கு மரணத்தறு வாயில் தேரர் ஒப்புக்கொண்டார்.

## 16.2 விகாரைதேவியின் மசக்கை விருப்பு

அவள் கர்ப்பமுற்றாள். துட்டகாமினியை அவள் கருவில் கொண்டிருந்தபோது, அவளுக்கு மசக்கை ஆசைகள் ஏற்பட்டன. முதலாவது, பன்னீராயிரம் பிக்குகள் அருந்திய பின்னர் தான் அருந்தும் அளவினதாக தேனடை தனது படுக்கையின் தலையணியாக இருக்கவேண்டும். இரண்டா வது, எல்லாளனின் பிரதம தளகர்த்தனின் தலையைத் துண்டித்த இரத்த வாளினைக் கழுவி அந்த நீரை அத் தலையின் மீது நின்று பருக வேண்டும். மூன்றாவது, அனுராதபுரத்தின் தாமரைத் தடாகத்திலிருந்து பறித்த வாடாத பூக்களை மாலையாக்கி அணியவேண்டும்.

பன்னீராயிரம் பேர் உண்ணும் தேனடை.

விகாரைதேவி, தன் மசக்கை விருப்புகளை காக்க வண்ணதீசனிடம் தெரிவித்தாள். அவன் சோதிடர்களைக் கலந்தாலோசித்தான். அவர்கள், 'பிறக்கப்போகும் புத்திரன், தமிழர்களை அழித்து, இந்த நாட்டினை ஒரே இராச்சிய மாக்குவான். அத்துடன் பௌத்தசமயத்தைப் பிரகாசிக்க வைப்பான்' என்றனர்.






மன்னன் பறையறிவித்தான். 'எவன் ராணி கூறியவாறான தேனடையைக் கண்டுபிடிக்கிறானோ, அவனுக்கு அளப்பரிய பரிசுகள் தரப்படும்'.உருகுணையைச் சேர்ந்த ஒருவன், கடற்கரையருகில் கவிழ்த்து விடப்பட்டிருந்த படகு ஒன்றினுள் படகு முற்றாக நிரம்பிய தேனடை ஒன்றினைக் கண்டு மன்னனுக்கு அறிவித்தான். மன்னன் அதனை எடுத்து அவள் விரும்பியவாறு பிக்குகளுக்கும் வழங்கி, அவளையும் பருக வைத்தான்.

வேலுசுமணனின் பயணம்.

விகாரைதேவியின் இரண்டாவது விருப்பினை நிறைவேற்றுதற்காக, வேலுசுமணன் என்ற தனது போர்மல்லனை மன்னன் அழைத்துத் தெரிவித்தான். அவன் அனுராதபுரத்திற்கு வந்து, அரண்மனையின் குதிரைகளைப் பராமரிக்கும் சமத்தனுடன் நட்பாகி, குதிரைலாயத்திலேயே பணியாளனாகச் சேர்ந்து கொண்டான். ஒருநாள் அவன் வெளியேவந்து, தாமரைத் தடாகத்திலிருந்த பூக்களைப் பறித்து கதம்பநதிக்கரையில் ஒரு மறைவான இடத்தில் மறைத்து வைத்ததோடு, நீண்ட வாளொன்றினையும் மறைத்து வைத்துவிட்டு குதிரைலாயத்திற்கு மீண்டான். மறுநாள் அதிகாலை வாகா என்ற அரசபுரவியைப் பிறர் அறியத்தக்கதாய் கடத்தி அதன்மீது ஆரோகணித்து மிகமிக வேகமாக வெளியேறி, மறைத்து வைத்திருந்த தாமரைப்பூக்களையும் கொலைவாளையும் எடுத்துக் கொண்டு காட்டுப் பாதையின் ஓரத்தில் மறைந்து நின்றான்.

© Dr. K. Kunarasa



**குட்டன் பொக்கனை:** அநுராதபுரத்தின் அற்புதமான கட்டமைப்புகளின் ஒன்று குட்டன் பொக்கனை (தடாகம்) ஆகும். இது இரட்டைத் தடாகங்களாகும். இரு தடாகங்கள் தனித்தனியாகவும் அதேவேளை இணைந்துமுள்ளன. நீரைத் தடாகத்திற்குக் கொண்டு வரும் சிங்கவாய்த் தடங்களும் நீரை வெளியேற்றும் வாய்த்தடங்களுமுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நந்தசாரதி மரணம்.

வாகா கடத்தப்பட்டதை அறிந்த, எல்லாளனின் படைத் தளபதி நந்தசாரதி என்பான், அதனைக் கைப்பற்றக் கருதி, சிறிகுத்தா என்ற தன் குதிரையிலேறி விரைந்தான். காட்டுப் பாதையில் மறைந்து நின்ற வேலுசுமணன், நந்தசாரதி குதிரையில் வேகமாக நெருங்கியதும் தலையைச் சீவினான். நந்தசாரதியின் தலையுடன் இரத்தம் தோய்ந்த வாளை உருகுணைக்கு எடுத்துவந்து, விகாரதேவியின் (விபரீத) மசக்கை விருப்பை நிறைவேற்றினான். தாமரைப் பூக்களா லான மாலையையும் அணிந்து மகிழ்ந்தாள் என மகாவம்சம் கூறுகிறது.

## 15.3 கதிர்காமச்சத்திரியர்

மகாவம்சத்தின் ஆசிரியரான மகாநாமதேரர், துட்டகாமினியைத் தன் நூலின் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளார். அவனது வரலாற்றை விபரிக்கும்போது இரு அம்சங்களை வலியுறுத்தியுள்ளார். ஒன்று தமிழருக கெதிரான இனவாதக் கருத்துக்கள். மற்றையது பௌத்தத் திற்கு அவனாற்றிய சேவை. 'சீலமயமான வாழ்க்கை ஒன்றை மேற்கொண்ட விகாரைதேவிக்கு இப்படியான குரூர மசக்கை ஆசைகள் ஏற்பட்டதென்று மகாவம்சம் குறிப்பிடுவதன்மூலம் அவளின் பாத்திரத்தைச் சிதைத் துள்ளது. மகாபாரதத்தில் துரியோதனனின் இரத்தத்தைத் தலையில் தடவியபின்பே கூந்தலை முடிப்பேன் என்ற

© Dr. K. Kunarasa



குட்டன் தடாகம்: இன்னொரு தோற்றம். தடாகத்தினுள் இறங்கும் வாயிலில் கற்கும்பங்கள் உள்ளன.






திரௌபதியின் கதைபோல விகாரைதேவியின் இரண்டாவது விருப்பம் உள்ளது. விகாரைதேவிக்குத் தமிழர்மீது இவ்வளவு வெறுப்பு ஏற்படுவதற்கு யாது காரணம் என்பதை மகாவம்சத்திலிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வளவிற்கும் அவளது பரம்பரையை நோக்கில், தமிழ் குருதியின் கலப்புள்ளமையைத் தெரிந்து கொள்ளலாம். அதனை நோக்குவோம்.

கதிர்காமச் சத்திரிய மன்னன்.

அனுராதபுரத்திலிருந்து தேவநம்பியதீசனின் தம்பி மகாநாகன் உருகுணைக்கு ஓடிவந்தபோது, உருகுணை யில் கதிர்காமச் சிற்றரசனாக ஒரு சத்திரிய மன்னன் இருந்தான். தான் சிறை செலுத்துகின்ற அனுராதபுரத்தின் யுவராஜா மகாநாகனைச் சத்திரிய மன்னன் தக்கவாறு வரவேற்று தன் தலைநகரிலிருந்து இரண்டு காத தூரத்தில் வளமான ஓரிடத்தில் குடியமர்த்தினான். அவ்விடத்தினை மகாநாகன், பெரியதொரு கிராமமாக்கி, மகாகமம் எனப் பெயரிட்டுக் கொண்டான். ஒரு சிற்றரசில் இரண்டு ஆட்சித் தலைவர்கள் உருவாகிவிட்டனர். உடனடியாகப் பிரச்சினை கள் உருவாகவில்லை. மகாநாமனின் மறைவிற்குப் பின்னர் அவனது மகன் ஜகதல்லாயதீசன் மகாகமத்திற்குத் தலைவனானான். அவனுடைய காலத்தில் கதிர்காமச் சத்திரிய ஆட்சியாளர்களுக்கும் மகாகமத் தலைவனுக்கும் பிரச்சினைகள் ஏற்படலாயின. ஜகதல்லாயதீசனுக்குப் பின்னர் கோதாபயன் தலைவனானான். இவன்

© Dr. K. Kunarasa



குட்டன் தடாகத்தின் காவல் தெய்வம்: இத்தடாகங்களின் காவல் தெய்வமாக ஐந்துதலை நாகம் அற்புதமாக வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மராஜாவும் உதியும் தப்பினர்.

உருகுணையில் வாழ்ந்த சிங்கள மக்களின் ஆதரவினைப் பிரித்தாளும் தந்திரத்தின்மூலம் பெற்று, ஒருநாளிரவு சத்திரிய மன்னன் கமணியையும் அவனது பத்துப் புதல்வர் களையும் வாளுக்கிரையாக்க மாளிகையைச் சூழ்ந்தபோது, கிரிந்தையில் இருந்த இருமக்களான தர்மராஜாவும் உதியும் தவிர்ந்த ஏனையோர் கொல்லப்பட்டனர். கோதாபயன் உருகுணையின் மன்னனானான். தர்மராஜாவும் உதியும் கதிர்காமம் திரும்பிவர விரும்பாது, கிரிந்தையில் தங்கி விட்டனர். அவர்களால் எதுவுமே செய்துவிட முடியவில்லை. அவ்வேளை கோதபயன், தன் மகன் காக்கவண்ண தீசனுக்கு தர்மராஜாவின் மகளான அபிஸ்வரியாவைத் திருமணம் பேசி மணவினைத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டான். காக்கவண்ணதீசனுக்கும் அபிஸ்வரியா வுக்கும் திக்காபயன் என்றொரு புதல்வன்.

கல்யாணிதீசனும் மகாசித்த தேவியும்.

சத்திரிய மன்னர்களில் ஒருவன் உதி அல்லது உத்தியன் ஆவான். அவன் கிரிந்தையில் தர்மராஜாவுடன் கரந்துறைந் தவன். அந்த உத்திக்கனுக்கு மூன்று புதல்வர்களாக அபயன், தீசன், அய்ய உத்திக்கன் ஆகியோர் இருந்தனர். இவர்களில் தீசனும் அய்ய உத்திக்கனும் கல்யாணிப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். கல்யாணியின் சிற்றரசனாக உருகுணை மன்னனின் அனுமதியுடன் தீசன் (கல்யாணி தீசன்) முடிதரித்தான். கல்யாணி தீசனின் பட்டத்து மகிஷி மகாசித்ததேவி அனுராதபுரத்து அரச பரம்பரையைச் சேர்ந்தவள். கல்யாணி தீசனுக்கும் சித்த தேவிக்கும் மூன்று பிள்ளைகள். மூத்தவள்தான் விகாரை மகாதேவியாவாள். எனவே விகாரைமகாதேவியின் தாயார் அனுராதபுரச் சிங்கள அரச பரம்பரையைச் சேர்ந்தவள்; தந்தை கல்யாணி தீசன் கதிர்காமத் தமிழ்ச் சத்திரிய பரம்பரையினன். தாய் செய்த குற்றத்திற்காக தன்னை ஒரு வள்ளத்திலேற்றி தன்னந்தனியளாகக் கடலில் கடத்தி விட்ட தந்தையின் மேலுள்ள ஆறாத வன்மம் தமிழர்மேல் அவளுக்கு மாறாத கசப்பைத் தோற்றுவித்திருக்கும்.

## 15.4 மூன்று கவளங்கள்

மகாவம்சம் துட்டகாமினியின் பிறப்பினை அவதாரமாக விபரிக்கின்றது. நல்ல சகுனங்கள் நிலவிய வேளையில்





நற்சகுனங்கள்.

விகாரைதேவிக்கு ஒரு மகன் பிறந்தான். அரண்மனையே குதூகலத்தில் ஆழ்ந்தது. பல்வகை இரத்தினங்கள் நிறைந்த ஏழு மரக்கலங்கள் அவ்வேளை கரை ஒதுங்கின. ஆறு தந்தங்களையுடைய இனத்தைச் சேர்ந்த யானை ஒன்று (சத்தாந்தம் - சத்த = ஆறு) தனது யானைக் கன்றினை எல்லையில் ஓரிடத்தில் விட்டுவிட்டுத் தன் வழியே சென்றது. அதனைக் கண்டுலன் என்ற மீனவன் கண்ணுற்று மன்னனுக்கு அறிவிக்க, மன்னன் பணிக்கர் களை அனுப்பி அதனைக் கைப்பற்றி வந்தான். அதற்குக் கண்டுலன் என்று கண்டறிவித்த மீனவன் பெயரையே வைத்தழைத்தான். 'ஒரு கப்பல் தங்கம், வைரம், ஏனைய பொருட்களுடன் வந்துள்ளது' என்ற தகவலும் கிடைத்தது. அனைத்தும் மகாகமத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

பெயர்சூட்டு விழா.

மகனுக்குப் பெயர் சூட்டும் விழாவிற்குக் காக்கவண்ண தீசன் பன்னீராயிரம் பிக்குகளை அழைத்தான். அப்பிக்கு களின் பிரதம தேரரான கோதமர் குழந்தைக்குப் பெயரிடும் வைபவத்தில் தலைமை ஏற்றார். காக்கவண்ணதீசனின்

© Dr. K. Kunarasa



ஐந்துதலை நாகன்:
குட்டன் தடாகத்தின் காவல் தெய்வம் ஐந்துதலை நாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காமினி அபயன்.

தந்தையின் பெயரை இணைத்து 'காமினி அபயன்' எனப் பெயர் சூட்டப்பட்டது. ஒன்பதாம் நாள் மன்னன் விகாரை தேவியுடன் புணர்ந்ததால் அவள் மீண்டும் கர்ப்பமுற்றாள். உரிய காலத்தில் இன்னொரு மகன் தீசன் பிறந்தான். இரு பிள்ளைகளும் மிகக் கவனமாக வளர்க்கப்பட்டனர்.

பாற்சோறு உண்ணல்.

இளவரசர்களுக்குச் சோறு தீத்தும் வைபவத்தின்போது, மன்னன் ஐநூறு பிக்குகளை அந்த வைபவத்திற்கு அழைத்தான். அவர்களுக்குப் பாற்சோறு வழங்கிய பின்னர், அவர்கள் எஞ்சவிட்ட பாற்சோற்றில் ஒவ்வொரு கரண்டி சோற்றை ஒரு தங்கக் கிண்ணத்தில் சேகரித்து, அவர்களுக்கு ஊட்டும்போது, 'குழந்தைகளே, உண்மையான சமயத்திற்கு (பௌத்தம்) விசுவாசிகளாக இருங்கள். நீங்கள் புத்தரின் தர்மோபதேசங்களை அலட்சியம் செய்தால், இந்த உணவு உங்களுக்குச் செமிக்காது' என்றான். பிள்ளைகள் அங்கீகரித்து உண்டனர்.

இளவரசர்களுக்கு முறையே பன்னிரண்டு, பத்து



சமாதி புத்தர்:
இரட்டைத் தடாகமான குட்டன் பொக்கனையிலிருந்து அபயகிரி தூபியை நோக்கிவரும் வழியில் சமாதி நிலையில் புத்தர் சிலை ஒன்றுள்ளது. இது ஒரு வெண்சுண்ணக்கல் செதுக்கலாகும். கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
(நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)






மூன்று கவளங்கள் சோறு.

வயதுகள் நடக்கும்போது, அதே விதமாக உணவூட்டி அவர்களைப் பரீட்சிக்க மன்னன் விரும்பினான். பிக்குகளுக்கு அன்னமிட்டுப் பின்னர் அவர்களது கிண்ணங்களிலிருந்து சேகரித்த அன்னத்தை மூன்று பிரிவுகளாக்கி, தட்டினை ஏந்தி இளவரசர்கள் முன் அமர்ந்து சோற்றினை ஊட்டத் தொடங்கினான். முதலாவது கவளத்தை ஊட்டியபடி, 'எங்கள் இல்லத்தின் காவலர்களான பிக்குகளை ஒருபோதும் அலட்சியப்படுத்த மாட்டோம் எனச் சத்தியம் செய்து இதனை உண்ணுங்கள்' என்று வேண்டினான். அவர்கள் அதனை உண்டனர். இரண்டாவது கவளத்தை ஊட்டியபடி, 'நீங்கள் சகோதரர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டு சண்டையிடுவதில்லை எனச் சத்தியம் செய்து இதனை உண்ணுங்கள்' என்று கேட்க, இளவரசர்கள் அதனையும் உண்டனர். மூன்றாவது முறை உண்ணும்போது, 'தமிழர்களுடன் ஒருபோதும் சண்டையிடக்கூடாது எனச் சத்தியம் செய்து அதற்கு அடையாளமாக இதனை உண்ணுங்கள்' என மன்னன் கேட்டான். இளையமகன் தீசன் தந்தையின் கரத்திலிருந்த கரண்டியையும் பாற்சோற்றையும் தட்டிச் சிந்திவிட்டான். மூத்தவன் காமினி அபயன், கிண்ணத்திலிருந்த பாற்சோற்றை எடுத்து வீசிவிட்டு ஓடிப்போய், கைகளையும் கால்களையும் வயிற்றினுள் முடக்கியபடி கட்டிலில்

© Dr. K. Kunarasa



சமாதிப் புத்தர்:
அபயகிரி விகாரைக்கு அருஆக சமாதிப் புத்தரின் இன்றைய நிலை. போதிமனை ஒன்றினைச் சமாதிப் புத்தரின் மேல் அமைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகளை நீட்டி வசதியாகப் படு.

விழுந்தான். விகாரைதேவி, காமினியின் பின்வந்து, ‘மகனே, இப்படி முடங்கியபடி படுக்காது, கால்களை நீட்டி வசதியாகப் படு’ என்றாள். அதற்குக் காமினி, ‘அது எப்படிச் சாத்தியமாகும், தாயே? அந்தக் கரையில் கங்கைக்கு அப்பால் தமிழர்கள். இந்தப் பக்கத்தில் கோதா சமுத்திரம். எப்படி நான் கால்களை நீட்டிப் படுக்க முடியும்?’ என்றான். மன்னன் இதனைக் கேட்டு மௌனமானான்.

காமினி வளர்ந்து பதினாறு வயது வாலிபனானான்.

## 15.5 காமினி - அபயனின் பத்து மல்லர்கள்

நந்திமித்ரா முதல் லப்பிய வசபா வரை.

மகாவம்சத்தில் இருபத்திமூன்றாவது அதிகாரம் காமினி அபயனின் (துட்டகாமினி) பத்து மல்லர்களைப் பற்றி விபரிக்கின்றது. கண்டுலன் என்ற வலிமை வாய்ந்த யானையை விட நந்திமித்ரா, சூரநிமிலா, மகாசோனா, கோதம்பரா, தேரபுத்அபயா, பாரனா, வேலுசுமணா, கஞ்சதேவா, புஸ்ஸதேவா, லப்பியவசபா எனும் பத்து மல்லர்கள் இருந்தனர். இந்தப் பத்து மல்லர்களின் பாராக்கிரமங்களை விளக்குவதறகு மகாவம்சம் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு கதை கூறுகிறது. எல்லாளமன்னனின் தளபதிகளில் ஒருவனான மித்ராஎன்பானின் மருமகன் நந்திமித்ரா ஆவான். சிறு குழந்தையாக இருந்தபோது அவனை ஒரு கல் உரலுடன் பிணைத்துவிட்டனர். அவன் அதனையும் இழுத்துக்கொண்டு சென்றான். பத்து யானை களின் பலம் அவனுக்குண்டு. அவன் வளர்ந்ததும் தலை நகருக்குச் சென்று மாமனுடன் வசித்தான். தூபிகளுக்கும் ஏனைய புனிதச் சின்னங்களுக்கும் தமிழர்கள் சேதம் விளைவிப்பதைப் பொறுக்காது, இரவு வேளைகளில் இரகசியமாக நகருக்குள் சென்று தமிழர்களைப் பிடித்து இரண்டாகப் பிளந்து கொன்று வந்தான். அரசனுக்குத் தெரிய வந்தபோது உருகுணைக்குத் தப்பி ஓடி, அரசபடை யில் சேர்ந்து கொண்டான். இவ்வாறு ஏனைய ஒன்பது மல்லர்களுக்கும் கதைகளுள்ளன.

மகாகங்கையைக் கடந்து தமிழர்கள் உருகுணைக்குள் புகாதிருப்பதற்காக காக்கவண்ணதீசன், மகாகங்கையின் கரையோரங்களில் காவலரண்கள் அமைத்திருந்தான்.






மகாவலிக்கரை காவலரண்கள்.

காக்கவண்ணதீசனுக்கு இன்னொரு மனைவி மூலம் (அபிஸ்வரியா) திக்காபயன் என்றொரு மகனுண்டு. அவனை கச்சக்காதுறையில் அரண் அமைத்து காவல் புரிய நியமித்தான். கச்சக்காதுறையிலிருந்து இரண்டு ஜோஜனா தூரத்துள் வசிக்கின்ற குடும்பங்கள் தலைக்கு ஒரு மகனை இக்காவலுக்கு அனுப்ப நேர்ந்தது. கொத்திவலப் பிரதேசத்திலுள்ள கண்டகவித்திக் கிராமத்தில் வாழ்ந்த சம்ஹா என்ற கிராமத் தலைவனுக்கு ஏழு பிள்ளைகள். அவர்களில் ஏழாமவன் சூரநிமலா ஆவான். அவன் பத்து யானைகள் பலம் கொண்டவன். அவனும் திக்காபயன் படையில் சேர்ந்து கொண்டான்.

மகாசேனா.

குலம்பாரிப் பிரதேசத்தில் குண்டாரி வாவிக் கிராமத்தில் திசா என்பவனின் எட்டாவது பத்திரன் மகசோனா; பெரிய பனைகளைப் பிடுங்கக்கூடிய பத்து யானைகள் பலம் கொண்ட மல்லன். காமினி அபயனின் படையில் சேர்ந்து கொண்டான். கிரி என்ற பிரதேசத்தில் நிதுலாவித்தி கிராமத்தவன் கோதம்பரா; கோதாமலைக்கு அருகே கித்தி என்ற கிராமத்தில்தேரபுத்தபயா இருந்தான். பத்துப் பன்னிரண்டு வயதிலேயே பெரும் பாறைகளையும், நான்கு மனிதர்களையும் தூக்கும் வலிமை பெற்றிருந்தான். அவனும் காமினிஅபயனின் சேனாவீரனாகினான். கப்பகண்டாரக் கிராமத்தைச் சேர்ந்தவன் பாரணா என்ற மல்லன். கால்களினால் உதைத்தே பெரும் விலங்குகளைக் கொல்லும் பலம் வாய்ந்தவன். அவனும்



சந்திரவட்டக்கல்:
'அநுராதபுரக்காலக் கட்டிடங்களின் வாயில் மிதிப்பாக சந்திரவட்டக்கற்கள் (அரை . வட்டம்) பதிக்கப்பட்டிருக் கின்றன. இச்சந்திரவட்டக் கல்லின் முதல் வரிசையில் தீநாக்குகள்ளுளன. இரண் டாவது வரிசையில் யானை, குதிரை, சிங்கம், எருது ஆகிய விலங்குகளுள்ளன. அடுத்த வரிசையில் இலை களும் அதற்கு அடுத்த வரிசையில் தாராக்களுமுள் ளன. மத்தியின் தாமரை வடிவமமைக்கப்பட்டுள்ளது.
(நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலுசுமண.

இளவரசனின் படையணியில் இணைந்து கொண்டான். குத்தும்பியான்காக் கிராமத்தினைச் சேர்ந்த வேலுசுமணா அடங்காத குதிரைகளை அடக்கிச் சவாரி செய்யும் திறமைசாலி. அவனும், காமினி அபயனின் படையில் சேர்ந்து கொண்டான். மகிஸ்ஸாடொனி என்ற கிராமத்தைச் சேர்ந்த கஞ்சன்தேவா என்ற மல்லன், எருமைகளைக் கால்களில் பற்றித் தூக்கிச் சுழற்றி வீசக்கூடிய பலம் பெற்றவன். கவித்தா கிராமத்தைச் சேர்ந்த புஸ்ஸதேவா என்ற மல்லன், தடித்த மதில்களை ஊடுருவி அம்பு செலுத்தும் திறனுடையவன். விகாரைவாவி என்ற கிராமத்தைச் சேர்ந்தவன். லப்தியவசபா என்பவன் மண்ணை வெட்டிக் காவி, குறுகிய நேரத்தில் பெரும் அணையை உருவாக்கும் திறனுடையவன். இவர்களும் காமினி அபயனின் படையில் சேர்ந்து கொண்டனர்.

எப்தியவசமா.

இந்தப் பத்து மல்லர்களையும் அழைத்த மன்னன் காக்கவண்ணதீசன், அவர்கள் ஒவ்வொருவரையும் பத்துப் பத்து போர்வீரர்களைத் தெரிந்து சேகரிக்குமாறு பணித்தான். பின்னர் நூறு வீரர்களையும் பத்துப்பத்து வீரர்களைத் தம்முடன் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டான். இவ்வகையில் பதினோராயிரத்து நூற்றிப்பத்து வீரர்கள் கொண்ட சேனாசமுத்திரம் உருகுணையில் உருவாகியது.



**ஜேத்தவனராமதூபி:** இத்தூபி பற்றைபடர்ந்து காட்சி தருகின்றது. மகாவிகாரை தேரவாத பௌத்தத்துக்குரியது. ஜேத்தவனராம இன்னொரு பௌத்தமதப் பிரிவினராக விளங்கியமையால் கவனிப்பாரற்று நீண்டகாலம் கிடந்தது. கி.பி. 276ல் மகா சேனன் மன்னனாகியதும் மகாவிகாரையில் செயற்பாடுகளுக்கு அவன் எதிராகவிருந்தான். சங்கமித்த தேரர் என்ற தனது குருவிற்காக இந்த விகாரையை மகாவிகாரைக் காணிக்குள் ஆக்கிரமித்துக் கட்டி வழங்கினான். (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)






# 16. சகோதரர்களுக்கிடையிலான போர்

இளவரசன் காமினி அபயன் யானையேற்றம், குதிரையேற்றம், அவற்றிலிருந்து போர் புரியும் திறன், வில் அம்புப் பிரயோகம், வாட்போர் முதலான போர்க்கலைகளில் ஈடுமிணையுமற்றவனாகி, மகாகமத்தில் தங்கியிருந்தான். அவ்வாறு தீசனும் திறன் பெற்றிருந்தான். அவனைப் போர்வீரர்கள், தேர்கள் என்பனவற்றுடன் திகவாவிப் பிரதேசத்தில் தங்கியிருக்குமாறு காக்கவண்ணதீசன் பணித்திருந்தான்; தமிழர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இது விளங்கியது.

© Dr. K. Kunarasa



**ஜேத்தவனதூபி:** ஜேத்தவனதூபியின் புனருத்தாரன தோற்றம். கலாசார முக்கோணத் திட்டத்தின்கீழ் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றது.

*தமிழருக்கு எதிரான யுத்தத் திற்கு அனுமதி கோரல்.*

சிறிது காலம் கழிந்ததும் படைநிலைமையைக் கணித்த காமினி, தந்தையிடம், 'தமிழர்களுக்கு எதிரான போரைத் தொடங்க அனுமதியுங்கள்' என வினவினான். அதற்கு மன்னன், 'மகாகங்கைக்கு இப்பாலுள்ள பிரதேசம் எமக்குப் போதுமானது' என அறிவித்தான். 'அவசரப்படாதே, தமிழர் படையில் பத்துலட்சம் போர்வீரர்கள் உள்ளனர். இருபது பெரும் மல்லர்கள் உள்ளனர். தற்போதைக்கு மகாகங் கைக்கு இப்பாலுள்ள பிரதேசம் போதுமானது' எனவும் எடுத்துரைத்தான். காமினி மூன்று தடவைகள் தந்தையிடம் அனுமதி கேட்டும், மன்னன் சம்மதிக்கவில்லை. அதனால் கோபமுற்ற காமினி, 'எனது தந்தை ஆண்பிள்ளையாயின் இவ்வாறெல்லாம் பேசமாட்டார். அவரை இவற்றை அணியு மாறு கொடுங்கள்' எனப் பெண்கள் அணியும் அணிகளை அனுப்பி வைத்தான். கோபமுற்ற மன்னன் காமினியைத் தங்கச் சங்கிலியினால் கட்டிச் சிறை பிடிக்குமாறு ஏவலர் களை அனுப்பினான். காமினி அதிலிருந்து தப்பி மலை நாட்டிலுள்ள கொத்தா (கொத்மலை) என்றவிடத்துக்குத் தப்பி ஓடினான். தந்தையின் சொற் கேளாமையால் அவனைத் 'துட்டகாமினி' என அழைக்கத் தொடங்கினர். தம்பியை சத்தாதீசன் (நல்ல) என அழைத்தனர்.

*மன்னனின் வேண்டுதல்.*

அதன்பின்னர் மன்னன், மகாநக்கல சேத்தியத்தைக் கட்டுவித்தான். அதன் ஆரம்ப விழாவிற்குப் பன்னீராயிரம் பிக்குகளை அழைப்பித்தான். அவர்கள் முன்னிலையில் பத்து மல்லர்களையும் அழைத்து, 'என் பிள்ளைகள் தமக் குள் பிணக்குப்பட்டு போர் ஏற்படில் நீங்கள் எவர் பக்கமும் சாரக் கூடாது' எனச் சத்தியம் வாங்கிக் கொண்டான்.

## 16.2 மன்னனின் மரணம்

காக்கவண்ணதீசன் தன் வாழ்நாளில் அறுபத்திநான்கு விகாரைகளைக் கட்டுவித்தான். இறுதியில் மரணமடைந்த போது, மன்னனின் சடலம் மகாகமத்திலிருந்து திஸ்ஸமகா ராம விகாரையில் வைக்கப்பட்டது. செய்தியறிந்த இளவரசன் சத்தாதீசன், தீகவாவியிலிருந்து விரைந்து வந்து, தந்தை யின் இறுதிக்கிரியைகளை நிறைவேற்றி, தன்னை மன்ன னாக அறிவித்து, திரும்பும்போது பட்டத்து யானையான கண்டுலனையும், தன் தாய் விகாரைதேவியையும் தீக






வாவிக்கு துட்டகாமினி வருவதற்குமுன் அழைத்துச் சென்றான்.

*துட்டகாமினி திரும்பி வருதல்.*

உருகுணை அமைச்சர்கள் கலந்தாலோசித்து கட்ட கலையிலிருந்த துட்டகாமினிக்குக் கடிதமனுப்பி வைத்தனர். அவன் மகாகமத்திற்கு விரைந்து வந்து, அரசனாகப் பொறுப்பேற்றுக் கொண்டான். கண்டுலனையும் தாயாரை யும் உடன் அனுப்பிவைக்குமாறு தீசனுக்குத் துட்டகாமினி கடிதமனுப்பினான்; இவ்வாறு மூன்று தடவைகள் அனுப்பி யும், தீசன் இணங்காததால், அவன்மீது படையெடுப்பு நிகழ்ந்தது. குலன்கனியாபிட்டி என்றவிடத்தில் இரு படைக ளும் மோதிக் கொண்டன. ஆயிரக் கணக்கான அரச படையினர் மரணமடைந்தனர். துட்டகாமினியும் அமைச்சன் திஸ்ஸ என்பானும் மன்னனது குதிரையான திக்கதூலியும் தப்பி ஓட நேர்ந்தது. இளவரசன் தீசனும் அவனது படைவீரர் களும் அவர்களைத் தொடர்ந்தனர். அவ்வேளை இரு சகோதரர்களுக்கு மிடையில் ஒரு மலையைப் பிக்குகள் உருவாக்கினர். அந்த அதிசயத்தைக் கண்ணுற்ற தீசன் 'இதுதான் பிக்குகளின் வேலை' எனச் சலித்துக் கொண்டான்.

*முதல் யுத்தம் தோல்வி.*

தப்பியோடிய துட்டகாமினியும் அமைச்சனும் கப்பகந் தாரா நதியைக் கடந்து, மகாகமத்திற்குத் திரும்பி வந்தனர். அறுபதினாயிரம் பேர் கொண்ட சைனியத்தைச் சேர்த்துக் கொண்ட துட்டகாமினி, சகோதரன்மீது மீண்டும்



புராதன கிணறு ஒன்று:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலின் கீழில்லை.

படையெடுத்தான். துட்டகாமினி தனது புரவியில் வர, தீசன் கண்டுலன் யானைமீது ஆரோகணித்து வந்தான். இருவரும் மோதிக் கொண்டனர். சிறியதொரு ஈட்டியால் தீசனைக் காயப்படுத்தி வீழ்த்தினான். யானையோடு தப்பியோடிய தீசன், யானையால் தூக்கி எறியப்பட்டு, ஒரு விகாரையுள் நுழைந்து பிரதம தேரரின் பணிப்பின்படி ஒரு கட்டிலின்கீழ் நுழைந்து மறைந்து கொண்டான். துட்டகாமினி தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்தான். 'எங்கே தீசன்?' என வினவ, 'அவன் கட்டிலின்கீழில்லை மன்னா' என்றார் தேரர். துட்டகாமினி புரிந்து கொண்டான். விகாரையைவிட்டு வெளியேறி, விகாரையைச் சுற்றிக் காவலிட்டான். தீசனைப் படுக்கையில் படுக்க வைத்து மூடி, பிக்கு ஒருவரின் சடலத்தைக் காவி வருவது போல, நான்கு இளம் பிக்குகள் வெளியே கொண்டு சென்றனர். காமினிக்குத் தெரிந்தும் மௌனமாயிருந்தான். பின்னர் மகாகமத்திற்குத் திரும்பி, தன் தாயாரை அழைப்பித்துத் தன்னுடன் இருத்திக் கொண்டான்.

## 16.3 தீசனின் மன்னிப்புக் கோரிக்கை

தீகவாவிக்குத் திரும்பிய தீசன், கொடகத்த தேரரிடம், 'நான் தவறு செய்துவிட்டேன். என சகோதரனுடன்




நாக காவல் தெய்வம்:
ஜேத்தவன தாதுகோபத்திலுள்ள நாக காவல் தெய்வம் ஏழு தலை நாகம். குட்டன் பொக்கனையிலிருப்பது ஐந்துதலை நாகம்.





சமாதானமாகி மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன்' என்றான். ஐநூறு பிக்குகள் சூழ்ந்துவர, தேரர் தீசனை மகாகமத்திற்கு அழைத்து வந்தார். அரண்மனை வாசலில் சத்தாதீசனை நிறுத்திவிட்டு, தேரர் உள்ளே சென்றார். 'என்னுடன் தீசன் வந்துள்ளார்' என்றார் தேரர். துட்ட காமினி 'எங்கே அந்தத் துரோகி?' என எழுந்தபோது, விகாரைதேவி விரைந்து ஓடி வெளியே வந்து தீசனைத் தன் கரங்களால் அணைத்து அவனுக்குப் பாதுகாப்பளித்தாள். பிக்குகளின் தலையீட்டாலும் தாயின் வேண்டுதலாலும் தீசன் மன்னிக்கப்பட்டான். பின்னர், விவசாயப்



வாயிற்கல்:
ஜேத்தவனதூபியின் வாயிற் கல். மலர்ச்சாடி ஒன்றினைக் குள்ள மனிதன் தலையில் தாங்கியிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளைச் செய்வதற்காக தீசன், தீகவாவிக்கு மீண்டும் அனுப்பப்பட்டான் என மகாவம்சம் கூறுகிறது.

# 17. படைநகர்வு

மகாவம்சத்தின் 25 ஆவது அதிகாரம், துட்டகாமினி யின் எல்லாளன் மீதான படையெடுப்பையும் வெற்றியையும் பேசுகின்றது. துட்டகாமினி உருகுணையின் மன்னனாகிய தும் மக்களுக்கான நலன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து விட்டு, தனது பெரும் சைனியத்துடன் அணிவகுத்துத் திஸ்ஸமகாராம விகாரைச் சென்றான். அங்குள்ள பிரதம தேரரிடம், 'நான் மகாகங்கையைக் கடந்து அப்பாலுள்ள பிரதேசத்திற்கு, பௌத்த தர்மத்தை முன்னெடுப்பதற்காகச் செல்லவுள்ளேன். என்னுடன் வரக்கூடிய பிக்குகள் உடன் எமக்கு வாழ்த்தும் ஆசீர்வாதமும் செய்தபடி வரவேண்டும்' என்றான். பிரதம தேரர், ஐநூறு பிக்குகளை அவனுடன் அனுப்பி வைத்தார். அவனுடன் அவனது தாயார் விகாரைதேவியும் பயணப்பட்டாள்.

பௌத்த தர்மத்தை முன்னெடுக்கின்றேன்.

கண்டுலன் யானைமீது ஆரோகணித்து, சேனா வீரர்க ளும் பிக்குகளும் தொடர்ந்து வர, துட்டகாமினி மகாகமத்தி லிருந்து குத்தகல வரை அணிவகுத்து நகர்ந்தனர். மகியங்கணையில் சத்தா என்ற தமிழ்த் தலைவனை வெற்றி கொண்டு, தமிழ் வீரர்களை அழித்து அம்பத்திகா என்றவிடத்தையடைந்தான். அங்கு தித்தம்பன் என்ற தமிழனின் தலைமையில் இருந்த அரணை முற்றுகை யிட்டான். நான்கு மாதங்களாகப் போராடியும் தித்தம்பனை வெற்றி கொள்ள முடியாத நிலையில், தித்தம்பனின் பலவீனத்தைப் பயன்படுத்தி, தனது தாயார் விகாரை தேவியை அவன் பார்வையில் நிறுத்தி, அவளை அவனுக் குக் கலியாணம் செய்து தருவதாக ஆசைகாட்டி ஏமாற்றி, தித்தம்பனையும் அவனது சேனையையும் வெற்றி கொண்டானென மகாவம்சம் கூறுகிறது.

தித்தம்பனின் பலவீனம்.

துட்டகாமினியின் படை, மகாகங்கைக் கரையோரமாக வடக்கு நோக்கி முன்னேறி கேமராமா என்ற விடத்தில்






நிகழ்ந்த சண்டையில் ஒரே நாளில் ஏழு தமிழ் இளவல்க ளைச் சிறைப்பிடித்தது. அந்தரசோமா அரணை முற்றுகை யிட்டு, அதன் தளபதி மகாகொத்தன், டோனா அரணின் தளபதி கவரன், நாளிசோமா அரணின் தளபதி நாளிகன், திக்கபாயகல அரணின் தளபதி திக்காபயன், கச்சதீர்த்தம் அரணின் தளபதி காப்பிஸ்சன் முதலானோரைக் கொன்று துட்டகாமினி நான்கு மாதங்களில் வெற்றியை ஈட்டிக் கொண்டான். தொடர்ந்த சேனை மகா கங்கைக்கரையில் நிறுவப்பட்டிருந்த எல்லாளனின் படைத்தளங்களைத் துவம்சம் செய்தபடி முன்னேறியது.

எல்லாளனின் படைத்தள அரண்கள்.

கொத்தன்நகரின் படைத்தளபதி கொத்தன், வாகித்தன், கமணி, கும்பக்கமத்தில் கும்பன், நந்திக் கிராமத்தில் நந்திகன், காணுகமத்தில் காணன், தம்பன், உண்ணாமன், ஜம்பு ஆகிய தளபதிகளையும் துட்டகாமினி யின் படை வெற்றி கொண்டது. மகாகங்கையின் கரையோர



**ஜேத்தவன போதிமனை:** ஜேத்தவன விகாரையினருகில் காணப்படும் போதிமனையின் இன்றைய தோற்றம். வாயிற் தூண்களின் உயரத்தைக் கொண்டு (36 அடி) அங்கிருந்த புத்தர் சிலையின் உயரத்தைக் கணிக்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜித்த நகரக் கோட்டை முற்றுகை.

அரண்களில் தோல்வி கண்ட எஞ்சிய தமிழ் வீரர்கள் பின் வாங்கியோடி, விஜித்தநகரத்தில் விளங்கிய கோட்டைக் குள் புகுந்து கொண்டானர். நகரத்தின் தென்வாயிலில் இருபடைகளும் மோதிக் கொண்டன. அதேநேரம் கிழக்கு வாயிலில் வேலு சுமணவின் வீரர்கள், தமிழ் வீரர்களை வெட்டிச் சரித்துக் கொண்டு முன்னேறினர். அதனால் கோட்டையின் வாயில்கள் மூடப்பட்டன. முற்றுகை ஆரம்ப மாகியது. தென்வாயிலில் நந்தமித்தாவும் சூரநிமலவும் கண்டுவனுடன், மகாசோனா, கோதா, தேரபுத்ரா ஆகியோர் தம்படையுடன் ஏனைய வாயில்களிலும் முற்றுகையிட்டனர். விஜிதநகரம், மூன்று அகழிகளையும் உயர் மதில்களையும் கொண்டிருந்தது. எதிரிகளால் இலகுவில் கைப்பற்றமுடியாத கோட்டையாக விளங்கியது. கண்டுலன் கோட்டைக் கதவில் மோதி உடைக்க முயன்றது. ஆனால், மேலே மதிற் கோபுரங் களிலிருந்த வீரர்கள் பல் வகை ஆயுதங்களை ஏவியும், எரியூட்டிச் சிவந்த இரும்புக் கோளங்களையும் உருகிய உலோகக் குழம்பையும் யானைமீது பொழிந்தனர். கண்டுலன் காயமுற்று, குளத்தினுள் அமிழ்ந்து கொண்டது.

மல்லன் கோதம்பரா கோட்டைக் கதவை உடைத்துத் திறக்க முன்வந்தான். யானைகளை வாயிலில் நிறுத்தி னான். மருந்திட்டு எருமைத்தோல்களினால் போர்த்தப்பட்ட



**மிருசுவெட்டிதூபி:** மிருசவெட்டி தாதுகோபத்தின் பழைய வடிவம். கவனிப்பாரின்றிச் சிதைந்துள்ளது. துட்டகாமினி எல்லாளனை வெற்றி கொண்டதன் பின்னர் கி.மு. 158ல் இதனைக் கட்டுவித்தான். முதன்முதல் 200 அடி உயரத்தில் கட்டப்பட்ட பெரிய தூபி இதுவே. (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)






சிங்களப் படையின் வெற்றி.

கண்டுலன் மீது துட்டகாமினி ஏறிக்கொண்டான். இம்முறை கோட்டைக் கதவு மோதித் திறக்கப்பட்டது. கோட்டைக்குள் புகுந்த சிங்களப்படை எதிர்ப்பட்ட தமிழர்களை சங்காரம் புரிந்தது. நான்கு மாத முற்றுகையில் விஜிதநகரக் கோட்டை வீழ்ந்தது. அங்கிருந்து கிரில்லை சென்று, தளபதி கிரியாவை வெற்றிகொண்டபின், மகெலநகர் சென்றடைந் தது. அவ்விடத்தில் தளபதி மகலெனைத் தந்திரமாகக் கொன்றுவிட்டு, பாசறை அமைத்து சிங்கள வீரர்கள் நான்கு மாதங்கள் தங்கினர். பின்னர் அனுராதபுரத்திற்கு அருகிலுள்ள காசாபர்வதத்தின் அருகே துட்டகாமினி பாசறை அமைத்துக் கொண்டான்.

© Dr. K. Kunarasa



**மிருசுவெட்டித்தூபி:** மிருசவெட்டித் தாதுகோபத்தின் இன்றைய தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17.1 காசாபர்வதப் பாசறை

தனது அரண்களையும் கோட்டைகளையும் வெற்றி கொண்டு துட்டகாமினி தன் சேனா வீரர்களுடன் காசாபர்வதத்தில் பாசறை அமைத்துள்ள தகவல் எல்லாள னுக்குத் தெரியவந்தது. அமைச்சர்களை அழைத்து ஆலோசனை நடாத்தி தளபதி திக்கஜன் தலைமையில் மறுநாள் எல்லாளனின் படை புறப்பட்டது. துட்டகாமினி தனது தாயாருடனும் ஏனையோருடனும் ஆலோசனை நடாத்தி னான். தனது படையை முப்பத்திரண்டு அணிகளாகப் பிரித்து, ஒவ்வொரு அணியிலும் தன்னைப் போன்ற ஒருவனைத் தேர்ந்தெடுத்து வேஷமிட்டு நிறுத்தினான். தானும் ஒரு அணியில் இணைந்து கொண்டான்.

எல்லாளன் படையுடன் களம் புகுதல்.

மறுநாள் மன்னன் எல்லாளன் தனது பட்டத்து யானை மகாபர்வதத்தின் மீது ஆரோகணித்து படைசூழ களத்திற்கு வந்தான். தளபதி திக்கஜன் வாளும் கவசமும் ஏந்தி, துட்டகாமினி வகுத்த ஒவ்வொரு படையணியையும் துவம்சம் செய்து, துட்டகாமினி நிலைகொண்டிருந்த படை யணியை நெருங்கினான். அதனை அவதானித்த சூரநிமலா குறுக்கிட்டு திக்கஜனோடு போரிட்டு, அவனைத் தன் வாளினால் வெட்டி வீழ்த்தி, மன்னனைக் காப்பாற்றினான். தமிழர் படை அன்று பெருந் தோல்வியைச் சந்தித்தது.

துட்டகாமினி, பறை முரசறைந்து முழங்கி அறிவித்தான்: ‘எலாரா மன்னனுடன் எவரும் மோதக் கூடாது. நானே அவருடன் தனிச்சமர் புரிவேன்’. துட்டகாமினி கண்டுலன் மீதும், மன்னன் எல்லாளன் மகாபர்வதத்தின் மீது அமர்ந்து, அனுராதபுரத்தின் தென்வாயிலுக்கு வந்தனர். இரு மன்னர் களும் மோதிக் கொண்டனர். எல்லாளன் தனது ஈட்டியை வீச, துட்டகாமினி தன்னைப் பாதுகாத்துக் கொண்டான். துட்டகாமினி தனது யானையைக் கொண்டு, எல்லாளன் யானையை மோதித் தாக்கச் செய்தான். அவ்வேளை துட்டகாமினி வீசிய ஈட்டி எல்லாளனின் மார்பில் பாய்ந்தது. மன்னனும் யானையும் ஒரேநேரத்தில் நிலத்தில் சரிந்தனர்.

துட்டகாமினி இலங்கையின் சக்கரவர்த்தியானான். சேனாவீரர் சூழ்ந்துவர அவன் தலைநகரினுள் நுழைந்தான்.





பறையொலி எழுப்பி, மக்கள் பிரதானிகள் அனைவரையும் அழைத்து மன்னன் எல்லாளனின் இறுதிக்கிரியைகளை அரச மரியாதைகளோடு செய்யுமாறு பணித்தான். எந்தவிடத்தில் எல்லாளனின் உடல் மண்ணில் சரிந்ததோ, அதேவிடத்தில் தகனம் செய்ததோடு, அவ்விடத்தில் ஒரு நினைவுத்தூபியையும் (தக்கிணவிகாரை) அமைப்பித்தான். அந்த நினைவுச் சின்னத்தைக் கடப்பவர்கள் அமைதி காக்குமாறும், வாத்தியவொலிகள் எதுவும் அவ்விடத்தைக் கடக்கும் போது எழக்கூடாதெனவும் கட்டளையிட்டான். அதன்பின்னர் இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றி கொண்டு இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டான்.

நினைவுத் தூபி.

## 17.2 பாலுகன் படையெடுப்பு

விஜிதபுரம் கோட்டையும், தளபதி திக்கஜனின் மரணமும் நிகழ்ந்ததும், எல்லாளன் தனது மருமகன் பாலுகனுக்குப் படையுடன் வருமாறு செய்தி அனுப்பினான். அவனுடைய படை எல்லாளன், இறந்த ஏழாம் நாள் மகாதீர்த்தத்தை வந்தடைந்தது. அப்படையை துட்டகாமினியின் வீரர்கள் தோல்வியடையச் செய்தனர்.

## 17.3 பாட்டுடைத் தலைவன்

மகாவம்ச ஆசிரியர் துட்டகாமினியைத் தன் காவியத்தின் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளார்.

© Dr. K. Kunarasa



மிருசுவெட்டித்தூபி: இன்னோர் கண்கவர் தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்சத்தின் 37 அதிகாரங்களில் 22 ஆம் அதிகாரம் தொட்டு 32ஆம் அதிகாரம் வரையிலான 11 அதிகாரங்கள் துட்டகாமினியின் அரசியல் பணிகளுக்காகவும் சமயப் பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அவனுடைய அரசியல் பணிகளைக் கூற நான்கு அதிகாரங்களை எடுத்துக் கொண்ட மகாவம்ச ஆசிரியர், அவனுடைய சமயப் பணிகளை விபரிக்க ஏழு அதிகாரங்களைப் பயன்படுத்துகிறார். மகாதூபி எனப்படும் ரூவான் வெலிசாயவை நிறுவுவதற்கு அவன் ஆற்றிய பணிகளை விளக்க நான்கு அதிகாரங்கள் செலவிடப்பட்டுள்ளன.

தமிழர்கள் மீதான அசூசையையும், அவர்களை வெற்றி கொள்ள வேண்டுமென்ற விருப்பையும் துட்டகாமினியின் பெற்றோர் காக்கவண்ணதீசனும், விகாரைதேவியும் சிறு வயதிலிருந்தே அவன் நெஞ்சில் கனலாக எரிய விட்டுள்ளனர். விகாரைதேவி நேரடியாகவும், காக்கவண்ணதீசன் எதிர் மறையாகவும் அக்கனலைக் கிளறி அணையாது பார்த்துக் கொண்டனர். தமிழர் மீது படையெடுக்காதே, மகாகங்கைக்கு இப்பாலுள்ள நிலமே போதும்' என்று காக்கவண்ணதீசன் கூறியதன் மூலம், அதற்கு மாறான விருப்பினைத் துட்ட காமினியின் மனதில் விதைத்தான். பிளவுபட்டிருந்த உருகுணையை ஒன்றாக்கியதன் மூலமும் பத்து மல்லர்களையும் ஆயிரக்கணக்கான சேனாவீரர்களையும் அவனே உருவாக்கியதன் மூலம் அவனே யுத்தத்திற்குக் காரணனாயினன். தீசனின் தலைமையில் தீகவாவியில்

© Dr. K. Kunarasa



**இசுறுமுனியா சைத்தியம்:** இசுறுமுனியா சைத்தியம் தேவநம்பியதீசனால் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இங்கு ஆரம்பத்திலிருந்த ஈஸ்வர ஆலயத்தை அகற்றி அவ்விடத்தில் இப்பொளத்த பள்ளியை அமைப்பித்தான். இதன் பழைய பெயர் ஈஸ்வரமுனி ஆகும்.






ஒரு படையணியையும், இன்னொரு மகன் திக்காபயனின் தலைமையில் மகாகங்கைக் கரையில் ஒரு படையணியையும் நிறுத்தியிருந்தான். துட்டகாமினிக்கே ஆட்சி கிடைக்க வேண்டுமென்பதில் கவனமிருந்ததால் சகோதரர்களைப் பிரித்து வெவ்வேறிடங்களில் இருக்க வைத்தான். திக்காபயனின் தாய், காக்கவண்ணதீசனின் முதல் மனைவி கதிர்காமச்சத்திரிய குலப்பெண்; தமிழ்ப்பெண். அதனால் திக்காபயனுக்கு அரசுரிமை கிடைக்கக்கூடாதென்பது காக்கவண்ணதீசனின் விருப்பம். அதனால் தான், திக்காபயன், எல்லாளனுடன் சேர்ந்து உருகுணையை அவன் மூலம் பெற விரும்பியிருக்க வேண்டும். எனவேதான் மகாகங்கைக் கரையில் நான்காவது அரணிலிருந்த திக்காபயனையும் அவனது வீரர்களையும் துட்டகாமினி எல்லாளன் மீதான படையெடுப்பின்போது கொல்ல நேர்ந்துள்ளது.

தன் மகன் துட்டகாமினியின் புகழால் தன் புகழ் துலங்காது போன துர்ப்பாக்கியசாலி.

'தன் மகன் துட்டகாமினியின் புகழால், தன் புகழ் துலங்காது போன துர்ப்பாக்கியசாலி, காக்கவண்ணதீசன்' என வரலாற்றாசிரியர்கள் கணிப்பர். காக்கவண்ணதீசன் தன் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் துட்ட காமினியின் வெற்றியை இலகுவாக்கின எனலாம். யுத்தத்தில் வெற்றியைப் பெறுவதற்காகத் துட்டகாமினி கையாண்ட தந்திரங்கள் ஏற்புடையனவல்ல. தனது தாயா ரான விகாரைதேவியை அம்பதீர்த்தத்தின் படைத்தளபதி

© Dr. K. Kunarasa



**இசுறுமுனியா:** கோயிற்குளத்தோடு கூடிய காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் இலாபம் கருதிய ஒழுக்கவீனம்.

தித்தம்பனின் முன் பார்வைக்கு நிறுத்தியதோடு, அவனுடான தாயின் திருமணத்திற்கும் அரசியல் இலாபம் கருதிய துட்ட காமினியின் சம்மதம் இருந்துள்ளது. மகாவலிகங்கை மருங்கே எல்லாளனின் இராணுவத்தளங்கள் இருந்தன. மகியங்கணை, அம்பதீர்த்தம், சர்ப்பக்கோட்டை, அந்தர சொப்பம், நாளிசொப்பம், கச்சதீர்த்தம், கொத்தநகரம், நந்திக்கிராமம், விஜிதபுரம் முதலான தமிழரின் படையணி களைத் தன் படைவலிமையாலும், தந்திர உபாயங்களா லும் துட்டகாமினி வெற்றி கொண்டான். காசபர்வத்தில் பாசறை அமைத்துத் தங்குவதற்குக் காரணம், உருகுணையிலிருந்து படை புறப்பட்டு ஓராண்டாகியதும், படைக்குப் பலத்த அழிவுகள் ஏற்பட்டமையால் வீரர்களுக்கு ஓய்வு அளிக்கவும், உருகுணையிலிருந்து ஆளணி பெறவும், உணவுப் பொருட்களைப் பெறவுமாம்.

தனிச்சமர் மூலம் எல்லாளன் விட்ட தவறு.

எல்லாளனைத் துட்டகாமினி தனிச்சமருக்கு அழைத்த சவாலை எல்லாளன் ஏற்றதன்மூலம் பெருந்தவறு செய்தான். எல்லாளன் 72 வயதுடைய முதியவன். துட்ட காமினியோ இளைஞன். 'தனது தனிப்பட்ட வீரம், வெற்றி என்பனவற்றுடன், தமிழ்ஈழக் குடிமக்களின் வீரம், வெற்றி, நல்வாழ்வு என்பன வற்றைத் தொடர்புபடுத்தியமையால், எல்லாளனின் தனிச் சமர் தமிழ் ஈழமக்களின் தோல்வியாயிற்று' என திருச்செல்வம் குறிப்பிடுவார். (திருச்செல்வம். மு - 1977) தனிச்சமருக்கு விடுத்த அழைப்பை ஏற்காது விடுவது அரசதர்மத்திற்கு முரண் என எல்லாளன் கருதியிருக்க முடியும்.

துட்டகாமினியின் விடுதலை வேட்கையைக் குறைத்தோ, தவறாகவோ மதிப்பிட முடியாது. அனுராதபுர சிம்மாசனத்தில் சிங்களவரும் தமிழரும் மாறிமாறி அமர்ந்து ஆட்சிபுரிந்துள் ளனர். ஆட்சியாளர் தமது ஆதிபத்தியத்தை விரிவாக்கவும் அதிகாரத்தை நிலைநாட்டவும் விரும்புவது இயல்பே. அனு ராதபுர சிம்மாசனத்தில் அமர்வதற்கு துட்டகாமினி விரும் பியதில் எதுவித குறையுமில்லை. ஆட்சியில் அமர சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் மோதிக் கொண்டனர். மக்கள் இருதிறத்தாரது ஆட்சியையும் ஏற்றுக் கொண்டனர். தன் திறத்தார் ஆளும் போது மகிழ்வும், மறுதிறத்தார் ஆளும்போது சகிப்புத் தன்மையும் இருந்திருக்க வேண்டும்.





பூதவுடலுக்கு அளித்த கௌரவம்.

துட்டகாமினி, எல்லாளனின் மரணத்தின்பின்னர் அவனுடைய பூதவுடலுக்கு அளித்த கௌரவம் குறிப்பிடத் தக்கது. எல்லாளன் வீழ்ந்திறந்த விடத்தில் சைத்தியம் ஒன்றினைக் கட்டி, 'எந்த மனிதனாயினும் அவன் இளவரச னாக இருந்தாலும் சரி சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி, இந்த வழியாகச் சிவிகையிலோ, மூடுபல்லக்கிலோ வரநேர்ந்தால் வாத்தியவொலி எழுப்பக் கூடாது' என கற்றூ ணில் பொறித்து வைத்துள்ளான். மகாவம்ச ஆசிரியரும் எல்லாளனின் நீதி நெறி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துள் ளார். எல்லாளனின் சில படைவீரர்கள் அல்லது இனத் துவேசம் கொண்ட சில தமிழ் குடிகள் அனுராதபுரத்தில் பௌத்த சைத்தியங்களுக்கும் சமயச் சின்னங்களுக்கும் இழைத்த தீங்குகளையும் அவர் குறிப்பிடாது விடவில்லை.

'தமிழர்கள் சைத்தியங்களுக்கு விளைவிக்கின்ற கொடுமைகளைத் தாங்க முடியாத நந்திமித்திரன் என்ற மல்லன் அனுராதபுரத்தை விட்டு ஓடிச் சென்றதாக மகா வம்சம் கூறுகிறது. தானறியாது, தவறுதலாக சைத்தியத் திற்கு நிகழ்ந்த பாதுகாப்பிற்குத் தன் சுய விருப்பத்தின் பேரிலே தண்டனையைப் பெற்றுக்கொள்ள முன்வந்த எல்லாள மன்னரோ, அவரது பௌத்த அமைச்சர்களோ ஏனைய தமிழர்கள் சைத்தியங்களை நிந்தனை செய்வதற்கு இடமளித்து வாளாவிருந்திருப்பார்கள் என்பது ஏற்றுக்



**வெசகிரிய சேத்தியம்:** இது இசுறுமுனியாவின் ஒரு அங்கமாக விளங்கியது. மகிந்தரால் ஐந்நூறு வெசா மக்கள் (ஒரு சாதி) பௌத்தர்களாக மாற்றப்பட்டனர். வெசகிரிய சேத்தியம் புராதன வதிவிடக் குகைகளைக் கொண்டது. இதன் பழைய பெயர் 'இசிராமணா' என்பதாகும். (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள தேசியவாத யுத்த கோஷம்.

கொள்ளமுடியாத கூற்றாகும். இது உருகுணையில் வசிக்கின்ற பௌத்த மக்களை எல்லாள மன்னருக்கு எதிராக அணிதிரள வைப்பதற்குத் துட்டகாமினியால் கோர்த்துக் கட்டப்பட்ட கட்டுக் கதையாகும். இவ்விராச்சியத்தில் எல்லாள மன்னருக்குச் சார்பாகத் தமிழ்மக்களும், சிங்கள மக்களும் நெருங்கி உறவாடும்போது, சிங்கள தேசியவாத யுத்தக் கோஷமொன்றை முன்வைப்பது பயனற்ற செயல் எனத் துட்டகாமினிக்குத் தோன்றியிருக்கலாம்' என லயனல் சரத் என்பார் புராதன இலங்கையின் சிங்கள தமிழ் உறவுகள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (லயனல் சரத்)

அரச போகத்திற்காகவன்று.

துட்டகாமினி எல்லாளனுக்கு எதிரான யுத்தத்திற்கு மதத்தை முன்வைத்தான். 'நான் அரசபோகங்களுக்காக இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. பௌத்த சாசனத்தின் உன்னதத்திற்காகவே போர் தொடுக்கின்றேன்' என்ற கவர்ச்சிகரமான சுலோகத்தையும் முன்வைத்தான். உண்மையில் எல்லாளனுக்கு எதிராக சமயரீதியாகவோ, இனரீதியாகவோ எதிர்ப்பு ஏற்பட எதுவித அடிப்படையுமில்லை. எல்லாளன் போன்ற செங்கோல் அரசன் ஒருவனை வெற்றி கொள்வது இலகுவல்ல. அதனால்தான் மேற்படி சுலோகத்தையும், பௌத்த துறவிகளை படையுடன் அழைத்து வந்தும் போரை நடாத்தியுள்ளான். 'பௌத்த பிக்குகள்



**இசுறுமுனியா சிற்பம்:** இசுறுமுனிய சைத்தியத்திலுள்ள குதிரையும் வீரனும். இச்சிற்பத்தினை ஐயனார் என அடையாளம் காண்பர். (நன்றி: தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம்)





யுத்தமொன்றுடன் தொடர்புபடும் சம்பவம் வரலாற்றில் இதுவே முதல் தடவை' என கும்புருகமுவே வாஜிரஹிமி சொல்வார். (கும்புருகமுவே வாஜிரஹிமி - 1996)

துட்டகாமினி இலங்கையின் மன்னனாக முடிபுனைந்த பின்னர் பௌத்த தேரர்களிடம் தனது மனத்துயரை வெளியிட்டான். 'ஆயிரக்கணக்கானவர்களை எனது வாளுக்கு இரையாக்கியுள்ளேன். என் மனதில் அமைதியில்லை' என வினவுகிறான். 'பௌத்தத்தை நம்பாதவர்கள், பைசாச வழிபாட்டையை அனுட்டிப்பவர்கள், விலங்குகளுக்குச் சமனாகக் கருதப்பட வேண்டியவர்கள்' எனச் சங்கத்தினர் கூறுகின்றார்கள். (Mavamsa - XXv) பரணவிதான தனது கட்டுரையில், 'துட்டகாமினியால் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் (தமிழர்) பௌத்தத்தில் நம்பிக்கையில்லாதவர்கள். பாவம் செய்தவர்கள். விலங்குகளிலும் மேலானவர்கள் எல்லர். இவர்களைக் கொன்றதால் பாவம் சேராது' என விளக்குகிறார். (Paranavithana.S - 1961 )

கி.மு.145 தொட்டு கி.மு.101 வரையிலான 44 ஆண்டுகள் இலங்கையை எல்லாளன் ஆண்டுள்ளான். கி.மு. 101 இலிருந்து கி.மு. 77 வரை துட்டகாமினி இலங்கையில் அரசோற்றினான். இருவரது படைகளிலும் சிங்களப் போர்வீரர்களும், தமிழ்ப் போர்வீரர்களும் இருந்துள்ளனர் என ஊகிக்கலாம். உதாரணமாக, உருகுணையின் இளவரசான திக்காபயன் எல்லாளன் படையில் இருந்துள்ளான்.

© Dr. K. Kunarasa

**இசுறுமுனிய சிற்பம்:** இசுறுமுனிய சைத்தியத்திலுள்ள யானை சிற்பம்.



எல்லாளனின் படைத்தளபதிகளில் ஒருவரான மித்திரனின் மருமகன் நந்தமித்திரன் உருகுணைச் சேவையில் ஒரு தளபதியாக விளங்கியுள்ளான்.

எல்லாள மன்னனது ஆட்சிக் காலம்.

எல்லாள மன்னனது ஆட்சிக்காலத்தில் அனுராதபுரம் (இராசரட்டை) மிக அமைதியுடன் விளங்கியுள்ளது. ஆனால் உருகுணை அவ்வாறிருக்கவில்லை. உருகுணையிலிருந்து பல்வேறு சிற்றரசர்களை காக்கவண்ணதீசன் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நேர்ந்தது. துட்டகாமினுக்கும் மாமன் கிரி அயனுக்கும், துட்டகாமினிக்கும் தந்தை காக்கவண்ணதீசனுக்கும், துட்டகாமினிக்கும் சகோதரன் திக்காபயனுக்கும், துட்டகாமினிக்கும் சகோதரன் சத்தாதீசனுக்கும் முரண்பாடுகள், யுத்தங்கள் நிகழ்ந்துள்ளன. அமைதி உருகுணையில் குலைந்திருந்தது. அதேவேளை எல்லாள மன்னனின் ஆட்சியில் இராசரட்டை வளம் பொருந்தியதாக விருந்தமைக்கான சான்றுகள் பலவுள. அக்கால அனுராதபுர இராச்சியத்தில் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட உயர்தரப் புடைவை வகைகளும், நறுமணம் கமழும் பொருட்களும், குவிந்திருந்தன. காக்கவண்ணதீசனின் போர்வீரர்களில் ஒருவரான சூரநிமலன் மிகுந்தலைக்கு அண்மையிலுள்ள தொரமடலாகமையை நோக்கிச் செல்லும் வேளையில் அனுராதபுரநகரில் சந்தை விற்பனை நிலையங்களில் வாசனைப் பொருட்களையும், குண்டலினி எனும் பிராமணரிடமிருந்து பூர்ணவர்த்தனம் எனும் புடைவை வகைகளையும் வாங்கிச் சென்றதாக மகாவம்சம் கூறுகிறது. அப்பயணத்தின் போது சூரநிமலன் மகாவிகாரைகளையும் தூபராமாவையும் தொழுது வணங்கிச் சென்றதாக மகாவம்சம் கூறுகிறது. எல்லாள மன்னரது ஆட்சியின் கீழ் இந்த புனித தலங்கள் உரியமுறையில் பாதுகாக்கப்பட்டிருந்தமை புலனாகிறது என லயனல் சரத் குறிப்பிடுகிறார். (லயனல் சரத்- 2001)

தவறான கண்ணோட்டம்.

'எல்லாள - துட்டகாமினி யத்தம் பற்றி தவறான கண்ணோட்டம் நீங்க வேண்டும். அன்று துட்டகாமினி மன்னன் தனது அரசை வியாபித்து, சம்பிரதாய விழுமியங்களுக்கமைய செல்வாக்குப் பெற்றிருந்த பிரதான பௌத்த சமய மத்திய நிலையங்களைத் தனது அதிகாரத்





இனவாத யுத்தமல்ல.

துக்குக் கீழ்க் கொண்டு வருவதற்காகப் போரிட்டாரே தவிர இந்த யுத்தம் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே நடந்த இனவாத யுத்தமொன்றல்ல' என்பது லயனல் சரத்தின் கருத்தாகும். எல்லாள - துட்டகாமினி யுத்தத்தில் 21870 யானைகளும், 65610 குதிரைகளையும், 21870 யுத்த வாகனங்களும், 109350 போர்வீரர்களும் மாண்டனர். (லயனல் சரத்-2001). இது மிகைக் கூற்றாகும்.

## 17.4 துட்டகாமினியின் சமயப்பணி

மகாவம்சத்தின் 26 ஆவது (XXVI) அதிகாரத்திலிருந்து 32 ஆவது அதிகாரம் வரை துட்டகாமினி புத்தசாசனத்தின் மேம்பாட்டின் பொருட்டுச் செய்த சமயப்பணியை விபரிக்கின்றது. துட்டகாமினி அனுராதபுரத்தில் நிறுவிய முதலாவது தூபி, திசாவாவிக்கு அண்மையில் அவன் கட்டிய மிரிசுவட்டி தாதுகோபமாகும். அவன் பின்னர் ஒன்பது மாடிகளைக் கொண்ட லோகபாசாத என்ற லோகமகாபாயா எனப்படும் உபோசத மண்டபத்தினை




**இசுறுமுனிய சிற்பம்:**
இசுறுமுனியா சைத்தியத்திலுள்ள காதலர் சிலை. இதனை சிவன் - சக்தியாக அடையாளங் காண்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவிகாரைக்கு அண்மையில் நிறுவி, மகாவிகாரைக்கு வழங்கினான். இது பித்தளையால் கவிக்கப்பட்டமையால் பித்தளை மாளிகை எனப்பட்டது. துட்டகாமினியின் மிகப் பாரிய பணி, மகாதூபி எனப்படும் ரூவான்வெலிசாயா எனப்படும் தாதுகோபத்தை அமைத்தமையாகும். இலங்கையிலேயே மிகவுயர்ந்த மகாதூபியாகும். துட்ட காமினி தனது ஆயுட்காலத்தில் இத்தூபியை முழுமை யாகப் பூரணப்படுத்தவில்லை. மன்னன இறப்பதற்கு முன் தாதுகோபத்தின் பூர்த்தி பெறாத பகுதிகளைத் துணிகளால் மூடிக் கட்டியதுடன் பூர்த்தி பெற்றதாக சத்தாதீசன் துட்டகாமினிக்குக் காட்டுவித்தான். அவனுக்குப் பின்னர் அரியாசனம் ஏறிய தம்பி சத்தாதீசனே இத்தூபியைக் கட்டிமுடித்து நிறைவேற்றினான். கி.மு. 101 இல் அரசகட்டிலேறிய துட்டகாமினி கி.மு. 77 வரை ஆட்சி புரிந்துள்ளான். அவனது 24 வருட ஆட்சியில் பௌத்த மதத்திற்கு அவன் ஆற்றியபணி முக்கியமானது.

© Dr. K. Kunarasa



**சிவ - சக்தி சிலை:**
இசுறுமுனியா ஆலயத்தின் பாறையில் செதுக்கப்பட்டிருந்த இச்சிலையை அங்கிருந்து வெட்டி அகற்றி வேறொரு இடத்தில் காட்சிக்கு வைத்துள்ளனர். சிலையைத் தேய்த்து மூலவடிவத்தையும் சிதைத்துள்ளனர்.





# 18. சத்தாதீசன் - மகாசேனன்

## 18.1 பத்து மன்னர்கள்

மகாவம்சத்தின் 33 ஆவது (XXXIII) அதிகாரம் துட்டகாமினிக்குப் பின் அரசாண்ட பத்து அரசர்களைப் பற்றி விபரிக்கின்றது. மாமன்னன் துட்டகாமினிக்கு சாலி என்ற அரசகுமாரன் மகனாக இருந்தான். அசோகமாலா என்ற சண்டாளப் பெண்ணொருத்தி மீது கொண்ட காதலால், அவன் தனது முடியைத் துறந்தான். அதனால் துட்டகாமினியின் சகோதரன், சத்தாதீசன் மன்னனாகி, 18 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான். (கி.மு. 77 - கி.மு. 59) மகாதூபியின் யானைச்சுவர்களை சத்தாதீசன் நிறைவு செய்தான். ஒரு தடவை தீக்கிரையான லோகபாசாதாவை மீண்டும் அமைத்துக் கொடுத்தான். அத்தோடு அவன் தக்கிணவிகாரை, கல்லகாலேன விகாரை, காலமீபா விகாரை, பெற்றினகவலி விகாரை முதலான பல விகாரைகளை அனுராதபுரத்திலிருந்து தீகவாவி வரை நிறுவினான். தீகவாவி விகாரையையும் சைத்தியத்தையும் இவனே கட்டுவித்தான்.

சத்தாதீசன் இறந்ததும் அவனது பிள்ளைகள் அரச உரிமைக்காகச் சச்சரவுப்பட்டனர். தூபராமை விகாரைப்

© Dr. K. Kunarasa



**கந்தளாய்க்குளம்:**
புராதன நீர்ப்பாசனக் கலாசாரத்திற்குத் தக்க எடுத்துக்காட்டாக அமையும், புராதன நீர்ப்பாய்ச்சல் கலிங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூலத்தனன், லஞ்சதீசன், வலகம்பா.

பிக்குகள் இரண்டாவது மகன் **தூலத்தனன்** என்பானை அரசனாக்கியதும், மூத்தவன் **லஞ்சதீசன்** படையுடன் வந்து தனக்குரித்தான சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். தூலத்தனன் ஆக 40 நாட்களே அரசிருக்கையில் அமர்ந்திருந்தான். லஞ்சதீசன் (கி,மு. 59 - 50) ஒன்பது ஆண்டுகள் அரசனாக விளங்கினான். அவன் மரணமடைந்ததும் அவனது மற்றொரு தம்பி **கல்லாடநாகன்** முடிதரித்தான். (கி,மு. 50 - 44) கம்மகாரத்தகன் என்ற படைத்தளபதி, மன்னனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியபோது, மன்னனின் இளைய சகோதரனான வட்டகாமினி (வலகம்பா) மீண்டும் உரிமையைக் கைப்பற்றிக் கொண்டான். கம்பகாரத்தகன் கொல்லப்பட்டான்.

வட்டகாமினி, கல்லாடநாகனின் சிறு குழந்தையான மகாசூலியைத் தன் மகனாகவும், அக்குழந்தையின் தாய் அனுலாதேவியைத் தன் பட்டமகிஷியாகவும் ஏற்றுக் கொண்டான். வட்டகாமினியின் ஆட்சிக்காலம் பிரச்சனைகள் மிகுந்ததாகவிருந்தது. உருகுணையைச் சேர்ந்த பிராமணன் திஸ்ஸன் பெருங்கலகம் ஒன்றை அரசனுக்கு எதிராகத் தூண்டிவிட்டபோது, எழு தமிழர்கள் தம் படையுடன் மகாதீர்த்தத்துறையில் வந்திறங்கினர். இராச்சியத்தைக் கையளிக்குமாறு வட்டகாமினியைப் பணித்தனர். 'தமிழர்களைத் தோற்கடித்தால், இந்த இராச்சியம் உன்னுடையதே' என்று வட்டகாமினி, பிராமணன் திஸ்ஸனுக்கு அறிவித்தான். அதை நம்பிய திஸ்ஸன், ஏழு தமிழர்களுடன் பொருது தோல்வியடைந்தான்.

பயந்தோடிய கருஞ்சிங்கம்.

**புலஹஸ்தன், பாகியன், பனையமாறன், பிளையமாறன்,** தாடிகன் முதலான ஏழு தமிழ்ப்பிரதானிகளின் படை கொலம்பகால என்றவிடத்தில் மன்னனின் வீரர்களை எதிர்த்து வெற்றி கொண்டது. மன்னன் தேர் ஒன்றில் ஏறி தித்தாராமை சைத்தியத்தைக் கடந்து வேகமாகப் பின் வாங்கி ஓடியபோது, பௌத்தமதத் துறவியல்லாத சமயத் துறவி கிரி என்பான், பெரும் கருஞ்சிங்கம் பயந்து ஓடுகிறது' எனக் கேலி செய்தான். 'நான் மீண்டும் ஆட்சியில் அமரில் தித்தாராமை இருக்குமிடத்தில் ஒரு விகாரையைக் கட்டுவேன்' என வட்டகாமினி தீர்மானம் செய்தான்.





கரந்துறைதல்.

அவன் தனது தேரில் மனைவியரான அனுலாதேவி, சோமாதேவி இளவரசர்களான மகாசூலி, மகாநாகன் ஆகியோரடன் தப்பி ஓடினான். தேரின் பாரம் அதிகமாகவிருந்தமையால், பாரம் குறைந்தால் பாதுகாப்பான இடத்தை விரைவாக அடையலாம் என எண்ணி சோமாதேவியை இடைநடுவில் இறக்கிவிட்டு ஏனையோருடன் தப்பி வெசகிரிக் காட்டிற்குள் புகுந்தான். அங்கு குப்பிக்கலா விகாரையின் தேரர் மகாதிஸ்ஸ அவனுக்கு உணவும் அடைக்கலமுந் தந்தார். அங்கு இடம்மாறி இடம்மாறி 14 ஆண்டுகள் கரந்துறைந்தான்.

ஏழு தமிழ்ப் பிரதானிகளில் ஒருவன், சோமாதேவியை தன்னுடைமையாக்கிக் கொண்டு மரக்கலமேறினான். இன்னொருவன் அதிசய சக்திகள் நிறைந்த புத்தரின் ஜலக்கலத்தை அபகரித்துக் கொண்டு நாட்டை விட்டோடினான். புலஹத்தன் அனுராதபுர சிம்மாசனமேறி மூன்றாண்டுகள் அரசாட்சி செய்தான். அவனை பாகியன் கொன்று மன்னனாகி இரண்டாண்டுகள் ஆட்சி செய்தான். பனையமாறன் பாகியனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றி ஏழாண்டுகள் அரியாசனமிருந்தான். அவனை



**காவல் தெய்வம் - துவாரபாலகர் - நாகமன்னன்:**
ஒன்பது தலை நாகம் நிழல் தருகிறது. அநுராதபுரத்தின் அனைத்துக் கட்டமைப்புக்களிலும் நாககாவல் தெய்வத்தைக் காணலாம். இது வெள்ளரசுக் கோயிலின் வாயிலிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளையமாறன் கொன்று மன்னனானான். அவனைத் தாடிகன் கொன்று அனுராதபுரத்தை இரு ஆண்டுகள் ஆட்சி செய்தான். எனவே, ஐந்து தமிழ் மன்னர்கள் இலங்கையை பதினான்கு ஆண்டுகள் ஏழு மாதங்கள் (கி.மு. 44- கி.மு. 29) ஆண்டனர். இதன் முடிவில் வட்டகாமினி, பெரும் படையைத் திரட்டி, உருகுணையிலிருந்து வந்து தாடிகனைக் கொன்று தன் அரியணையை மீட்டான். அதன்பின் பன்னிரண்டாண்டுகள் அரசாட்சி செய்தான். (கி.மு. 29- கி.மு.17)

வட்டகாமினி மீண்டும் அரசனாதல்.

வட்டகாமினி மீண்டும் அரசனானதும், முதல் வேலையாக தித்தாராமை சமணப்பள்ளியை உடைத்துவிட்டு, அவ்விடத்தில் அபயகிரி விகாரையை அமைப்பித்தான். வட்டகாமினி அபயன் என்ற தனது பெயரின் இறுதியையும் பரிகசித்த சமணன் கிரியின் பெயரையும் இணைத்து அதற்கு அபயகிரி விகாரை எனப் பெயரிட்டான். முன்னர் கரந்துறைந்த போது உதவிய மகாதிஸ்ஸ தேரரை அழைப்பித்து அந்த விகாரையை அவரிடம் கையளித்தான். தனிப்பட்ட முறையில் அபயகிரி விகாரையை மகாதிஸ்ஸ தேரர் ஏற்றுக் கொண்டமை ஒழுக்கத்துக்கு (வினய) மாறானதென மகாவிகாரைப் பிக்குகள் கருதினர்.

கவர்ந்து செல்லப்பட்ட சோமாதேவியை மீண்டும் வரவழைத்துக் கொண்டான். அவள் பெயரால் சோமராம சைத்தியத்தைக் கட்டுவித்தான். மகாதூபிக்கு வடக்கே

© Dr. K. Kunarasa



அநுரதபுரக்காலச் சிற்பம்: கருங்கற்றூண் ஒன்றின் உச்சாரப்பகுதியும், வாயிற்புறக் கும்பகலசமும்.





சிலாசோபக கந்த சேத்தியத்தை அமைத்தான்.

உத்தியன்.


வட்டகாமினியின் எட்டு மாவீரர்களில் ஒருவனான உத்தியன், அனுராதபுரத்தின் தென்பகுதியில் தக்கிண விகாரையைக் கட்டினான். (இத்தக்கிணவிகாரையே எல்லாள மன்னனின் சமாதி என்பர்). இவ்வாறு அவனது அமைச்சர்களும் பல விகாரைகளைக் கட்டுவித்தனர்.

பௌத்த மதப் பிரிவுகள்.

வட்டகாமினியின் காலத்தில் பௌத்த மதத்தில் இரு பிளவுகள் ஏற்பட்டன. ஏற்கனவே மகாதிஸ்ஸ தேரரை மகாவிகாரையினர் விரும்புவதில்லை. அவருடைய சீடர், பகலமசுதிஸ்ஸ தேரர் மகாவிகாரையிலிருந்து விலகி, அபயகிரி விகாரையில் தான் சார்ந்த ஐநூறு பேருடன் புகுந்தார். அவர்கள் தேரவாதபௌத்தத்திலிருந்து விலகிக் கொண்டனர். அபயகிரி விகாரை, மகாவிகாரைப் பிக்குகள் வெவ்வேறாகினர். தேரவாதத்தில் இருபிளவுகள் தோன்றின என்கிறது மகாவம்சம்.

## 18.2 பதினொரு மன்னர்கள்

மகாவம்சத்தின் 34 ஆவது (XXXIV) அதிகாரம் இலங்கையை ஆட்சிபுரிந்த பதினொரு மன்னர்கள் பற்றி விபரிக்கின்றது. வட்டகாமினியின் மரணத்தின் பின்னர் அவனது வளர்ப்பு மகனான மகாசூலி மகாதீசன் என்பான்



மிகிந்தலை: மிகிந்தலை கண்டகி சைத்தியத்தின் நுழைவாயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோரநாகன் புரட்சி.

அரசனானான். (கி.மு. 17 - கி.மு. 3). பதினான்கு ஆண்டுகள் அமைதியாகவும், நீதியாகவும் அரசாண்டான். பிண்டவாபி, அபயகல், வன்கவததகல், திகாபாகுயகல், ஜலகம முதலான விகாரைகளை அமைத்தான். மகாசூலி மன்னனின் பிற்காலத்தில், வட்டகாமினியின் சொந்த மகனான சோரநாகன் ஒரு புரட்சிக்காரனாக மாறி மன்னனுக்குப் பிரச்சினைகள் தந்தான். அவன் மன்னனாக வந்ததும் தான் புரட்சியாளனாகக் கலகம் செய்த காலத்தில் தனக்கு அடைக்கலம் தராத பதினெட்டு விகாரைகளை இடித்தழித்தான். பன்னிரண்டு ஆண்டுகால ஆட்சிமுடிவில், மகாராணி அனுலாவால் வழங்கப்பட்ட நஞ்சூட்டப்பட்ட உணவை உண்டு மரணமடைந்தான்.

அனுலாவின் களியாட்டம்.

அவனுக்குப் பின்னர் மகாசூலியின் மகனான தீசன் அரசகட்டிலேறினான். சோரநாகனின் மனைவி அனுலா, அரண்மனை வாயிற் காப்போனான சிவா என்பவன் மீது ஏற்பட்ட தணியாத காதலால் தீசனை நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு, சிவாவை அரசனாக்கி, தான் ராணியாக அமர்ந்து கொண்டாள். ஓராண்டும் இரு மாதங்கள் கழிந்ததும், அனுலா தமிழனான வட்டுகன் என்ற நகரத் தச்சன் மீது ஆசை கொண்டு, கணவன் சிவாவை நஞ்சூட்டிக் கொன்று நீக்கிவிட்டு, வட்டுகனை மன்னனாக்கி னாள். அனுலாவின் காமம் இத்துடன் அடங்கிவிடவில்லை. தீசன் என்ற விறகு காவி விற்பவனைக் கண்டு காதலுற்று, வட்டுகனை அதேமுறையில் மேலுலகம் அனுப்பி விட்டு தீசனை மன்னனாக்கி தான் ராணியானாள். பின்னர் நீலியன் என்ற பிராமண அரசகுருவின் மேல் காதல் உண்டாகி தீசனைக் கொன்று நீலியனை மன்னனாக்கி னாள். இறுதியில் அவனையும் கொன்று அனுராதபுர அரியணையில் தானே ராணியாக வீற்றிருந்தாள். அனுலாவின் காமப் பசிக்கு அரண்மனைக் காவலர்களில் முப்பத்திரண்டு பேர் பலியானதாக மகாவம்சம் பெருமைப் படும். அனுலாவினதும் அவள் காதலர்களினதும் ஆட்சி 4 வருடங்கள் 3 மாதங்கள் (கி.பி. 12 - 16) நீடித்தது.

அனுலாவைக் கொன்று ஆட்சியிலிருந்து நீக்கிய மகாசூலியின் இரண்டாவது மகன் குடக்கண்ணதீசன்





பாதிகராஜா.


இருபத்திரண்டு ஆண்டுகள் அரசாண்டான். (கி.பி. 16 - கி.பி. 38). அவனுக்குப்பிறகு அவனது மகனான பாதிக அபயன் (கி.பி. 38 - கி.பி. 66) மன்னனானான். இவனை பாதிகராஜா எனவும் மகாவம்சம் கூறும். அவனுக்குப் பிறகு அவனது இளைய சகோரனான மகாதாடி மகாநாகன் பன்னிரண்டாண்டுகள் அரசாண்டான். (கி.பி. 66 - கி.பி. 78). அம்பத்தல தூபியை இவனே கட்டுவித்தான் என மகாவம்சம் கூறுகிறது.

## 18.3 பன்னிரண்டு மன்னர்கள்

மன்னனைச் சிறைபிடிக்க முயற்சி.

மகாவம்சத்தின் 35 ஆவது (XXXV) அதிகாரத்தில் இலங்கையை ஆட்சி செய்த பன்னிரண்டு மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. மகாதாடி மகாநாகனின் மரணத்தின் பின்னர் ஆமண்டகாமினி அபயன் முடிசூடி, ஒன்பதாண்டுகள் எட்டு மாதங்கள் அரசாண்டான். (கி.பி. 78 - கி.பி. 88) அவனைக் கொன்று அனுராதபுர சிம்மாசனத்தில் அவனது தம்பி கனிராஜானுதீசன் என்பான் அரியணை ஏறினான். அவனுடைய காலத்தில் சேத்திய பர்வத விகாரையில் (மிகிந்தலை) உள்ள உபோசத மண்டபத்தில், நீண்டகாலமாக நடாதிருந்த சமய விழாவொன்றினை மீண்டும் நடாத்த விரும்பிய போது, அங்குள்ள பிக்குகளிடையே இருவித கருத்துநிலை ஏற்பட்டது. விரும்பாத பிக்குகள் அறுபது பேர் அரசனைச் சிறைபிடிக்க

© Dr. K. Kunarasa



அநுராதபுரக்காலச் சிற்பம்: கோபுரந்தாங்கிக் குள்ளன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளாபயன் மன்னனாதல்.

முயன்றனர். அவர்களிடமிருந்து தப்பிய மன்னன், பின்னர் அந்த அறுபது பிக்குகளையும் சிறைபிடித்து, சேத்திய பர்வதத்திலுள்ள கணீரா என்ற செங்குத்துப் பாறையினின் றும் தள்ளி வீழ்த்திக் கொன்றான் என மகாவம்சம் கூறுகிறது. அவனுக்குப் பின்னர் ஆமண்டகாமினி அபயனின் மகன் குளாபயன் ஓராண்டும், அதன் பின் அவனது சகோதரி சிவலி நான்கு மாதங்களும் அரசாண்டனர். குளாபயன், கொனாநதி மருங்கில் சூளகல் விகாரையைக் கட்டுவித்தான்.

சிவலியின்பின் ஆமண்டகாமினியின் மருமகனான இளநாகன் என்பான் அனுராதபுரத்தின் சிம்மாசனத்தில் ஏறினான். அவனது முடிசூட்டுவிழா ஊர்வலம் திஸ்ஸக் குளக்கரையோரமாகச் சென்றபோது, அங்கு குழுமிநின்ற இலம்பகர்ணர்கள் (ஒரு குழுமப்பிரிவு) அங்கு நின்று மன்னனுக்கு மரியாதை செய்யாது தலைநகருக்குச் சென்று விட்டனர். இதனை அவதானித்த மன்னன், இலம்ப கர்ணர் களைத் தண்டிக்கும் நோக்குடன், மகாதூபிக்கு குளக்கரை யூடாகச் செல்கின்ற வீதியை, சண்டாளர்களின் மேற்பார்வை யிலிடுமாறு கட்டளை பிறப்பித்தான். இதனால் அவமானப்

© Dr. K. Kunarasa



**சமாதிப்புத்தர்:**
அநுராதபுர அரும்பொருட் காட்சிச் சாலையிலுள்ள புத்தர்சிலை.





இளநாகன் வெற்றி.

பட்ட இலம்பர்கணர்கள் ஒன்று சேர்ந்து கலகம் செய்து, இளநாகனை கைப்பற்றிச் சிறையிலிட்டு, ஆட்சியைக் கைப் பற்றிக் கொண்டனர். இளநாகன் சிறையிலிருந்து தப்பி மகாதீர்த்தத்தையடைந்து, இந்தியாவுக்குத் தப்பியோடி, அங்கு படையுதவி பெற்று, உருகுணைக்கு வந்து அங்கும் படைகளைத் திரட்டி இலம்பகர்ணர் மீது தண்டெடுந்தான். இருபகுதியினருக்கும் நிகழ்ந்த யுத்தத்தில் இளநாகன் வெற்றி பெற்றான். இலம்பகர்ணத் தலைவர்களைக் கொல்ல எண்ணி யும் அவ்வாறு செய்யாது, தனது தேரின் நுகத்தடியில், இருவரைப்பூட்டி இழுக்குமாறு செய்தான்; இன்னுமிருவரைத் தேரைத் தள்ளி வருமாறு பணித்து நகரத்திற்குள் நுழைந்தான். அரண்மனை வாயிலை அடைந்ததும், அத்தலைவர்களின் தலைகளைத் துண்டித்து விடுமாறு சேவகர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான். தாயின் குறுக்கீட்டால், அவர்களின் மூக்குகளையும் கால் விரல்களையும் அரிந்து நீக்கி தண்டனை வழங்கினான்.



**நாகமன்னன் - காவற்சிலை:**
ஐந்துதலை நாகம் குடைகவிழ்ப்ப நாகமன்னன் - காவற்சிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமகசி தமிழதேவி.

இளநாகனுக்குப் பின்னர் அவனுடைய மகன் சந்தமுகசிவா எட்டாண்டுகளும் ஏழு மாதங்களும் அரசாண்டான். சந்தமுகசிவாவின் பட்டத்து மகசியின் பெயர் தமிழதேவி ஆவாள். இஸ்ஸறசமன விகாரைக்குத் தனது நிலவருமானங்களை தமிழதேவி வழங்கியுள்ளாள். சந்தமுகசிவாவுக்குப் பின்னர் அவனுடைய சகோதரன், யசலாலக தீசன் மணிமுடி தரித்தான். இவன் ஒரு விசித்திர மான வினையான விளையாட்டினைப் புரிந்தான். தன்னைப் போலிருந்த சுபா என்ற வாயிற்காப்போனான அரச ஆடை யணிகளை அணிவித்துத் தன் சிம்மாசனத்திலிருத்தியும் தான் சுபாவின் ஆடைகளை அணிந்து வாயிற் காப்போனாக மாறியும் அரண்மனை அமைச்சர் முதலானோரை ஏமாற்றி வந்தான். ஒரு நாள் சிம்மாசனத்திலிருந்த சுபா, வாயிற்காப் போன் வேடத்திலிருந்த மன்னனைப் பிடித்து சிரச்சேதம் செய்துவிடுமாறு கட்டளையிட்டான். அவ்வாறே நடைபெற்று முடிந்தது. அதன்பின் சுபராஜா என்ற நாமத்தோடு ஆறாண்டுகள் அவன் அரியாசனத்திலிருந்தான். இந்த சுபராஜா, மூன்று விகாரைகளைக் கட்டுவித்துள்ளான்.

சுபராஜா.

சுபராஜாவின் ஆட்சிக்காலத்தில், சோதிடர்கள் ‘அவனுக்குப் பின்னர் வசபன் என்பான் மன்னனாவான்’ என அறிவிக்க, மன்னன் வசபன் என்ற பெயருடைய அனைவரையும் கொன்று விடுமாறு கட்டளை பிறப்பித்தான். இலம்பகர்ண மரபினைச் சேர்ந்த வசபன் என்றொருவன் உத்தரதேசத்தில் (வடபகுதி) தனது மாமனாரான படைத் தளபதி ஒருவனிடம் பணியாற்றி வந்தான். மன்னனின் அறிவித்தலைக் கேட்ட படைத்தளபதி, தனது மருமகனை மன்னனிடம் ஒப்படைப்பதன் மூலம் பரிசில்கள்பெற எண்ணங் கொண்டான். வசபனையும் மனைவி பொத்தாவையும் அழைத்துக் கொண்டு அரசனின் அரண்மனைக்கு ஒருநாள் அதிகாலை வந்தான். வசபனையும் மனைவியையும் வாசலில் நிறுத்திவிட்டு, படைத்தளபதி உள்ளே சென்றதும், மனம் பொறுக்காத படைத்தலைவனின் மனைவி ஆயிரம் பொற்காசுகளை வசபனிடம் கொடுத்து ஓடித்தப்புமாறு துரத்திவிட்டாள். வசபன், மகாவிகாரையில் தஞ்சம் புகுந்து, அங்குள்ள தேரர்களினால் உணவு, உடை அளிக்கப்பட்டு, உருகுணைக்கு அனுப்பப்பட்டான்.அங்கு படைதிரட்டிய

உத்தரதேச வசபன்.





வசபன், சுவராஜாவைபோரில் வெற்றி கொண்டு, மாமனை யும் அழித்தான். பின்னர் தனக்குதவிய பொத்தாவை பட்டமகிஷியாக்கி அரசனாகினான். மீண்டும் ஒரு தடவை இலம்பக்ர்ண வம்சம் அரச கட்டிலேறியது. வசபனின் பின்னர் அவனது மகனான வங்கநாசிகதீசன் அரசனா னான். கொனா நதியருகில் அவன், மகாமான்கல எனும் விகாரையைக் கட்டுவித்தான். அவனுக்குப் பிறகு அவனது மகன் கஜபாகுகாமினி முடிதரித்து இருபத்திரண்டு ஆண்டுகள் ஆண்டான்.

கஜபாகுகாமினி.

கஜபாகு, இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒரு மன்னனாகவுள்ளான். கஜபாகு தன் தாயார் மகாமாதாவின் பெயரால், மதுவிகாரையை அமைப்பித்தான். அபயகிரி விகாரைக்கு உதவும் முகமாக காமினிதிஸ்ஸ குளத்தை அமைத்துக் கொடுத்தான். கஜபாகுவிற்குப் பின்னர் அவனது மாமன், மாகல்லநாகன் ஆறு ஆண்டுகள் ஆட்சி

© Dr. K. Kunarasa



நாகன்:
ஏழுதலை நாகம் குடை விரிக்கும் துவாரபாலகர் - நாகன். இது தூபராமதூபியின் வாயிலிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தான். இவன் ஏழு விகாரைகளைக் கட்டுவித்தான். அவற்றுள் நாகதீபத்தின் சாலிபர்வத விகாரை குறிப்பிடத் தக்கது என்கிறது மகாவம்சம்.

## 18.4 பதின்மூன்று மன்னர்கள்

மகாவம்சத்தின் முப்பத்தாறாவது (XXXVI) அதிகாரம் மேலும் பதின்மூன்று மன்னர்கள் பற்றிய வரலாற்றைக் கூறுகின்றது. மாகல்லநாகனுக்குப் பின்னர் அவனுடைய மகனான பாதிக்கதீசன் அரசனாகிறான்; அவன் ஆட்சி இருபத்திநான்கு வருடங்கள் நீடித்தது. மகாவிகாரையைச் சுற்றி மதில் அமைப்பித்தான். தூபராம விகாரைக்கு உபோதச மண்டபமும் கட்டி வழங்கினான். பாதிக்கதீசனின் பின்னர் அவனது இளைய சகோதரன் கனிஷ்டதீசன் முடி புனைந்தான். பதினெட்டு ஆண்டுகள் ஆண்டான். பல தூபிகளையும் விகாரைகளையும் கட்டுவித்த கனிஷ்ட தீசன், நாகதீபத்திலுள்ள ஆலயத்தையும் புனருத்தாரணம் செய்வித்தான். மகாமேகவனத்திற்குச் சுற்றிவர மதில் கட்டுவித்தான். அவனுக்குப் பின்னர் அவனுடைய மாமன் குலநாகன் மன்னனாகினான். குலநாகனின் தம்பி, குடநாகன் தமையனைக் கொன்று மன்னனானான். அவன் காலத்தில் கடும் பஞ்சம் நிலவியது. குடநாகனின்

© Dr. K. Kunarasa



பத்மநிதி:
அநுராதபுரக்காலக் காவல் தெய்வங்களில் ஒன்று - பத்மநிதி. விஜயவாகு அரண்மனை வாயிலிலுள்ளது.





ஸ்ரீநாகன் மன்னனாதல்.

பட்டத்துமகிஷியின் சகோதரனான சேனாதிபதி ஸ்ரீநாகன் மன்னனுக்கு எதிராகப் புரட்சி செய்து, குடநாகனைத் துரத்திவிட்டு அரசனாகினான். அவன் பின் நாட்டின் மன்னனாக முடிதரித்தவன் ஸ்ரீநாகனின் மகனான தீசன் ஆவான்; பின்னர் வொகாரிக்கதீசன் என அழைக்கப்பட்டான். நாகதீபத்தில் திஸ்ஸ விகாரையைக் கட்டுவித்தான்.

அபயநாகன்.

மன்னனின் இளைய சகோதரனான அபயநாகன் மகாராணியின் கள்ளக்காதலனாவான்; இது வெளியில் தெரியவந்ததும் தப்பி ஓடி, நம்பிக்கையான வீரர்களையும், தமிழ்ப் போர்வீரர்களையும் சேர்த்துக் கொண்டு அனுராதபுரத்திற்கு வந்து வெற்றி கொண்டு முடிதரித்தான். மலைநாட்டிற்குத் தன் மனைவியோடு தப்பியோடிய தமையனைத் துரத்திச் சென்று கொன்றுவிட்டு, அவன் மனைவியோடு திரும்பி வந்தான். அபயனின் மரணத்திற்குப் பிறகு, தமையனின் மகனான ஸ்ரீநாகன் என்பான் அரசனானான். அதன்பின் அவனின் மகனான விஜயகுமாரன் மன்னனாக முடிதரித்தான்.

இலம்பக்கர்ணர்.

மகியங்கனையில் வாழ்ந்திருந்த சங்ஹதீசன், சங்கபோதி, கொடாபயன் ஆகிய மூன்று இலம்பக்கர்ண நண்பர்கள், மன்னனின் சேனையில் பணியாற்ற அனுராதபுரத்திற்கு வந்தனர். திஸ்ஸ குளத்தினருகாக அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தபோது ஒரு அந்தகன், 'இந்த மண்ணினை ஆளப்போகும் மூவர் செல்கிறார்கள்' என உரைத்தான். அவர்கள் அதன்பின்னர் அரசனுடைய பணியில் ஆலோசகர்களாகப் பணியாற்றி, மன்னனை

© Dr. K. Kunarasa



பதுமநிதிகள்:
அநுராதபுரக்காலக் காவற்றெய்வங்கள் பதுமநிதிகள். விஜயவாகு அரண்மனை வாயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ஹதீசன், சங்கபோதி, கொடாபயன்.

எவருமறியாமற் கொன்று, சங்ஹதீசனை மன்னனாக்கினர். அவனை நஞ்சூட்டிக் கொன்று சங்கபோதி, ஸ்ரீசங்கபோதி என்ற நாமத்துடன் அரசனானான். பின்னர் கொடாபயன், சங்கபோதியைத் துரத்திவிட்டு மன்னனாகினான். ஸ்ரீசங்கபோதி கொடாபயனின் படையோடு மோத விரும்பாது நகரின் தென் வாயில் வழியாகக் காட்டிற்குத் தப்பி ஓடினான். அவன் மீண்டும் அரசைப் பெறுவதைத் தடுக்கும் நோக்குடன் கொடாபயன், ஸ்ரீசங்கபோதியின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு பரிசு அளிக்கப்படும் என அறிவித்தான். தனக்கு உணவும் நீருமளித்த உழவனுக்குத் தன் தலையைக் கொண்டுபோய் மன்னனிடம் கொடுத்துப் பரிசு பெறுமாறு கூறித் தன் தலையைத் துண்டித்து வழங்கினானென மகாவம்சம் கூறும். கொடாபயன் தனது ஆட்சிப்பேராக மேகவண்ண அபயன் எனக் கொண்டான். அதன் பின்னர் அவனது மகனான ஜெட்டதீசன் முடிதரித்தான். ஜெட்டதீசன் தனது முடியுரிமையை விரும்பாத அமைச்சர்களையும், ஏனையோரையும் அழித்துள்ள முறை வியப்பானது. தந்தையின் இறுதி மரண ஊர்வலத்தில் ஜெட்டதீசனின் தம்பி முன் செல்ல, அவனைத் தொடர்ந்து இறந்த மன்னனின் சிதை சென்றது. அதன்பின்னர் அமைச்சர்கள் சென்றனர். இறுதியில் ஜெட்டதீசனும் அவனாட்களும் சென்றனர். கோட்டைவாயிலை விட்டு சிதை வெளியேறியதும், வாயில் உடனடியாக மூடப்பட்டு, அமைச்சர்கள் அனைவரும் ஜெட்டதீசனின் வீரர்களால் கொல்லப்பட்டனர். இந்தப் பதின்மூன்று மன்னர்களது ஆட்சி கி.பி. 199 இலிருந்து கி.பி. 325 வரை நிலவியது.

ஜெட்டதீசனின் கொலைவெறி.

## 18.5 மகாசேனன்

மகாவம்சத்தின் 37 வது (XXXVII) இறுதி அதிகாரத்தில் மன்னன் மகாசேனன் குறித்த வரலாறு தரப்பட்டுள்ளது. ஜெட்டதீசன் மரணமானதும், அவனது இளைய சகோதரனான மகாசேனன் மன்னனாகினான். அவனது ஆட்சி 27 வருடங்கள் நீடித்தது. ஜெட்டதீசன் இறந்த செய்தி அறிந்த மகாசேனனின் குருவான சங்கமித்த தேரர் இலங்கைக்கு வந்து, மகாசேனனின் முடிசூட்டு விழாவை நடாத்தி வைத்தார். சங்கமித்ததேரர், மகாசேனனுக்கும்






ஆசிரியர் சங்கமித்த தேரர்.

அவனது தமையன் ஜெட்டதீசனுக்கும் இளம் வயதில் ஆசிரியராக விளங்கியவர். அவர் மகாயானப் பிரிவைச் சேர்ந்தவர். தேரவாத பௌத்த பிரிவினரான மகாவிகாரையின் நடவடிக்கைகளைச் சிதைப்பதான காரியங்களைச் செய்தார் என்கிறது மகாவம்சம். 'அபயகிரி விகாரையைச் சேர்ந்த பிக்குகள், மகாவிகாரைப் பிக்குகளிலும் பார்க்கக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் உடையவர்' என சங்கமித்ததேரர் மன்னனுக்கு இடித்துரைத்தார். மேலும், 'மகாவிகாரையில் வாழ்பவர்கள் (பிக்குகள்) உண்மையான வினயக்கருத்துக்களை போதிப்பவர்களல்லர். நாமே வினயவைச் சரியாக உபதேசிப்பவர்கள்' எனக் கூறி மகாசேனனை தன் வசமாக்கி, 'மகாவிகாரையில் வாழ்கின்ற பிக்கு ஒருவருக்கு எவர் உணவு வழங்குகிறாரோ அவர் நூறு ககவுன் காசுகள் தண்டம் செலுத்த வேண்டியவர்கள்' என மகாசேனன் மூலம் தண்டம் அறவிடும் கட்டளையைப் பிறப்பித்தார். மகாசேனன் மூலம் மகாயானக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு மகாவிகாரை தேரவாதக் கொள்கையினரை வற்புறுத்தினான்.

மகாவிகாரை தூர்ந்தது.

அதனால், மக்களும் மன்னனும் உணவு வழங்காமையால் மகாவிகாரையில் வாழ்ந்த பிக்குகள் மகாவிகாரையைக் கைவிட்டு மலைநாட்டிற்கும், உருகுணைக்கும் சென்றனர். எண்பதாண்டுகளாக மகாவிகாரை எவரும் சஞ்சரிக்காத இடமாக மாறியது. மதிகெட்ட தேரர் சங்கமித்தரின் கருத்துக்களுக்கு மதி கெட்ட மன்னன் சார்பாக விருந்து, மகாவிகாரைப் பிக்குகளை வெளியேற்றினான். சங்கமித்ததேரரின் விசுவாசியான மதிகெட்ட மந்திரியும் அரசனின் நம்பிக்கைக்குரிய ஊழியனுமான சோனாவும், வெட்கம் கெட்ட சில பிக்குகளும் சேர்ந்து ஏழு அடுக்கு மாளிகையும் மகாவிகாரைக்குரியதுமான லோகபாசா



நாணயம்:
அநுராதபுரக்கால நாணயம் ஒன்றின் இரு பக்கங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவிகாரைக் கட்டிடங்கள் உடைக்கப்பட்டன.

லாவை உடைத்து, அப்பொருட்களை அபயகிரி விகாரைக்கு எடுத்துச் சென்றனர். இவ்வாறாக மகாவிகாரைக்குச் சொந்தமான பல கட்டிடங்கள் உடைக்கப்பட்டன. அபயகிரி விகாரையை இவ்வாறு மகாவிகாரைக் கட்டிடங்களில் கொள்ளையிட்ட பொருட்களைக் கொண்டு அழகுபடுத்தினர். பச்சினதீசபர்வத விகாரையிலிருந்த புத்தரின் பெரும் அரிய சிலையை அகற்றி, அழகான அபயகிரி விகாரையில் நிறுவினர். அபயகிரி விகாரைக்காகப் பல புதிய கட்டிடங்களை மகாசேனன் அமைத்துக் கொடுத்தான்.

மேகவண்ணபயன்.

மகாசேனனின் அமைச்சர்களில் ஒருவனும், நண்பனுமான மேகவண்ணபயன், சங்கமித்ததேரரின் கருத்துப்படி மகாவிகாரைக்கு ஏற்படுத்திய அழிவுகளை விரும்பவில்லை. அதனால் அவன் மன்னனுக்கு எதிரான ஒரு கலகக் காரணாக மாறி, மலைநாட்டிற்குச் சென்று, படைதிரட்டிக் கொண்டு துரைதிஸ்ஸ குளத்தருகில் பாசறை அமைத்துத் தங்கினான். மகாசேனனும் யுத்தத்திற்குத் தயாராகிப் பாசறை அமைத்துத் தங்கியிருந்த போது, புரட்சியாளன் மேகவண்ணபயன், தன்னந்தனியே வந்த மன்னனைச் சந்தித்தான். 'நீ ஏன் எனக்கு எதிராகக் கலகம் செய்கிறாய்?' என மன்னன் கேட்க, 'நீங்கள் மகாவிகாரையை அழித்தமையால் தான்' என்றான் மேகவண்ணபயன். 'நான் மகாவிகாரையை மீண்டும் பழையபடி கட்டித் தருவேன். எனது தவற்றை மன்னித்துவிடு' என்றான். இவ்வாறான சமாதானத்தின் பின்னர், மன்னன் அரண்மனை திரும்பினான்.

© Dr. K. Kunarasa



**கருங்கல் மதிலமைப்பு:** அநுராதபுரக்கால மதிலமைப்பு. பாரிய கருங்கற் பாளங்கள் அடுக்கிக் கட்டப்பட்டுள்ளன.





மேகவண்ணபயன் அப்பிரதேசத்திலேயே தங்கி, மகாவிகாரையைத் திருத்திக் கட்டுவதற்கான பொருட்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டான்.


மகாசேனனின் மனைவி.

மகாசேனனின் மனைவியரில் ஒருத்தி மகாவிகாரை அழிக்கப்பட்ட விடயத்தில் மிகவும் நொந்து வேதனைக்குட்பட்டாள். அதனால் நம்பிக்கையான பணியாள் ஒருவனை அமர்த்தி, தூபராமதூபியை உடைப்பதற்காக வந்து கொண்டிருந்த அந்தவன்கண் சங்கமித்தேரரைக் கொல்லுவித்தாள். அவ்வாறே அமைச்சன் சோனாவையும் கொலை செய்வித்தாள். அதன்பின்னர் மேகவண்ணபயன் மகாவிகாரையைத் தான் சேகரித்த கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தித் திருத்திவித்தான். பல பிரிவேனாக் கட்டிடங்களையும் அமைப்பித்தான். அதனால், முன்பிருந்த பிக்குகள் மகாவிகாரையில் வந்து மீண்டும் குடியேறத் தொடங்கினர். மன்னனும் பித்தளையால் வடித்த இரு புத்தர் சிலைகளை, போதிமரக் கோயிலின் மேற்குப் பக்கத்தில் நிறுவினான்.

ஜேத்தவனவிகாரை.

தக்கினராமபிரிவைச் சேர்ந்த நீதியற்ற திஸ்ஸதேரர் என்பான், மகாவிகாரைக்குச் சொந்தமான ஜோதி வனத்தில் ஜேத்தவன விகாரையை மன்னனின் அனுசரனையுடன் கட்டுவித்தான். அதன்பின்னர், ஜேத்தவன விகாரை எல்லைக்குள் வதியும், மகாவிகாரைப் பிக்குகளை அவ்விடங்களை விட்டு வெளியேறுமாறு கேட்டான். அவர்கள் மீண்டும் மகாவிகாரையைக் கைவிட்டு வெளியேற

© Dr. K. Kunarasa



**அப்சரஸ் மங்கை:** அநுராதபுரக்காலச் சிற்பம் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தது. ஒரு சில பிக்குகள் மகாவிகாரையின் எஞ்சிய பகுதிகளில் தங்கியிருந்தனர். இந்த நிலையால், மகா விகாரை மீண்டும் ஒன்பது மாதங்கள் ஆள்நடமாட்டமற்ற பிரதேசமாக மாறியது. பின்னர், இந்தக் கட்டளைக்கு நாம் பணியக் கூடாது என உறுதி பூண்ட மகாவிகாரைப் பிக்குகள், தமது இருப்பிடங்களுக்கு மீண்டு வந்து குடியேறினர்.

மகாவிகாரைக் காணி அபகரிப்பு.

சட்டத்திற்கு மாறாக மகாவிகாரைக்குச் சொந்தமான காணியை அபகரித்து, ஜேத்தவன விகாரையைக் கட்டு வித்த திஸ்ஸதேரருக்கு எதிராக மகாவிகாரைப் பிக்குகள், பிரதம அமைச்சரிடம் முறைப்பாடு செய்தனர். மன்னனின் விருப்பிற்கு மாறாக பிரதம அமைச்சர் விண்ணப்பத்தை விசாரித்து, திஸ்ஸதேரரை ஜேத்தவன விகாரையிலிருந்தும் சங்கத்திலிருந்தும் நீக்கிவிட்டார் என மகாவம்சம் கூறும்.

மகாசேனன் பணிகள்.

மகாசேனன், மணிகிரவிகாரையை அமைத்தான். அத்தோடு வேறு மூன்று விகாரைகளை அவ்விடங்களில் இருந்த இந்துக் கோயில்களை (பிராமணிய கடவுள்) அழித்து விட்டு நிறுவியுள்ளான். கோகர்ணம், எறக்கவில் ஆகியவிடங்களில் இரு விகாரைகளையும், பிராமணன் கலந்தனுக்கு சொந்தமான கிராமத்தில் ஒரு விகாரை யையும் கட்டுவித்துள்ளான். இலங்கை எங்ஙனும் பௌத்த விகாரைகளை, அவ்விடங்களிலிருந்த பௌத்தத்தை நம்பாதவர்களின் கோயில்களைத் தரைமட்டமாக்கி, நிறுவி யுள்ளான். சிவனின் அடையாளங்கள் அனைத்தையும் அவ்விடங்களிலிருந்து அகற்றினான் என மகாவம்ச திக்கா கூறும். காலவேலன் இயக்கக் கோயிலை அகற்றி அவ்விடத்தில் தூபி ஒன்றினை தாபித்தான்.

நீர்பாசனக் குளங்கள்.

பயிர்ச்செய்கை அபிவிருத்திக்காக மகாசேனன், பதினாறு குளங்களைக் கட்டியுள்ளான். மினிஹிர (மின்னே ரியா), ஜலூறா, காணு, மகாமணி, கோகவத்தை, தர்ம ராமா, கும்பலா, வாகனா, இரத்மலகந்தை, திசவட்டகமன, வேலன்கவித்தி, மகாகலைசீரா, மகாதரகலை, கால பாசனம், மொறக்கா ஆகிய பதினாறு நீர்ப்பாசனக்குளங் களை கட்டுவித்தான். மகா கங்கையிலிருந்து பப்பதந்த என்ற பெரும் கால்வாயையும் வெட்டுவித்தான். மகாசேனன் ஆஸ்திகனாகவும், அதேவேளை நாஸ்திகனாகவும்





விளங்கினான் என மகாவம்சம் புலம்பும். மகாசேனன், நற்குணங்கள் வாய்ந்தவனாகவும் அதேவேளை குற்றங்கள் புரிபவனாகவும் விளங்கினான். கெய்கரின் மொழிபெயர்ப்பு மகாவம்சம் குறிப்பிடும்.

# 19. இலங்கை மன்னர்கள் ஆட்சி

## மன்னன் - மக்கள் - மதம்

இலங்கை வரலாற்றில் எல்லாளன் - துட்டகாமினி ஆட்சிக் காலத்தை ஒரு பொற்காலமெனக் குறிப்பிடில், துட்டகாமினிக்கும் பிற்பட்ட மன்னர்களது மகாசேனன் வரையிலான ஆட்சிக்காலம் பல்வேறு குழப்பங்கள் நிறைந்ததாக இருந்துள்ளது. ஆட்சி பீடத்தை அபகரிப்பதற்கான முயற்சிகள், அந்நியரின் தலையீடுகள் என்பன காரணமாக அரசியற் குழப்பங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. பொதுவாக மகாசேனன் தவிர்ந்த ஏனைய மன்னர்கள் மகாவிகாரையை மிகவும் போற்றிப் பணிவர்களாக இருந்துள்ளனர். பௌத்த விகாரையைத் தாபிப்பதும் சமயக் கட்டிடங்களைக் கட்டுவதும் அவர்களது முக்கிய பணிகளாக இருந்துள்ளன. அதேநேரம் பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் நோக்குடன் அவர்கள் கட்டுவித்த நீர்ப்பாச னக் குளங்களையும் கால்வாய்களையும் அவர்களது பணிகளிலிருந்து ஒதுக்கி விடமுடியாது.

வட்டகாமினி அட்சி.

அனுராதபுர ஆட்சியாளர்களில் வலகம்மா என்ற வட்டகாமினி மன்னனுடைய வரலாறு மிகவும் சோகமான தும் முக்கியமானதாகும். புலத்தன், பாகியன், பனைய மாறன், பிளையமாறன், தாடிகன் முதலான ஏழு தமிழ் மன்னர்களிடம் தன் நாட்டைப்பறி கொடுத்து விட்டு ஓட நேர்ந்தது. அனுராதபுரத்தை எல்லாள தமிழ் மன்னனுக்கு 57 ஆண்டுகளுக்குப் பின்னர் ஐந்து தமிழ் மன்னர்கள் ஆண்டுள்ளனர். 14 வருடங்கள் இந்த ஐந்து பேரினதும் ஆட்சியதிகாரம் அனுராதபுரத்தில் நிலவியுள்ளது. வட்டகாமினி மீண்டும் கி.மு. 29ல் மன்னனாகி கி.மு. 17 வரையிலான பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பி லிருந்துள்ளான். அவனுடைய காலத்தில் நாட்டில் பஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரவாதப் பிக்குகளின் வெளியேற்றம்

நிலவியது. தேரவாத பிரிவினையைச் சேர்ந்த பிக்குகள் அனுராதபுரத்திலும், மகிந்தலையிலுமிருந்த விகாரையிலிருந்து வெளியேற நேர்ந்தது. வட்டகாமினியின் காலத்தில் தான் பௌத்த சமயத்தில் தேரவாதம், மகாயானம் என்ற இருபிரிவுகள் தோன்றின. தனது கரந்துறை காலத்தில் தனக்குதவிய மகாயான பௌத்தத்தில் நம்பிக்கையுள்ள மகாதீச தேரருக்காக அபயகிரி விகாரையை வட்டகாமினி கட்டிக் கொடுத்தான். மகாவிகாரையின் தேரவாதக் கருத்துக்களில் முரண்பட்ட பிக்குகள், அபயகிரி விகாரையும் பௌத்த புதுமைக் கருத்துக்களால் கவரப்பட்டு, அபயகிரி விகாரைக்கு வந்தனர். மகாவிகாரையின் கடும் கட்டுப்பாடுகளை விரும்பாத பகலமஸ்திச தேரர் தன் குழுவுடன் மகாவிகாரையைவிட்டு வெளியேறி அபயகிரி விகாரையில் சேர்ந்தமை மிக முக்கியமான நிகழ்வாகப்பின்னர் மாறியது. இரு பௌத்த பிரிவுகளில் ஒன்றுக்கு மகாவிகாரையும், மற்றையதற்கு அபயகிரி விகாரையும் தலைமைப் பீடங்களாக மாறின.

சமய வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டன

துட்டகாமினிக்குப் பிற்பட்ட மன்னர்கள் சிலரால் சமய வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்ட வரலாறுமுள்ளது. தமிழ் மன்னர் எழுவரின் படைக்கு அஞ்சி, வட்டகாமினி தேரில் ஏறித் தப்பியோடும்போது, 'கருஞ்சிங்கம் ஓடுகிறது' எனக் கேலி செய்த கிரி என்பானின் சமணப்பள்ளியைப் பிற்காலத்தில் வட்டகாமினி அரசனாகியதும், அழித்துத் தரைமட்டமாக்கி அவ்விடத்தில் அபயகிரி விகாரையைக் கட்டுவித்துள்ளான். சோரநாகன் என்பான் கரந்துறையும் போது, அவனுக்கு அடைக்கலம் மறுத்த பதினெட்டு புத்த விகாரைகளை அவன் மன்னனாகியதும் அழித்து நிர்மூலமாக்கினான். மகாயான பௌத்தரான சங்கமித்ததேரரின் எண்ணப்படி நடந்த மகாசேனன், காலம் காலமாக பௌத்தத்தின் தலைமைப்பீடமாகக் கருதப்பட்டு வந்த மகாவிகாரையைச் சேர்ந்த கட்டிடங்களை நிர்மூலமாக்கி, மகாவிகாரை பிக்குகளையே துரத்திவிட்ட வரலாறுமுள்ளது. மகாவிகாரைக் காணிக்குள் அத்துமீறி ஜேத்தவன விகாரையைக் கட்ட அனுமதித்துமுள்ளான். மகாவிகாரையின் எல்லையினுள்ளே ஜேத்தவனராமய என்ற விகாரையும், தூபியையும் கட்டி முன்னர் உதவிய திஸ்ஸ





ஜேத்தவன நிக்காயா

தேரருக்கு வழங்கினான். அதனால் இந்த விகாரையை மையமாகக் கொண்டு ஜேத்தவன நிக்காயா என்ற பெயருடன் புதியதொரு பௌத்த பிரிவு தோன்றியது.

இந்து வழிபாட்டிடங்களின் அழிவு

இந்து வழிபாட்டிடங்கள், சிங்கள மன்னர்களால் இடித்தழிக்கப்பட்டு அவ்விடங்களில் பௌத்த தூபிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மகேஜன் (சிவன்) கோவிலிருந்த விடத்தில், தூபராமதூபி அமைக்கப்பட்ட வரலாற்றை ஏற்கனவே கண்டோம். தனக்குத் துணையாக நின்ற காலவேலன் என்ற இயக்கனை அவதாரமாகக் கருதி, பண்டுகாபயனால் கட்டப்பட்ட களாவெல ஆலயத்தை மகாசேனன் அழித்துவிட்டு அதில் தூபியை நிறுவினான். மேலும் கோகர்ணம் (திருகோணமலை), எறக்கவில், கலந்தர் ஆகிய பிரதேசங்களிலுள்ள சைவக் கோயில்களை, குறிப்பாகச் சிவசின்னங்களை அழித்து விகாரைகளை அமைத்துள்ளான். இலங்கை முழுவதும் பரவலாக மகாசேனன் சைவக் கோயில்களை அழித்தே அவ்விடங்களில் பௌத்த தூபிகளை நிறுவியுள்ளான் என மகாவம்சம் மூலம் தெரிந்து கொள்ளலாம். தேவநம்பியதீசன், இசுரு முனியா விகாரையை அமைப்பதற்கு முன் அவ்விடத்திலிருந்த ஈஸ்வரன் கோயிலை மாற்றியமைதான் என அண்மைய கருத்துக்களுள்ளன.

பன்னீராயிரம் சிங்களவர் சிறை

சிங்கள ஆட்சியாளர்களில் இலம்பகர்ணர் என்றொரு குழுமத்தினரின் ஆதிக்கம் இளநாகன் (கி.பி. 95) காலத்தில் ஏற்படலாயிற்று. இளநாகனால் அவமானப் படுத்தப்பட்ட இலம்பக்கர்ணர்கள் ஒன்று கூடி மன்னனைச் சிறையிலிட்டனர்; பின்னர் மன்னனால் தண்டிக்கப்பட்டனர். ஆனால், இலம்பகர்ண அரசபரம்பரை வசபனுடன் (கி.பி. 124) ஆரம்பமாகியது. மகாசேனன் வரை நீடித்தது. இந்த இலம்பகர்ண மன்னருள் கஜபாகு (கி.பி. 171 - 198) முக்கியமானவன். கஜபாகுவின் தந்தை வங்கநாசிகதீசன் காலத்தில், இலங்கைக்குப் படையெடுத்து வந்த சோழ மன்னன், பன்னீராயிரம் சிங்களவர்களை அடிமைகளாகப் பிடித்துச் சென்றான். அதற்குப் பழிவாங்குவதற்காக கஜபாகுமன்னன், சோழநாட்டிற்குப் படையுடன் சென்று அவர்களை மீட்டு வந்ததுடன், மேலதிகமாக இருபத்திநான்காயிரம் தமிழர்களைச் சிறைப்பிடித்துத் திரும்பியதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி விழா

கத் தெரியவருகின்றது. மேலும் கஜபாகு, சேரன் செங் குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பியபோது அந்த விழாவில் கலந்த கொண்டான் என்பதை சிலப்பதிகாரம் கூறுகிறது. இலங்கையில் கண்ணகி வழிபாடு / பத்தினி வழிபாடு பரவ, இந்த மன்னனே காரணமாயினான். அவன் மகாயான அபயகிரி விகாரைக்கு அதிகம் தொண்டும் ஆதரவும் வழங்கியதால் மகாவிகாரையின் மகாவம்ச எழுதுநர், கஜபாகுவிற்குத் தனது நூலில் அதிக முக்கியத்துவம் அளியாது தவிர்த்துள்ளார்.

தன் தலையைக் கொய்து கொடுத்து, பரிசில் பெறுமாறு உணவளித்தவனைக் கோரும், ஸ்ரீசேங்கபோதியின் கதை, ஒரு புராணமரபுக் கதையாகும். யாழ்ப்பாண வைபவமாலை யிலும் இவ்வாறான ஒரு கதையுள்ளது. ஸ்ரீசேங்கபோதி மன்னனின் நீதிநிர்வாகத்தை விளக்குவதற்காக மகாவம்ச ஆசிரியர் இக்கதையைப் புகுத்தியிருக்க வேண்டும். பௌத்த மத ஒழுக்கக் கோட்பாடுகளைத் தவறாது கடைப்பிடித்த மன்னன் இவனாவான்.

மகாயன பௌத்தத்திற்கு அரச அங்கீகாரம்

மகாசேனனின் சமய நடவடிக்கைகள் மகாவிகாரை தேரவாதத்திற்கு உடன்பாடில்லாது, அபயகிரி விகாரை மகாயானத்திற்கு உந்துதலாக விருந்ததால், மகாவம்ச ஆசிரியர் வழமைபோல அவனையும் கவனியாது விட்டார். மகாசேனனின் பொருளாதாரப் பணிகள் கவனத்தில் கொள்ளப்படாது போயின. 'மின்னேரியாத் தெய்வம்' என மக்கள் மகாசேனனைப் போற்றி வருகின்றனர். எனினும் அனுராதபுரத்திலுள்ள மூன்று முக்கிய விகாரைகளில் (ரூவான்வெலி சாயா - மகாதூபி) அபயகிரி, ஜேத்தவன ராம) ஒன்றான ஜேத்தவனராமவை நிறுவியவன் இவனே. சரியோ தவறோ மகாயன பௌத்தம் இலங்கையில் அரச அங்கீகாரம் பெற்ற பிரிவாக நிலைபெற இவனே காரணனாயினன்.

விஜயனும் மகிந்த தேரரும் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே, இங்கு ஆதிக்குடிகளான நாகர், இயக்கர் முதலானோர் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்தச் சுதேச மக்களுக்கு பேசுவதற்கு, எழுதுவதற்கு ஏதோ மொழியும், பேணுவதற்கு ஏதோ ஒரு கலாசாரமும் இருந்திருக்க





ஹெல மொழி

வேண்டும். அந்த மொழி ஹெல (எலு) மொழி என ஆராய்ச்சி யாளர் கூறுகின்றனர். ஆரியரின் வருகையும் மகிந்ததேரரு டனான பௌத்த மத வருகையும் சுதேச மொழியான ஹெலவுடன் பாளி, சமஸ்கிருத மொழிக் கலப்பினைத் தோற்றுவித்தன. தென்னிந்தியத் திராவிட மக்களது வருகை ஹெல மொழியுடன் தமிழ்மொழியைக் கலக்க வைத்தது. அதனால் பௌத்த பிக்குகளால் ஆரம்பதில் பேணப்பட்ட திரிபீடகம், அதனைச் சார்ந்த நூல்கள் என்பன பரம்பரை பரம்பரையாக ஹெல மொழியிலேயே இருந்துள்ளன. மகிந்த தேரராலும் அவரது குழுவினராலும் ஆரியப்பிராமி எழுத்துக்கள் அறிமுகமாயின. அதேபோல திராவிட மக்களது வருகையால் ஆதித்திராவிடபிராமி எழுத்துக்களும் இங்கு பரிச்சயமாகின. இவை அனைத்தும் சிங்கள மொழியின் உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தின. ஆரம்பகால அனுராதபுர மொழிகள் சிங்களப் பிராகிருதமாயும் தமிழாயும் விளங்கியுள்ளன.

தேவநம்பியதீசனிலிருந்து மகாசேனன் வரை

அனுராதபுரக் காலத்தில் தேவநம்பிய தீசனிலிருந்து மகாசேனன் வரையிலான ஆட்சிக்காலந்தான் பிரதான பணிகளாக சமயக் கட்டிடங்களும் நீர்ப்பாசனக் குளங்களும் அமைக்கப்பட்டன. யுத்தங்களும், குழப்பங்களுமில்லாத காலவேளைகளில், மன்னரதும் மக்களதும் பிரதான பணியாக இவை விளங்கின. தேவநம்பியதீசனுக்கு முற்பட்ட காலக் கட்டிடங்கள் களிமண்ணாலும் மரங்களினாலும் அமைக்கப்பட்டன. இம்மன்னனுக்கு பிற்பட்ட காலக் கட்டிடங்கள் கல், செங்கட்டி என்பன கொண்டு அமைக்கப் படலாயின. தூபிகள், ஆராமைகள், போயமனைகள், தியான மண்டபங்கள், தடாகங்கள், வட்டதாகே மனைகள், போதிமனை, சிலா மனை, ஆசன மனை முதலான சமயக்கட்டிடங்களும் அரண்மனைக் கட்டிடங்கள், ஆலோசனை மண்டபங்கள் முதலான அரச கட்டிடங்களும் இக்காலத்தில் அமைக்கப்பட்டன.

மகிந்த தேரருக்கு முன்னரே

மகிந்ததேரர் இலங்கைக்கு வருமுன்பே மகியங்கனைத் தூபி, கிரிகடுசேத்தியத்தூபி (திரியாய்), கல்யாணித்தூபி (களனி) என்பன கட்டப்பட்டிருந்தன எனத் தெரிகிறது. மகியங்கனைத்தூபி புத்தரின் முதல் விஜயத்தின் பின்னரும், கல்யாணித்தூபி புத்தரின் மூன்றாவது வருகையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் அவ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தேவநம்பியதீசன் காலத்தில் கட்டப்பட்ட தூபராம தாதுகோபமே இலங்கை வரலாற்றில் முதன்மை பெறுகிறது. இத்தாதுகோபங்கள் புத்தருடைய அல்லது புத்தரின் தகுதி நிலை பெற்றவர்களின் தாதுச்சின்னங்களை(உடல் சின்னங்கள்) வைத்து அமைக்கப்பட்டுள்ளன. மகிந்தரின் உடல் தாதுவை வைத்துக் கட்டப்பட்ட அம்பஸ்ததூபி (மிகிந்தலை), திஸ்ஸமகாராம சைத்தியம் (மகாகமம்), மங்களமகா சைத்தியம் (சேருவெல) என்பன அனுராதபுர கால ஆரம்ப தூபிகளாம். துட்டகாமினி மன்னனால் புத்தரின் தாதுக்களை வைத்துக் கட்டப்பட்ட மகாதூபி (ருவான்வெலிசாயா), வட்டகாமினி (வலகம்பா) மன்னனால் கட்டப்பட்ட அபயகிரி விகாரை, மகாசேன மன்னனால் கட்டப்பட்ட ஜேத்தவனராம தூபி என்பன இலங்கை வரலாற்றில் முக்கியம் பெறும் தாதுகோபங்கள் ஆகும்; இலங்கையின் பௌத்த மதத்தின் மூன்று பிரிவுகளை இந்த மூன்று சைத்தியங்களும் பிரதிபலித்தன.

பிரதான மூன்று தூபிகள்

வரலாற்றுக்கால ஆரம்பத்தில் பிக்குகளும் பிக்குணிகளும் வசிப்பதற்குக் கற்குகைகளே அமைக்கப்பட்டன; இக்கற்குகைகள் இயற்கையானவையாகவோ, செயற்கையாக அமைத்தனவாகவோ விளங்கின. பல பிரதானிகள் கற்குகைகளைப் பௌத்த துறவிகளுக்காக அமைத்து அவற்றினைத் தானமாக வழங்கியுள்ளமை அவ்வாறான குகைகளிற் பொறிக்கப்பட்டிருக்கும் பிராமியப் பொழிப்புகளிலிருந்து தெரிகிறது. பிற்காலத்தில் இவ்வாறான கற்குகைகளுக்குப் பதிலாக ஆராமைகள் எனப்படும் வதிவிடங்கள் அமைக்கப்பட்டன.

கற்குளங்கள்

பௌத்த துறவிகள் போயா தினங்களில் சமய அனுட்டானங்களைச் செய்வதற்காக அமைக்கப்பட்ட கட்டிடங்கள் போயமனைகள் எனப்பட்டன. மகாவிகாரைப் பிக்குகளுக்காக லோகமகாபாய எனப்படும் ஒன்பது அடுக்கு மாளிகை அவ்வகையினது. ஒவ்வொரு மாடியிலும் நூறு அறைகள் இருந்தன வென்று வந்த வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. பித்தளை முலாம் பூசப்பட்ட ஓடுகளால் இக்கட்டிடம் வேயப்பட்டிருந்தமையால், பித்தளை மாளிகை எனவும் அழைக்கப்பட்டது. இன்று இதன் மேற்பகுதி முற்றாக அழிந்து போய் ஆக ஆயிரத்துக்கு மேற்பட்ட தூண்கள் மாத்திரம் எஞ்சி நிற்கின்றன.





அனுராதபுரதக் காலத்தில் நீரைப் பெறுவதற்கு நதிகளும், குளங்களும், கற்பாறை நீர்க்குளங்களும் உதவின. இவற்றோடு ஆராமைகள், போயமனைகள், விகாரைகள் என்பனவற்றின் தேவைகளுக்காக மன்னர்களால் தடாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனுராதபுரத்திலுள்ள இரட்டைக் கேணியான குட்டன் தடாகம் இவ்வகையில் முக்கியமானதும், கலைத்துவமான கட்டமைப்பைக் கொண்டதுமாகும். அத்தடாகத்தின் காவற் தெய்வமாக ஐந்து தலைநாகம் ஒன்றின் கற்பொழிப்புக் காணப்படுகிறது.

# நிறைவுரை

மகாவம்சத்தின் 1 தொட்டு 37 வரையிலான அதிகாரங்கள் நாக, இயக்க ஆதிக்குடிகளிலிருந்து மகாசேனன் வரையிலான வரலாற்றினைக் கூறுகின்றன. நம்பகமற்ற கட்டுக் கதைகள், புராணக்கதைகள், மரபுவழிக் கதைகள், ஜாதகக் கதைகள் என்பனவற்றுடன் இலங்கை வரலாற்றை விபரித்தாலும், நம்பகமான வரலாறு அதிலில்லை என முற்றாக நிராகரித்து விட முடியாது. இலங்கை வரலாறு மிகமிக ஆதியிலிருந்தே சிங்கள மக்களதும் தமிழ் மக்களதும் சமூக, பொருளாதார, அரசியல் வரலாறாக விளங்கி வருகின்றது. வரையறுக்கப் பட்ட ஒரு ஆள்புல எல்லையின்றி இவ்விரு இன மக்களும் இலங்கை எங்ஙனும் பரவி வாழ்ந்திருக்கிறார்கள். மகா வம்சம் குறிப்பிடும் எண்ணிக்கைகளைப் பார்த்தால் நம்பமுடி யாத சனத்தொகையாக விருக்கிறது. புத்தரின் முதல் விஜயத்தின் போது மகியங்கனை மகாநாகவனத்தில் கூடியிருந்த இயக்கர்களின் எண்ணிக்கை, இரண்டாம் விஜயத்தின் போது மதம் மாறிய நாகர்களின் எண்ணிக்கை (எட்டுக்கோடி), எல்லாளன் படையிலிருப்பதாகக் கூறிய பத்துலட்சம் வீரர்கள், ஒவ்வொரு சமய நிகழ்விலும் கலந்து கொள்வதாகக் கூறும் ஆயிரக்கணக்கான பிக்குகள் முதலானோரின் தொகையை மட்டும் கூட்டில் இலங்கையின் மக்கள் நிலம் தாங்கா

மகாவம்சத்தை முற்றா நிராகரிக்க முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகைத்தொகையாகும்.

மகாவம்சத்தின் விபரணத்தின்படி பெறப்படும் தகவல்கள் இவைதாம். இந்த நாட்டைத் தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் மாறி மாறி ஆளும் உரிமை பெற்றிருக்கிறார்கள். அனுராதபுர சிம்மாசனத்தில் வீற்றிருப்பவன் எவ்வினத்தவனாக விருந்தாலும் அவனே சர்வ அதிகாரம் படைத்தவனாக விளங்கியுள்ளான். அதேவேளை இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் தமிழ்ச்சிற்றரசுகளும் சிங்களச் சிற்றரசுகளும் இருந்துள்ளன. அனுராதபுரத்திலிருந்து விரட்டப்படும் சிங்கள மன்னர்கள் அடைக்கலம் புகுந்து படைதிரட்டும் பிரதேச ஆள்புலமாக உருகுணை விளங்கியுள்ளது. உருகுணை சிற்றரசின் இருப்பாண்மையை அனுராதபுர மன்னர்கள் ஒருபோதும் அழித்துவிட விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இனத்தூய்மை என்பது இலங்கையில் பேணப்படவில்லை. நாகர்களினதும் தென்னிந்தியத் திராவிடர்களினதும் கலப்பாகவும், காலத்திற்குக் காலம் பல்வேறு காரணங்களுடன் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழர்கள், மலையாளிகள், கலிங்கர்கள் என்போரது சேர்வினமாக தமிழ் மக்களுள்ளனர். இயக்கர்கள், ஆரியர்கள், தமிழர்கள் என்போரின் கலப்பு மக்களாகச் சிங்களவர்கள் உள்ளனர். இனத்தூய்மை என்பது இவ்விரு வின மக்களிடமுமில்லை என்பது மறுக்க முடியாது. மொழியால் தம் தனித்துவத்தை இவ்விருவின மக்களும் பேணி வருகின்றனர் எனலாம். அனுராதபுரக் காலத்தில் நாகதீபத்தில் பௌத்தர், பௌத்த விகாரைகள் என்பன சைவ ஆலயங்களோடும் இந்து மக்களுடனும் கலந்திருந்துள்ளன. அதேபோல இந்துமதத்தின் பல்துறைப் பிரிவுகளைப் பின் பற்றிய மக்களும், அவர்தம் ஆலயங்களும் தென்னிலங்கை எங்கும் (இராசரட்டை, உருகுணை) பௌத்த சிங்களவருட னும் பௌத்த விகாரைகளுடனும் 'கலந்திருக்கின்றன. ஆக, மகாவம்சத்தின்படி இந்த நாட்டின் குடியுரிமை, ஆட்சியுரிமை ஏனைய உரிமைகள் அனைத்தும் இவ்விருவின மக்களுக்கு முரியது என்பதில் இரண்டு கருத்திருக்க முடியாது. இந்நாடு தமிழ் மக்களதும் சிங்கள மக்களதும் பாரம்பரிய பூமி என்பது; மகாவம்சம் தரும் செய்தியாகும். ●


© Dr. K. Kunarasa

மிகுந்தலை தூபி (கண்டகி சைத்தியம்)


© Dr. K. Kunarasa

மிகுந்தலை வைத்தியசாலை

A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துகட்டு சைத்தியம்



வெள்ளரசு மரக்கிளை (மகாவிகாரை)

B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



© Dr. K. Kunarasa

கந்தரோடை சமாதித்தூபிகள்



© Dr. K. Kunarasa

தூபராம வட்டதாகே தூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசுருமுனியா (கோயிற் குளத்தோடு கூடிய காட்சி)



மிருசு வெட்டித்தூபி

D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



© Dr. K. Kanatasa

ருவான் வெலிசாயா மாகாதூபி



© Dr. K. Kanatasa


குட்டன் தடாகம்

E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தக்கின தூபி



நுவரவாவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



© Dr. K. Kunarasa

ஜேத்தவனராம தூபி



© Dr. K. Kunarasa

அபயகிரி விகாரை

G

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



© Dr. K. Kunarasa

இசுருமுனியா (காதலர் சிலை) சிவ - சக்தி சிலை



© Dr. K. Kunarasa

நயினாதீவு நாகவிகாரை



32554

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org